Stay Connected with:
Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.

27.°C 26.°C



## முள்ளிவாய்க்கால் முற்றத்தின் சுற்றுச் சுவர் நேற்று தகர்ப்பு

*தமிழக அரசின் உத்தரவை அடுத்து நடவடிக்கை*



யாழ்ப்பாணம், நவ.14
இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்டவர்களின் நினைவாகத் தமிழகம், தஞ்சாவூரில் அமைக்கப்பட்டுள்ள 'முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின்' சுற்றுச் சுவர் நேற்றுப் புதன்கிழமை அதிகாலை 5 மணிக்குத் தமிழக அரசின் உத்தர

21

## யாழ்.பல்கலைக்கழகத்தை 18 ஆம் திகதி ஆரம்பியுங்கள்

*மாணவர் ஒன்றியம் வலியுறுத்தல்*

யாழ்ப்பாணம், நவ.14
எந்தவித காரணங்களும் இன்றி யாழ். பல்கலைக்கழக செயற்பாடுகள் இரு வாரங்களுக்குத் தடைப்படுவதை எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது. எனவே 18 ஆம் திகதி பல்கலைக்கழகக் கல்விச் செயற்பாடுகள் அனைத்தும் ஆரம் பிக்கப்படவேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளது யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்.
இது குறித்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு 11 ஆம் திகதி தொடக்கம் 17 ஆம் திகதி வரை அனைத்துப் பல்கலைக்கழகங்களினதும் கல்விச் செயற்பாடுகளை நிறுத்துமாறு

21

## கமரூனின் வருகை; ஏற்பாட்டுக்குழு யாழ். வந்தது

யாழ்ப்பாணம், நவ. 14
பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு முதல் தடவையாக வருகை தரவுள்ள நிலையில், அவரது பயண மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காக ஐவர் கொண்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணம்

21

# அரசு தடை போடினும் தொடரும் போராட்டம்

## கொழும்பு செல்ல முயன்றவேளை தடுத்து நிறுத்தப்பட்ட காணாமற்போனோரின் உறவினர்கள் நேற்றுச் சூளுரை





யாழ்ப்பாணம், நவ. 14
"நாங்கள் நாடு பிடிக்கப் போராடவில்லை. அரசின் ஆட்சியைக் கவிழ்க்கப் போராடவில்லை. எங்கள் உறவுகளைத் தேடித்தான் போராடுகின்றோம். இந்த அரசு என்னதான் முட்டுக்கட்டை போட்டுத் தடுத்தாலும் எங்கள் போராட்டம் தொடரும்" என்று காணாமற்போனோரின் உறவுகள் 'உதயனிடம்' தெரிவித்தனர்.
கொழும்பில் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப் புறப்பட்டவேளை மதவாச்சியிலும், மன்னாரிலும் காணாமற்போனோரின் உறவுகள் நேற்றுத் தடுத்து நிறுத்தப்பட்டனர். இவர்களைத் தொடர்ந்து பயணிக்க முடியாதவாறு பொலிஸார் தடைபோட்டனர்.
கொழும்பில் பொதுநலவாய மாநாடு இடம்பெறுகையில், சர்வதேசத் தலைவர்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக நேற்றும், இன்றும் அங்கு மனித உரிமைக் கண்காட்சியையும், மெழுகுவர்த்திப் போராட்டத்தையும் நடத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டது. இதில் வடக்கில் காணாமற்போனவர்களின் உறவுகளும் கலந்துகொள்ள இருந்தனர்.
அவர்கள் நேற்று அதிகாலை கொழும்பு நோக்கி பஸ்ஸில்

21

## வன்னியில் பொதுநலவாய பிரதிநிதிகள்

கிளிநொச்சி, நவ.14
பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வதற்கு இலங்கை வந்துள்ள 48 நாடுகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் நேற்றுப் புதன்கிழமை கிளிநொச்சிக்குப் பயணம் மேற்கொண்டனர்.
கொழும்பில் இருந்து இரணைமடு விமான நிலையத்தை வந்தடைந்த இந்தக் குழுவினர் முதலில் கிளிநொச்சி இரணைமடுக் குளத்துக்குச் சென்று அதனைப் பார்வையிட்டதுடன் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி

21


## புலிகளுக்கு அஞ்சலி செய்யவில்லை

கொழும்பு, நவ.14
தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவு கூரும் செயற்பாடுகளில் தமது பிரதிநிதியான தீபக் ஒப்ராய் ஈடுபட்டுள்ளதாக இலங்கை அரசு தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்களைக் கனடா மறுத்துள்ளது.
பொதுநலவாய மாநாட்டில் கனடா சார்பில் பங்குகொள்ள வந்துள்ள நாடாளுமன்றச் செயலர் தீபக் ஒப்ராய் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை வடக்கு மாகாணத்

21

## மக்ரே வடக்குக்கு வர அனுராதபுரத்தில் தடை

*ரயிலை மறித்து ஆர்ப்பாட்டம்*



கொழும்பு, நவ.14
வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொள்வதற்காக கொழும்பில் இருந்து ரயிலில் வந்துகொண்டிருந்த சனல் -4 தொலைக்காட்சித் தயாரிப்பாளர் கெலும் மக்ரே அடங்கிய குழுவினர் அனுராதபுரத்

21

## 'சனல் - 4' மஹிந்தவை நெருங்கியது எப்படி?

கொழும்பு, நவ.14
ஜனாதிபதி மஹிந்தவுக்கு அருகில் பிரிட்டன் சனல் - 4 ஊடகவியலாளர் எப்படிச்சென்றார்? என்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.
ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவே இந்த

21

## வலி.வடக்கு போராட்டத்தை குழப்புவதற்கு முயற்சிகள்

### ஆயினும் மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்பு

யாழ்ப்பாணம், நவ. 14
வலி.வடக்கு மக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தில் கலந்து கொள்ளப் புறப்பட்ட மக்கள் மீதும், போராட்டத்தில் கலந்து கொண்டு விட்டுத் திரும்பிய மக்கள் மீதும் புலனாய்வாளர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
இருப்பினும் நேற்று இரண்டாவது நாளாகவும் வலி. வடக்கு மக்களின் உணவு தவிர்ப்புப் போராட்டம் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது. வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இந்தப் போராட்டத்தில் பங்கெடுத்திருந்தார்.
வலி.வடக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள 24 கிராம சேவை

21

## மினிபஸ் ஓட்டோ மோதியதில் ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், நவ.14

உள்ளூர் சேவையில் ஈடுபடும் மினிபஸ் ஓட்டோவை மோதிவிட்டுத் தப்பிச் சென்றது. ஓட்டோவில் பயணித்தவர் காயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டார்.

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத் தெருவில் நேற்று மதியம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் நுவரெலியாவைச் சேர்ந்த அ.சிவலிங்கம் (வயது - 55) என்பவரே காயமடைந்தார். யாழ்.நகரில் தனியார் கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த அவர் மதிய நேர உணவுக்காக ஓட்டோவில் சென்றுகொண்டிருந்த போது விபத்து இடம்பெற்றதாகத் தெரிவித்தார்.

மினிபஸ் தப்பிச் சென்றுவிட்டது. ஓட்டோவும் சேதமடைந்துள்ளது. பொலிஸார் விசாரணை முன்னெடுத்துள்ளனர். (ஜ-4)

## சாரணர் அபிவிருத்தி; கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ.14

வட மாகாண சாரணர் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் ஒன்று வட மாகாண கல்வி அமைச்சர் தலைமையில் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மூன்று உதவி மாவட்ட ஆணையாளர்கள் அல்லது மூன்று முக்கிய பதவிகளில் கடமையாற்றும் சாரண அங்கத்தவர்கள் கலந்துகொள்ள வேண்டுமென உதவி மாவட்ட ஆணையாளர் வை.கேதீசன் அறிவித்துள்ளார். (க)

## நீரிழிவு தின சிறப்பு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.14

உலக நீரிழிவு நோய் தினத்தையொட்டி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் இன்று காலை 8 மணி தொடக்கம் நீரிழிவுநோய் தொடர்பான பல்வேறு செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

வைத்தியசாலை பொது மருத்துவ நிபுணர் தி.சிறிதரன் தலைமையில் நீரிழிவு நோயாளருக்கான கருத்தரங்கும் அறிவூட்டல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன. சாவகச்சேரி வைத்தியசாலை நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவின் ஏற்பாட்டில் நடத்தப்படவுள்ள செயற்பாடுகளில் நீரிழிவு நோயாளி பயன்படுத்தக்கூடிய உணவு வகைகள் பற்றிய விழிப்புணர்வுச் சொற்பொழிவு நடத்தப்படுவதுடன் உணவு வகைகளும் நோயாளர்களுக்கு வழங்கப்படவுள்ளன. (ஜ-9)

# வடமாகாண ஆளுநரின் கருத்துக்கு மாகாண சபை பதில் கூறவேண்டும்

### மாவை சேனாதிராஜா தெரிவிப்பு


யாழ்ப்பாணம், நவ. 14

வடக்கு ஆளுநரின் மீள்குடியேற்றம் தொடர்பிலான கருத்துக்கு வடக்கு மாகாணசபை பொறுப்புச் சொல்ல வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா தெரிவித்தார்.

வடக்கு மாகாணசபையின் அமர்வில் முதன்மை உரையாற்றிய வடக்கு ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வட மாகாணத்தில் மீள் குடியமர்வு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். இந்த நிலையில் வலி. வடக்கு மக்கள் நடத்தி வரும் வாழ்வுரிமைப் போராட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய நடாளுமன்ற உறுப்பினர்.

வலி.வடக்கில் மாத்திரம் 24 கிராம சேவையாளர் பிரிவுகளில் மக்கள் இன்னமு மீள் குடியமர்த்தப்படவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் வடக்கு ஆளுநர் இவ்வாறு தெரிவித்திருப்பதானது உண்மையை மறைக்கும்



செயல். இதற்கு மக்களால் தேர்வு செய்யப் பட்ட வடக்கு மாகாணசபையும் பொறுப்புக்கூற வேண்டும் - என்றார். (ஜ-5)

# தீருவில் பூங்கா காணியில் இராணுவம் மணல் அகழ்வு

### தடுத்து நிறுத்துமாறு மக்கள் கோரிக்கை

வடமராட்சி, நவ.14

வல்வெட்டித்துறை தீருவில் பூங்காவில் இருந்து படையினர் அத்துமீறி மண் அகழும் பணியில் ஈடுபட்டு வருவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

1989ஆம் ஆண்டில் வல்வெட்டித்துறை தீருவில் பொதுப் பூங்கா அமைக்கப்பட்டிருந்த இடத்தில் அதனைப் புனரமைப்புச் செய்வதற்கு வல்வெட்டித்துறை நகர சபை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தபோது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் குறித்த நிலப்பரப்பு முழுவதும் தமக்கு சொந்தமாக்கப்பட வேண்டும் என்று கோரி பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இதனால் பூங்கா அமைக்கும் பணி நகர சபையால் கைவிடப்பட்டது. இச் சூழ்நிலையில் கடந்த சில நாள்களாக அப்பகுதியில் மண் அகழும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக அப் பகுதி மக்களால் நகர சபை உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதை அடுத்து நகர சபை உறுப்பினர்களால் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற போது முறைப்பாட்டை ஏற்க அவர்கள் மறுத்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனை அடுத்து நகரசபை உறுப்பினர்கள் நேரடியாகச் சென்று மண் அகழ்வைத் தடுக்க முற்பட்டபோது இரு தரப்பினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை தீருவில் பொதுப் பூங்காவின் சர்ச்சை தொடர்பாக பருத்தித்துறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்து முதலாவது விசாரணை இடம்பெற்ற அன்று இரவு "தீருவில் பொதுப் பூங்கா" என்ற பெயர்ப்பலகை இனந்தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ஜ-400)

# மாணவர்களை வழிமறித்து சீருடையினர் சில்மிசம்

யாழ்ப்பாணம், நவ. 14

மாவை கலட்டிப் பகுதியில் பாடசாலைக்குச் சென்ற மாணவிகளை மறித்த சீருடையினர் ஆபாசமாக நடந்து கொண்டார்.

இதனையடுத்து பாடசாலை மாணவிகள் அந்தப் பகுதியிலிருந்து சென்று பெற்றோருக்கு தகவல் வழங்கியதையடுத்து, அவர்கள் திரண்டதால் அந்தப் பகுதியில் நேற்றுக் காலை பதற்றம் தோன்றியது.

மாவை கலட்டியைச் சேர்ந்த பாடசாலை மாணவிகள், நகுலேஸ்வராப் பாடசாலைக்கு வழமை போன்று சென்று கொண்டிருந்தனர். அப்போது அந்தப் பகுதியில் சிவில் உடையில் நின்றிருந்த சீருடையினர் தாம் அணிந்திருந்த

> “ சிவில் உடையில் நின்றிருந்த சீருடையினர் தாம் அணிந்திருந்து ஆடைகளைக் களைந்து மாணவிகளை அச்சுறுத்தியுள்ளனர்.

ஆடைகளைக் களைந்து மாணவிகளை அச்சுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து மாணவிகள் அந்தப் பிரதேசத்திலிருந்து தப்பித்துச் சென்று பெற்றோருக்கு நடந்த சம்பவத்தை தெரிவித்துள்ளனர். இதனால் கோபமடைந்த பெற்றோர்கள் சீருடையினருடன் வாக்குவாதப்பட்டுள்ளனர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் தோன்றியது. (ஜ-5)

## அனர்த்த முகாமை: நூல் வெளியீடும் · சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம், நவ.14

அனர்த்த முகாமைத்துவத்துக்கு ஓர் அறிமுகம் என்ற நூல் வெளியீடும், அனர்த்த பாதுகாப்புக் கல்வி என்ற இரு மாதகால பயிற்சி நெறியை நிறைவு செய்த முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று மாலை 3 மணிக்கு கோப்பாய் தேசியக் கல்வியியல் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

அனர்த்த பாதுகாப்புக் கல்வி மற்றும் பயிற்சி நிலையம், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ அலகு என்பன இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளதாக யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் ச.ரவி தெரிவித்தார். (ஜ-5)

## ‘டிராக்டர்’சில்லில் சிக்கி ஒருவர் சாவு

கிளிநொச்சி, நவ.14

உழவு இயந்திரச் சில்லில் நசியுண்டு 7 பிள்ளைகளின் தந்தை ஒருவர் உயிரிழந்தார். இந்த சம்பவம் நேற்றுப் புதன்கிழமை மாலை கிளிநொச்சி பிரமந்தனாறுப் பகுதியில் இடம்பெற்றது.

8 ஆம் வாய்க்கால் பிரமந்தனாறைச் சேர்ந்த சின்னத்துரை இராஜலிங்கம் (வயது-50) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவராவார். சடலம் மருத்துவ பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-6-400)

# உரும்பிராயில் நேற்று டெங்கு விழிப்புணர்வு

யாழ்ப்பாணம், நவ.14

உரும்பிராய் சிவகுல வீதியில் டெங்கு நோய்த் தாக்கம் இனங்காணப்பட்டதை அடுத்து சுகாதாரப் பகுதியினர் இப் பிரதேசத்தில் விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இந்தப் பகுதியில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதனை அடுத்து சுகாதாரப் பகுதியினர் இந்தப் பகுதிக்குச் சென்று விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் குடியிருப்புக்களின் சுற்றாடல்களையும் பார்வையிட்டனர்.

இப் பகுதியில் டெங்குத் தாக்கத்தை ஒழிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (த-17)

# தமிழக எதிர்ப்பையும் மீறி கொழும்பு வந்தார் குர்ஷித்

கொழும்பு, நவ.14

தமிழகத்தின் கடும் எதிர்ப்பையும் மீறி, இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வதற்காக இந்திய வெளிவிவகார அமைச்சர் சல்மன் குர்ஷித் நேற்று கொழும்பு வந்தடைந்தார்.

நேற்று முற்பகல் ஒரு மணியளவில் இவர் தனது குழுவினருடன் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கினார்.

டில்லியில் இருந்து தனி விமானம் மூலம் வந்தடைந்த சல்மான் குர்ஷித் உள்ளிட்ட குழுவினர், இலங்கையில் நான்கு நள்கள் தங்கியிருப்பர் எனத் தெரியவந்துள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா சார்பில் யாரும் கலந்துகொள்ளக் கூடாது என மத்திய அரசை வலியுறுத்தி, தமிழக சட்ட

> “ குர்ஷித் உள்ளிட்ட குழுவினர், இலங்கையில் நான்கு நள்கள் தங்கியிருப் பர்

சபையில் நேற்றுமுன்தினம் மீண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ள நிலையிலும், குர்சித் கொழும்பு வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (13)



பொதுநல வாய மாநாட்டுக்காக இலங்கை வந்துள்ள வெளிநாட்டுப் பிரதிநிதிகள் 48 பேர் நேற்று கிளிநொசிக்கு பயணம் மேற்கொண்டனர். இவர்களுக்கு கிளிநொச்சி மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள பிரதிப் பணிப்பாளர் சுதாகரன் குடிதண்ணீர் திட்டம்குறித்து விளக்கம் அளிக்கிறார். (து-6)

# உயிரையும் கொடுப்பேன்

யாழ்ப்பாணம், நவ.14

‘உயிரைக் கொடுத்தாவது முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை பாதுகாப்பேன். தமிழர்கள் எப்போதும் விழ விழ எழுபவர்களே’ என்று உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ.நெடுமாறன் ‘உதயனு’க்குத் தெரிவித்தார்.

தஞ்சையில் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றம் இடிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் ‘உதயன்’ அவரிடம் வினாவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் இடித்தழிக்கப்பட்டுள்ள நடவடிக்கையானது தமிழகத் தமிழர்களை மட்டுமல்ல உலகத் தமிழர்களையும் கொதிப்படைய வைத்துள்ளது. தமிழக அரசின் அனுமதியைப் பெற்றே கடந்த 3 வருடங்களாக நாம் இதன் நிர்மாணப் பணிகளை மேற்கொண்டிருந்தோம். தமிழக அரசுதான் சட்டவிரோதமாக இடிக்கின்றது. இதை எதிர்த்து நீதிமன்றம் செல்லவுள்ளோம். எனது உயிரைக் கொடுத்தாவது முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தைப் பாதுகாப்பேன். கைதுகளும், அச்சுறுத்தல்களும் எம்மை ஒன்றும் செய்யப்போவதில்லை - என்றார். (தீ-5)

## நண்டுகளைக் காக்க வவுனியாவில் மாநாடு

வலி.தென்மேற்கு, நவ .14
வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டிக் கொடுக்கும் நீலக்கால் நண்டுகளைப் பாதுகாப்புடன் அதன் உற்பத்தியையும் அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுத்துள்ள நெதர்லாந்து நிறுவனம் இது சம்பந்தமாக ஆய்வு மாநாட்டை நடத்த முன்வந்துள்ளது.
எதிர்வரும் 16,17 ஆகிய திகதிகளில் வவுனியாவிலுள்ள நெல்லிக்கோட்டை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த ஆய்வு மாநாட்டில் யாழ்.மாவட்ட கூட்டுறவு கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனத் தலைவர், யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் உட்பட வடகிழக்கு மாகாணங்களிலுள்ள கடற்றொழில் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.
கடற்றொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் சின்னக் கண் வலைகளையும் தங்கூசி வலைகளையும் பயன்படுத்துவதால் சின்ன நீலக்கால் நண்டுகளும் பிடிபடுகின்றன. இதனால் நண்டின் உற்பத்தியில் பெரியளவில் பாதிப்பு ஏற்படுகின்றது.
இவற்றைக்கருத்தில்கொண்டு இதற்கு மாற்றீடான முறையில் வலைகளைப் பயன்படுத்துவது தொடர்பில் மாநாட்டில் ஆராயப்படவுள்ளது. (வ-115)



# இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு

# யாழில் சனியன்று தொழிற்சந்தை

## வருகின்றன உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள்

யாழ்ப்பாணம், நவ.14
யாழ்.மாவட்டச் செயலகத்தின் மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களப் பிரிவின் ஏற்பாட்டில் நாளை மறுதினம் சனிக்கிழமை மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு யாழ்.நகரில் இடம்பெறவுள்ளது.
யாழ்.மாவட்டத்தில் வேலை வாய்ப்பு இல்லாதிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கான வேலைவாய்ப்புக்கள் மற்றும் தொழிற் பயிற்சி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த தொழிற் சந்தை சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறும்.
தொழிற் சந்தை நிகழ்வில் உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் வெற்றிடங்களுக்கான ஆளணியினைத் தேர்வு செய்வதற்காக பல நிறுவனங்கள்இங்குவருகை தரவுள்ளன.
அரச, தனியார் துறைகளைச் சேர்ந்த உள்நாட்டு மற்றும்வெளிநாட்டுவேலை வாய்ப்பு நிறுவனங்கள், ஆடைத் தொழிற்சாலைகள், தொழிற் பயிற்சி அதிகார சபை, உயர் தொழில் நுட்ப நிறுவனம், கார்கில்ஸ், காப்புறுதித் துறை நிறுவனங்கள், ஹோட்டல்கள், பாதுகாப்பு சேவை நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், கணினி நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தி நிறுவனங்களும் வருகை தரவுள்ளன.
எனவே தொழில் வாய்ப்புக்காகக் காத்திருக்கும் அனைவரும் இந்த அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாது உரிய நேரத்தில் தங்கள் சுயவிவரக்கோவை மற்றும் ஆவணங்களுடன் பங்குபற்றி பொருத்தமான வேலை வாய்ப்புக்கள், தொழிற் பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்று பயனடையுமாறு கேட்கப்படுகின்றனர்.
இந்தச் சேவையினூடாக தங்களுக்கான ஆளணியினரைப் பெற்றுக்கொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் மேலதிக விவரங்களைப் பெற விரும்புவோர் 021 221 9359 என்ற அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.அரச செயலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-10)

## மாற்றுவலுவுள்ளோர் சம்மேளனம் ஆரம்பம்

### கிளிநொச்சியில் இன்று

கிளிநொச்சி, நவ.14
கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள மாற்றுவலுவுள்ளோர் தொடர்பான வேலைத் திட்டங்களை வினைத்திறனுடன் முன்னெடுப்பதற்காக மாவட்ட மாற்றுவலுவுள்ளோர் சம்மேளனம் ஆரம்பிக்கப்படவுள்ளது.
மாவட்டத்தில் உள்ள அரச துறை நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களை இணைத்து சம்மேளனம் உருவாக்கப்படவுள்ளது. சம்மேளன ஆரம்பநிகழ்வு இன்று வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு மாவட்டச் செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.
கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறும் ஆரம்ப நிகழ்வில் பிரதேச செயலர்கள், சமூக சேவைகள் அலுவலர்கள் தொடர்புடைய அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகள், மாற்றுவலுவுள்ளோர் மாவட்ட மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அழைக்கப்பட்டுள்ளனர். (வ-9)

## மாநகர சபை எதிரணியில் தங்கராஜசிங்கம்

யாழ்ப்பாணம், நவ. 14
யாழ்.மாநகர சபையின் எதிரணி உறுப்பினராக கந்தையா தங்கராஜசிங்கம் நியமிக்கப்பட்டு நேற்று தனது பதவியை பொறுப்பேற்றுக் கொண்டார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பாக யாழ்.மாநகர சபையில் அங்கம் வகித்த மு.றெமீடியஸ் தனது பதவியில் இருந்து விலகியதை அடுத்து இந்த இடத்துக்கு தங்கராஜசிங்கம் நியமிக்கப்பட்டார்.
இதேவேளை நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கூட்டம் முடிந்ததா இல்லையா என்று சபை உறுப்பினர்களிடையே குழப்பம் ஏற்பட்டது. முடிந்து விட்டதாக சில உறுப்பினர்கள் வெளியேறிய போது சிலர் முடியவில்லை என்று சத்தமிட்டனர். புதிய உறுப்பினர் வந்தபோதும் அவருக்கு உரிய கௌரவம் அளிக்கப்படவில்லை என உறுப்பினர்கள் கண்டனம் தெரிவிக்க, கூட்டம் முடிவடைந்ததாக செயலாளர் திடீரென அறிவிப்புச் செய்தார். (ஐ-7)

## நிதி பற்றாக்குறையில் கட்டடப் பணி முடக்கம்





யாழ்ப்பாணம், நவ. 14
தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்துக்கு நிர்மாணிக்கப்பட்ட மாடிக் கட்டடப் பணிகள் நிதியின்மையால் இடைநிறுத்தப்பட்டுள்ளன.
இரண்டு மாடிக் கட்டடங்களுடன் மூன்று தளங்களைக் கொண்டதாக கட்டடம் அமைக்க கட்டம் கட்டமாக மாகாணக் கல்வி அமைச்சால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது.
கட்டடத்தின் தளப் பகுதிப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு அலுவலகம் இயங்கி வருகிறது. முதலாவது மாடிக் கட்டடப் பணிகளுக்கு கடந்த வருடம் ஒதுக்கப்பட்ட 6.8 மில்லியன் ரூபாவுக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு பூர்த்தியடையாத நிலையில் கட்டடம் காணப்படுகின்றது.
இந்தக் கட்டடத்தின் மிகுதி வேலையைப் பூர்த்திசெய்ய இன்னும் 8 மில்லியன் ரூபா தேவையென அறியப்படுகிறது.
இதனை விட இரண்டாவது மாடிக்கான வேலை இன்னும்ஆரம்பிக்கப்படவில்லை. தளப் பகுதி மட்டுமே இயங்குவதால் பெரும் இடநெருக்கடிக்கு மத்தியில் 100 இற்கு மேற்பட்ட உத்தியோகத்தர்கள் கடமை புரிந்து வருகின்றனர். (வ)

## மன்னாரில் நாளை மறுதினம் இடம்பெறும் தொழிற்சந்தை



மன்னார், நவ.14
மன்னாரில் நாளை மறுதினம் தொழில் சந்தை இடம்பெறவுள்ளது.
மனிதவலு மற்றும் வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையின் கீழ் இளைஞர்களுக்கான வாய்ப்புக்களை இலகு படுத்தும் பொருட்டு இந்தத் தொழிற் சந்தை மன்னாரில் இடம்பெறவுள்ளது.
மனிதவலு வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் பணிகள் மன்னார் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக தொழிற்சந்தை இடம்பெறுகின்றது.
உற்பத்தித் திறன் மேம்பாட்டு அமைச்சின் கீழ் இயங்கும் மனிதவலு, வேலை வாய்ப்புத் திணைக்களம் நாடளாவிய ரீதியில் உள்ள மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்கள் மூலமாகத் தனது வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.
இந்த நிலையில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இயங்கிவரும் மனித வலு அபிவிருத்திப் பிரிவு மாவட்டச் செயலகத்துடன் இணைந்து மனித வலு, வேலை வாய்ப்புத் திணைக்களத்தின் அனுசரணையுடன் மேற்படி தொழில் சந்தையை ஏற்பாடு செய்துள்ளது.
மன்னார் முருங்கன் மகா வித்தியாலயத்தில் நாளை மறுதினம் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரையில் தொழிற் சந்தை இடம்பெறவுள்ளது.
மேற்படி தொழிற்சந்தையில் தொழில், தொழில் பயிற்சி, புத்தாக்கம் மற்றும் சுயதொழில் முயற்சிகளை காட்சிப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக மாவட்ட மனித வலு அபிவிருத்திப் பிரிவு தெரிவித்துள்ளது. (க-ரி)

## டெங்கு ஒழிப்பு செயற்பாட்டை தொடர்ந்து முன்னெடுக்கவும்

### உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவுறுத்து

நாட்டில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்து வருவதால் அதனைக் கட்டுப்படுத்தும் செயற்றிட்டங்களைத் தொடர்ந்து முன்னெடுக்குமாறு உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு சகல உள்ளூராட்சி சபைகளுக்கும் அறிவித்துள்ளது.
இந்த வருடம் கடந்த செப்ரெம்பர் வரையான காலப் பகுதியில் 24 ஆயிரத்து 224 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.
உள்ளூராட்சி சபைகள் டெங்கு நோயை ஒழிப்பதற்குரிய வேலைத்திட்டங்களை துரிதமாக செயற்படுத்துவதற்கு தங்களது அதிகார எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உட்பட ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் பொது மக்களையும்தொடர்புபடுத்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுமாறு அமைச்சின் செயலாளர் ஆர்.ஏ.ஏ.கே.ரணவக்க அனைத்து உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அறிவித்துள்ளார். (வ-9)

## தேவை

H. VECHILE DRIVER தேவை.
தொடர்பு : பலாலி வீதி, கோண்டாவில் சந்தி. 077 7890398

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்
12
.
05
.
1932

அமரர்
**கந்தப்பிள்ளை இரத்தினம்**
திதி : 14.11.2013

விண்ணில்
26
.
10
.
2012


ஆனைமுகன் அடி சேர்ந்து
ஆண்டொன்று ஆனதுவோ
தாண்டிடும் கால வாழ்வினில்
தந்தையே உம் நினைவுடன் என்றும் நாம்

பொல்வத்தை, இளவாலை.
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### குட்டித்தம்பி சதாசிவம்

**(அரசாங்க கட்டட ஒப்பந்தகாரரும், சிவம் Transport உரிமையாளரும்)**



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி சதாசிவம் நேற்று (13.11.2013) புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரி யின் அன்புக் கண வரும் சதானந்தஈஸ்வரி, சிவகுமாரி, சிவகுமார் (ஜேர்மனி), சூரிய குமார் (ஜேர்மனி), கமலகுமார் (ஜேர்மனி), ஆகியோரின் அன்புத் தந்தையும் இராஜகுலேந்திரன், சொர்ணலிங்கம் காந்தவதனி (ஜேர்மனி), பிருதுவி (ஜேர்மனி), ஜீவகன் (பிரான்ஸ்), ஜீவிதன், ராஜன், நேசன், உமா ஆகியோரின் மாமனும் காலஞ் சென்றவர் களான கார்த்திகேசு, பூமணி, கந்தசாமி, கனகசபை மற்றும் சுப்பையா, சின்னத்தம்பி (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுவாமி நாதன் காலஞ்சென்ற துரைராஜா மற்றும் தனபாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் துஸ்யந்தி - முருகதாஸ், துஸ்யந்தன் -சோபா(ஜேர்மனி) , கஜேந்தி - சுரேன் குணசொர்ணா - தரன் லக்ஸ்மன், யாழினி, தர்சினி, துஸ்யவேணி, சஞ்ஜீ (ஜேர்மனி), சாரங்கன் (ஜேர்மனி), சாரங்கி (ஜேர்மனி), புவிஷா (ஜேர்மனி), அங்கீஷன் (ஜேர்மனி), கபீஷன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப்பேரனும் றபீஷன், ஷான், ஆராதனா, ஆரத்தியா, சுரஜித் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2013) வியாழக்கிழமை பி.ப. 2 மணியளிவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சந்தையடி ஒழுங்கை, மானிப்பாய்.
குடும்பத்தினர்
(40123)(8.14)

### வலி. கிழக்கில் 5 வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,நவ.14

வலி. கிழக்குப் பிரதேசத்தில் உள்ள ஐந்து வீதிகள் 'நெல்சிப்' திட்டத்தின் கீழ் புனரமைக்கப்படவுள்ளன என்று சபையில் தலைவர் அ. உதயகுமார் தெரிவித்தார்.

இது குறித்த அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த வீதிகளைப் புனரமைப்பதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்ட வேளை அரசியல் காரணங்களினால் அதற்கு அனுமதி மறுக்கப் பட்டது.

தற்போது வடக்கு மாகாண சபைத் தேர்தலுக்குப் பின்னர் இந்த விதிகளைப் புனரமைப்பதற்கு அனுமதி கிடைத்துள்ளது. இதனை அடுத்து வீதிப் புனரமைப்பை விரைவாக மேற்கொள்ள சபை ஏகமனதாக தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

இதனை அடுத்து இந்த. வீதிகள் விரைவில் புனரமைப்பு செய்யப்படவுள்ளன. இதற்கான ஏற்பாடுகளை வலி. கிழக்கு பிரதேச சபை மேற்கொண்டுள்ளது.

கோப்பாய் இலகடி வீதி, உரும்பிராய், மயானவீதி, அச்செழு பேபிபுரம் இணைப்பு வீதி, அச்சுவேலி பயிற்றோலை வீதி மற்றும் உரும்பிராய் வாகையடி வீதி ஆகியனவே புனரமைக்கப்படவுள்ளன. (கு-17)

உதயன்
advt@uthayan.com

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**2013 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்ற**
செல்வன் **முகுந்தன் சவின்சன்**
அவர்களையும் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

சி. ராஜ்குமார் - 127 இ. அனிற்றன் - 101
சு. திலக்ஷிகா - 110 உ. விதுசன் - 101
சி. விது - 105 சு. றொபேட்வின்சன் - 100

ஆகிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு இவர்களது வெற்றிக்கு உழைத்த பாடசாலைச் சமூகத்தினர் யாவரையும் சிரம் தாழ்த்தி நன்றி கூறிப் பாராட்டுகின்றோம்.

யா/மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்.
ஆரம்பப்பிரிவு மாணவர்கள், பெற்றோர்கள்.

## கண்ணீர் அஞ்சலி



நடனத்துறை விரிவுரையாளர்
திருமதி ரஜிதா ராகவனின் கணவர்
**சிவகுமார் ராகவனின்**
திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தலைவர், விரிவுரையாளர்கள், யாழ். பல்கலைக்கழக இசைத்துறை.

## துயர் பகிர்கின்றோம்



எமது பாடசாலை கணித ஆசிரியர்
**திரு. சி. தினேஸ்** அவர்களின் அன்பு
அண்ணன்
**சிவகுமார் ராகவன்**
அவர்கள் 13.11.2013 அன்று இறைபதம் அடைந்துள்ளார் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அவரின் திடீர் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்குமெமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள். கிளி/ ஞானிமடம் அ.த.க. பாடசாலை,
(40110)(8.14)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை சுப்பிரமணியம்

**( ஓய்வு பெற்ற இலங்கை மின்சாரசபை ஊழியர்)**



கல்வயலைப் பிறப்பிடமாகவும், நுணாவில் சந்தி, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் நேற்று (13.11.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் மூத்த புதல்வரும் பீதாம்பரத்தின் (ஜேர்மனி) அன்புச் சகோதரனும் பத்மாவதியின் அன்புக் கணவரும் குமுதராணி ( கனடா), சிவராஜா (கனடா), சுதா ராணி (லண்டன்), சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் யோகேஸ்வரன், கவிதா, ரவிமோகன், சிவரஜி ஆகியோரின் பாசமிகு மாமனும் பிரியதர்சினி, கவிசாளினி, றொபின், றொசான், சமீரா, சர்மி ,அட்மீனா அஸ்வின், சயன், கிஷானி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னனாரின் இறுதிக்கிரிகைள் இன்று (14.11.2013) வியாழக்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நுணாவில் சந்தி, சாவகச்சேரி.
குடும்பத்தினர்
(077 0610458)
(40122)(8.14)

## நினைவுகளுடன் மூன்றாம் ஆண்டில்



மலர்வு
15.10.1938
உதிர்வு
19.10.2010

அமரர் **முத்துத்தம்பி தம்பிராசா** (துரை)
திதி : பூர்வபக்க துவாதசி (14.11.2013)

முற்றுப் பெற்றன மூன்றாண்டுகள்
முத்தான உம் நினைவில் முடிவுறாத் சரிதம்
நகர்ந்தன நாட்களோ ஆயிரத்து நூறு...
ஆறாது எம் துயரம் நாள் பல கழித்தாலும்
வாழ்வோமே எந்நாளும் உம் நினைவோடு.....

ஹம்சிகா பான்சி ஹவுஸ்,
பெரிய கடை வீதி, யாழப்பாணம்.
குடும்பத்தினர்.
(40121)(8.14)

## மரண அறிவித்தல்

### பிள்ளைநாதன் தவவதனி

(சித்த ஆயுள்வேத இறுதியாண்டு மாணவி)



வளலாய் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பிள்ளைநாதன் தவவதனி (சித்த ஆயுள்வேத மாணவி) நேற்று முன்தினம் (12.11.2013) செவ்வாய்க்கிழமை கால மாகிவிட்டார்.

அன்னார் பிள்ளைநாதன்(அதிபர், வளலாய் அ.மி.த.க. பாடசாலை) காலஞ்சென்ற சந்தானம்மா தம்பதியரின் அன்பு மூத்த மகளும், தர் சினி, தேன்மொழி, தாட்சாயினி, பிரிந்தாபன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (13.11.2013) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வில்லூன்றி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.
தகவல்:
தந்தை

## மரண அறிவித்தல்

### செல்வி குணரத்தினம் அருள்மொழி

(யாழ். வேம்படி மகளிர் கல்லூரி முன்னாள் ஆங்கில ஆசிரியை)



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வி குணரத்தினம் அருள்மொழி கடந்த (11.11.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் குணரத்தினம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்) காலஞ்சென்ற பாலாம்பிகை தம்பதியரின் அன்புமகளும் ஐங்கரன் (ஆசிரியர்), அமுதினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவனியாவின் அன்பு மைத்துனியும், சாதுரியன், வான்நிலா, அபிநயா ஆகியோரின் அன்புமாமியும் பஞ்சாட்சரம், வைகுந்தவாசன் ஆகியோரின் அன்புப்பெறாமகளும் கனகலிங்கம், சிற்சபேசு, பரமலிங்கம், பரமேஸ்வரி, ஞானேஸ்வரி, கமலேஸ்வரி, ஈஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2013) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பழைய டிஸ்பென்சரி லேன்,
இணுவில் தெற்கு, இணுவில்.
வே. குணரத்தினம் (தந்தை)
(10118)(8.14)

## நீர்வேலிக்கான கேபிள் இணைப்பு விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், நவ. 14
நீர்வேலி பிரதேசத்துக்கான கேபிள் தொலைபேசி இணைப்புக்கள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.
கரந்தன் வீதி, அரசகேசரி பிள்ளையார் கோயிலடி மற்றும் நீர்வேலி தெற்கு கந்தசுவாமி கோயிலடி ஆகிய பகுதிகளுக்கான கேபிள் இணைப்புக்கள் மேலும் விஸ்தரிக்கப் பட்டுள்ளன. குறித்த பகுதியில் அமைக்கப்பட்ட இம்சான் பரிவர்த்தனையில் இருந்து தற்போது மேலதிகமாக 60 இணைப்புக்கள் புதிதாக வழங்கப்படவுள்ளன.(வ-17)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,நவ.14
வடக்கு மாகாண விவசாய அமைச்சால் மாகாண உள்ளூராட்சி சபைகளின் தலைவர், செயலாளர் களுக்கான விவசாய உற்பத்தியை சந்தைப்படுத்தல் மற்றும் பாதீனியம், களை கட்டுப்படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் நடத்தப்படவுள்ளது. நாளை வியாழக்கிழமை மு.ப.10 மணிக்கு கிளிநொச்சி வட்டக்கச்சியில் உள்ள மாவட்ட விவசாய ப்யிற்சி நிலையத்தில் கலந்துரையாடல் நடை பெறும். மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடலில் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவர் அல்லது உபதலைவர் மற்றும் செயலாளர் ஆகியோரைக் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## வருமானப் பகுதி அடுத்த வாரம் முதல் கணினி மயம்

தென்மராட்சி, நவ.14
சாவகச்சேரி நகர சபையில் கணினி மயப்படுத்தப்பட்ட வருமானப் பகுதி அடுத்த வாரம் தொடக்கம் இயங்க உள்ளது.
ஆசிய பவுண்டேசன் நிறுவன ஒத்துழைப்புடன் சபை நிதி மூலம் மேற்கொள்ளப்பட்ட கணினி மயப்படுத்தப்பட்ட வருமானப் பகுதி டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் வரியிறுப்பாளர்களுக்கான சேவையை வழங்கவுள்ளதாக நகர சபைத் தலைவர் இ.தேவ சகாயம்பிள்ளை தெரிவித்தார். (வ-9)

# தொடங்கியது மழை காலம் சிறார்களுக்கு வயிற்றுளைவு

### சுகாதாரத்தை பேணுமாறு அறிவுறுத்து

மழைகாலம் ஆரம்பித்துள்ளதை அடுத்து யாழ்.மாவட்டத்தில் சிறார்கள் மத்தியில் வயிற்றுளைவு, வயிற்றோட்ட நோய்கள் பரவத் தொடங்கி யுள்ளன.
சிறுவர்களிலிருந்து பெரியவர்களுக் கும் இந்த நோய்கள் பரவு வதால் அவற்றிலிருந்து பாது காப்பாக இருக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவை கள் திணைக் களம் அறிவுறுத்தியுள்ளது. இது தொடர்பாக திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளதாவது:-
சிறுவர்களுக்கு காய்ச்சல், வயிற்றுளைவு, வயிற்றுவலி, வாந்தி போன்ற அறிகுறிகளுடன் இந்த நோய்கள் பரவுவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.
அவற்றை தவிர்க்க, கொதித்து ஆறிய நீரையே பருக வேண்டும்.
பழங்கள், காய் களை நன்கு கழு விய பின்னர் உண்ணவேண்டும், பச்சை இலை கறி கள், மரக்கறிகளை உணவுக் காக தயார் செய் யும் முன்னர் உப்பு நீரில் நன்றாகக் கழுவவும், எப் பொழுதும் சமைக்க, உண வூட்ட,சாப்பிட முன்னர் கை களை நன்றாகச் சவர்க்கார மிட்டுக் கழுவவும், பாது காப் பற்ற வகையில் அழுக் கடை யக் கூடியவாறு தரையில்வைத்துவிற்பனை செய்யும் காய்கறிகள், பழ வகைகளைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். மலம் கழிக்க எப்போதும் மலசல கூடங்களையே பாவித் தல் வேண்டும். சிறார்களின் மலக் கழிவுகளை பாதுகாப்பான முறையில் அகற்ற வேண்டும் என்றும் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.
பாடசாலைகளில் ஆசிரியர்கள், பாடசாலைச் சுகாதாரக் கழகங் கள் இவை தொடர்பாக மாண வர்களுக்கு அறிவூட்டுவதன் மூலமாக இந்த நோய்களிலி ருந்து மாணவர்களைப் பாது காக்க உதவ முடியும்- என்றுதிணைக்களம்மேலும் தெரிவித்துள்ளது. (வ-4)

## வீதி புனரமைக்கப்படுமா....?



நீர்வேலி தெற்கு அம்மன் கோயிலடி வெள்ளம் தள்ளி வீதி நீண்டகாலமாக புனர மைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் குறித்த வீதியில் மழை காலத்தில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. இதனால் வீதியால் பயணிப்போர் சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர். எனவே குறித்த வீதியை புனரமைக்க வலி.கிழக்குப் பிரதேச சபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (வ-17)

### கொடிகாமம் சந்தையில் சுகாதார சீர்கேடு

# ஆதாரங்களைப் பார்த்து திரும்பினர் பொலிஸார்

கொடிகாமம், நவ. 14
கொடிகாமம் சந்தை சுகாதாரச் சீர்கேடாக இருப்ப தாக வியாபாரிகளிடமிருந்துகிடைத்த தகவலை பரிசோதிக்கச் சென்ற பொலிஸார் சந்தை வியாபாரிகளால் ஆதாரங்களுடன் காண்பிக்கப்பட்ட சுகாதாரச் சீர்கேடுகளை நேரில் பார்வையிட்டு திரும்பினர்.
சந்தைக்குள்உள்ளவியாபார நிலையங்களை திங்கட் கிழமை பார்வையிட்ட கொடிகாமம் பொலிஸார் சந்தைப் பகுதியில் குப்பைகள் அதிகமாகக் காணப்பட்டதால் அங்குள்ள வியாபாரிகள் மீது வழக்கு பதிவு செய்ய முற்பட்டனர்.
அதன்போது ஒன்றுகூடிய வியாபாரிகள் சந்தையில் தினமும் சேருகின்ற குப்பைகளை அப்புறப்படுத்துவதில்லை,சந்தையில்உள்ள வடிகால்கள் துப்புரவு செய்யப்படாததால் மழை வெள்ளம் தேங்கி நிற்பது கடந்த சனிக்கிழமை பிரதேச சபையால் சேகரிக்கப்பட்ட குப்பைகள் அகற்றப்படாது உழவு இயந் திரப் பெட்டியுடனே காணப் பட்டமை, சந்தையில் உள்ள மலசலகூட துர்நாற்றம் போன்றவற்றை பொலிஸாரை நேரில் அழைத்துச் சென்று காண்பித்தனர்.
பிரதேச சபை தினமும் சந்தையில் சேரும் குப்பைகளை அப்புறப்படுத்தாத தால் சுகாதார சீர்கேடு நிலவுவதாகப் பொலிஸாருக்கு விளக்கமாகக் கூறினர்.
இதனையடுத்து பிரதேச சபை மற்றும் பொது சுகாதாரப் பரிசோத கருக்கு முறைப்பாடு செய்யு மாறு கூறிவிட்டு பொலிஸார் சென்றதாக வியாபாரிகள் தெரிவித்தனர். (வ)

# பொதுக்கிணறு திடீரென தனிநபர் கட்டுப்பாட்டுக்குள்

### மந்துவில் கிழக்கில் மக்கள் சிரமம்

தென்மராட்சி, நவ. 14
நீண்டகாலமாக பொது மக்களின் பயன்பாட்டில் இருந்த பொதுக் கிணற்றை தனிநபரொருவர் வேலியிட்டு திடீரென அடைத்துள்ளதால் மக்கள் குடிதண்ணீருக்கு சிரமங்களை எதிர்நோக்கு கின்றனர்.
எனவே, உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் தலையிட்டு மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.
மந்துவில் கிழக்கு பிரம்படி முதலாவது ஒழுங்கையில் உள்ளபொதுக்கிணறுநீண்ட காலமாக அந்தப்பகுதி மக்களால் குடிதண்ணீர்த் தேவைக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. மந்துவில் கிழக்குப் பகுதியில் குடிதண்ணீர் குறைவு என்பதால் ஒரு பகுதி மக்கள் குறித்த கிணற்றைப் பயன்படுத்தி வந்தனர்.
குறித்த கிணறு உள்ள காணியை தனிநபர் ஒருவர் தனது காணி என உரிமை கோரி திடீரென அடைத்து பொது மக்கள் பயன்படுத்தாதவாறு தடுத்துள்ளார். இதனால் குடிதண்ணீருக்காக அந்தப் பகுதி மக்கள் வேறு இடங்களுக்குச்செல்ல வேண்டியுள்ளது. இது தொடர்பாக சாவகச்சேரி பிரதேச சபை, தென்மராட்சி பிரதேச செயலகம் ஆகிய வற்றில் முறையிட்ட போதிலும் இதுவரை பயன் கிடைக்கவில்லை.
இந்த விடயத்தில் உரிய தரப்பினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு கிராம மக்களின் குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக மீண்டும் அக் கிணற்றை பொதுக் கிணறாகப் பாவனைக்கு விடுமாறும் கோரியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

"_"

**குறித்த கிணறு உள்ள காணியை தனிநபர் ஒருவர் தனது காணி என உரிமை கோரி திடீரென அடைத்து பொது மக்கள் பயன் படுத்தாதவாறு தடுத்துள்ளார்.**

# வெற்று பியர் ரின்களுக்கு குடாநாட்டில் மவுசு

வலி.தென்மேற்கு, நவ. 14
வீதியோரங்களில் தேடுவாரற்றுக் கிடக்கும் வெற்றுப் பியர் ரின்களுக்கு மவுசு ஏற்பட்டுள்ளது. ஒரு கிலோ வெற்று ரின் 3 ரூபா வரை விலை போவதால் அவற்றைத் தேடிச் சேகரிப்பதில் பலர் ஈடுபட்டுள்ளனர்.
நாட்டில் ஏற்பட்டிருக்கும் சமாதானச் சூழ்நிலையைத் தொடர்ந்து குடாநாட்டில் மதுபான விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் மதுப்பிரி யர்களின் எண் ணிக்கையும் அதிகரித்துள்ளது.
மதுபான விற்பனை நிலையங்களில் கைக்கு அடக்கமான வகையில் பியர் ரின்களும் சாராயமும் விற்பனை செய்யப்படுவதால் அவற்றை வாங்கிச் செல்வோர் குறிப்பாக அந்தரங்கமாக மது அருந்துபவர்கள் வீதியோரங்களிலும் மூலை முடுக்குகளிலும் நின்று அருந்திவிட்டு வெற்று ரின்களையும் போத்தல்களையும் அந்த இடத்தில் வீசி விட்டுச் செல்கின்றனர். இதனால் வீதிகளில் ஏராளமான ரின்கள் தேங்கிக் கிடக்கின்றன. (வ-115)

# ஜனாதிபதியின் பிறந்தநாள்; நல்லூரில் மரநடுகை

யாழ்ப்பாணம், நவ.14
ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தினத்தையொட்டி நாட்டுக்கு நிழல் (துயட்ட செவன) திட்டத்தின் கீழ் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நல்லூர் ஜே/90 கிராம அலுவலர் பிரிவில் உள்ள பூம்புகார் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் மரம் நடுகை நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.
பழமரக்கன்றுகள், நிழல் தரு மரங்கள் அன்றைய தினம் பாடசாலைச் சுற்றாடலில் நடப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் தெரிவித்தார். (வ-7)

# ஒளி விழா நாளை

தென்மராட்சி, நவ 14
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி கிறிஸ்தவ மன்றத்தின் ஒளிவிழா நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி நாகேந்திரராஜா மண்டபத்தில் இடம்பெறும். விழாவில் வேதாகம வாசிப்பு, கிறிஸ்மஸ் கீதங்கள், இறை செய்தி, கல்லூரி அதிபர் உரை, ஜெபமும் ஆசீர்வாதமும் கலை நிகழ்வுகளும் இடம்பெறும். (வ-9)

# சடலங்களை தகனம்/ அடக்கம் செய்ய கட்டணம்

யாழ்ப்பாணம், நவ.14
யாழ். மாநகர சபையின் பராமரிப்பில் இயங்கும் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் சடலங்களை அடக்கம் செய்வதற்கான தகனம்/கட்டண விவரத்தை யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற் குணராஜா அறிவித்துள்ளார்.
பெரியவர்களின் உடலங்களை எரிப்பதற்கு ரூபா 2 ஆயிரமும், அவற்றைப் புதைப்பதற்கு ஆயிரம் ரூபாவும் சிறியவர்களது உடலங்களைப் புதைப்பதற்கு ஆயிரம் ரூபாவும் கால் நடைகளைப் புதைப்ப தற்கு ரூபா அறுநூறும் அறவிடப்படும். குறிப்பிட்ட தொகைக்கு மேலதிகமான கட்டணங்கள் எவையும் மாநகர சபையால் அறவிடப்படமாட்டாது. இது தொடர்பான முறைப்பாடுகள் இருப்பின் தொலைபேசி இல 021222 2019, 021222 2275, 021222 2335 ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு தெரியப்படுத்துமாறும் முதல்வர் அறிவித்துள்ளார். (வ-7)

# மன்மோகன் செல்லாதமை மாற்றத்தை ஏற்படுத்தாது

## பொதுநலவாய மாநாட்டையே இந்தியா நிறுத்தியிருக்க வேண்டும்: எச்.ராஜா விசனம்

சென்னை, நவ.14

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பொதுநலவாய மாநாட்டுக்குச் செல்லாது விட்டமை பெரிய மாற்றம் எதனையும் ஏற்படுத்தப்போவதில்லை. அந்த மாநாடு இந்திய அரசு முற்றாகப் புறக்கணிப்பதுடன், மாநாடுஇலங்கையில் நடைபெறுவதைத் தடுத்திருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார் தமிழக பா.ஜ.க. துணைத் தலைவர் எச்.ராஜா.

இதுகுறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளாதது பெரிய விடயமே இல்லை. அதனால் மாற்றங்கள் ஏதும் ஏற்படப் போவதுமில்லை. இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெறத் தான் போகின்றது. அதில் இந்தியா சார்பாகவெளியுறத்துறைஅமைச்சர் சல்மான் குர்ஷித் கலந்து கொள்ளத்தான் போகின்றார்.

இந்திய மத்திய அரசு ஆரம் பத்திலேயே இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெறுவதைத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால் காங்கிரஸ் அரசு திட்டமிட்டு தமிழ் மக்களை வஞ்சிக்கின்றது. பா.ஜ.க. தமிழக மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பதுடன், தமிழர் பிரச்சினை தொடர்பில் நிலையான கொள்கையுடன் உள்ளது." என்று தெரிவித்துள்ளார். (ற)

**இந்திய மத்திய அரசு ஆரம் பத்திலேயே இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடைபெறுவதைத் தடுத்து நிறுத்தியிருக்க வேண்டும். ஆனால் காங்கிரஸ் அரசு திட்டமிட்டு தமிழ் மக்களை வஞ்சிக்கின்றது.**

## தமிழர்கள் பிரச்சினையில் அ.தி.மு.க. இரட்டை வேடம்

### குற்றஞ்சாட்டுகின்றார் கருணாநிதி

சென்னை, நவ.14

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அ.தி.மு.க. அரசு இரட்டை வேடம் போடுகிறது என்று குற்றஞ்சாட்டுகின்றார் தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

"இலங்கைத் தமிழர் விவகாரத்தில் அ.தி.மு.க. அரசு இரட்டை வேடம் போடுகிறது. இரட்டை நிலை என்பது அ.தி.மு.க. அரசின் வழக்கமான ஒன்று.

பொதுநலவாய மாநாட்டில் இந்தியா சார்பில் குர்ஷித் பங்கேற்பது வருத்தம் அளிக்கிறது. மக்கள் உணர்வுகளை மதிக்காமல் மாநாட்டிற்கு குர்ஷித் சென்றது தவறு. தமிழக மக்களின் உணர்வுகளை மத்திய அரசு புறக்கணித்திருக்கக் கூடாது. தமிழகத்தில் டெசோ அமைப்பின் சார்பில் விரைவில் போராட்டம் நடத்தப்படும். உடல்நிலை காரணமாக ஏற்காடு இடைத்தேர்தல் பரப்புரைக்கும் செல்ல முடியாதுள்ளது. எனக்குப் பதிலாக ஸ்டாலின் செல்வார்" என்று தெரிவித்துள்ளார். (ற)

## தமிழரை சாந்தப்படுத்தும் முயற்சிகளில் காங்கிரஸ்

புதுடில்லி, நவ.14

பொதுநலவாய மாநாட்டில் இந்தியா கலந்துகொள்வதை அடுத்து தமிழர்கள் மத்தியில் எழுந்துள்ள கொந்தளிப்பைப் போக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது காங்கிரஸ் கட்சி.

முதற்கட்டமாக இலங்கையில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இந்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த கையேடு ஒன்றை வெளியிட்டுள்ளது.


அத்துடன் இலங்கைத் தமிழர்களுக்கான உதவிகள் தொடர்பான புள்ளி விவரங்களையும் பத்திரிகைகளில் விளம்பரங்களாக வெளியிட ஆரம்பித்துள்ளது என்று கூறப்படுகின்றது. (ற)

## சென்னையில் துணை ஜனாதிபதி

சென்னை, நவ.14

இந்தியத் துணை ஜனாதிபதி ஹமீத் அன்சாரி இரண்டு நாள் பயணமாக சென்னை வந்துள்ளார். அவர் சென்னையில் பல் வேறு கல்லூரிகளில் நடக்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

சென்னை வந்துள்ள துணை ஜனாதிபதியை சென்னை விமான நிலையத்தில் தமிழக ஆளுநர் ரோசய்யா, தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா மற்றும் அமைச்சர்கள் வரவேற்றனர். (ற)



மும்பையில் கேம்ப கோலா வளாகத்தில் 6 மாடிகளை மட்டுமே கட்டுவதற்கு அனுமதி பெற்று, 20 மற்றும் 17 மாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. விதிமுறைகள் மீறப்பட்டதாகத் தெரிவித்து அந்தக் கட்டடங்களை இடிக்க மும்பை மாநகராட்சி நடவடிக்கை எடுத்தது. அதற்கு குடியிருப்பு வாசிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். பொலிஸாரை முற்றுகையிட்டுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தில் ஈடுபட்டவர்களை பொலிஸார் அப்புறப்படுத்தினர். அங்கு தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவுகிறது. (ற)

## அந்தமான் அருகே காற்றழுத்தம்

சென்னை, நவ.14

வங்கக் கடலில் அந்தமான் அருகே உருவாகியுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு பகுதி வலுவடைந்து புயலாக மாற வாய்ப்பு உள்ளது என்றுஇந்தியவானிலைஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

"அந்தமான் தீவுக்கு அருகே உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் தற்போது வலுவடைந்து, சென்னைக்கு 800 கிலோ மீற்றர் தொலைவில் தீவிர காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக உருவெடுத்துள்ளது. இன்று அது மேலும் வலுவடைந்து ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக மாற அதிக வாய்ப்புள்ளது.

அந்தத் தாழ்வுபகுதி மேலும் தீவிரமடைந்து புயலாக மாறவும்வாய்ப்புள்ளது. இன்று அது நகரும் திசையைப் பொறுத்தே தெளிவான நிலைப்பாட்டுக்கு வர முடியும். தமிழகத்தின் கரையோரங்களில் மழை பெய்ய வாய்ப்புள்ளது" என்றுமேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பிரிட்டன் பிரதமர் இந்தியா செல்கிறார்

புதுடில்லி, நவ.14



பிரிட்டனின் பிரதமர் டேவிட் கமரூன் இன்று இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத் தலைநகர் கொல்கத்தாவுக்குச் செல்லவுள்ளார். சுமார் 6 மணி நேரம் அங்கு தங்கியிருக்கும் அவர் ஜோகாவில் உள்ள வணிகவியல் கல்லூரி மாணவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார். அதன்பின்னர் கொல்கத்தாவில் புதுப்பிக்கப்பட்டு வரும் இந்திய அருங்காட்சியகத்தையும் பார்வையிடுவார். பின்னர் நிறுவன பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

இந்த குறுகிய நேர சுற்றுப்பயணத்தின்போதுமேற்கு வங்காள மாநில முதல் மந்திரி மம்தா பானர்ஜியை அவர் சந்திப்பாரா? என்ற உறுதியான தகவல்கள் ஏதுமில்லை. (ற)

## பணம் கொடுத்ததாக நான் கூறவே இல்லை

### திடீரெனப் பின்வாங்குகிறார் இராணுவத் தளபதி வி.கே.சிங்

புதுடெல்லி, நவ.14

காஷ்மீர் அமைச்சர்களுக்கு இராணுவம் பணம் கொடுத்ததாக நான் கூறவில்லை என்று திடீரெனப் பின்வாங்கியுள்ளார் இந்திய முன்னாள் இராணுவ தளபதி வி.கே.சிங்.

காஷ்மீர் மாநிலத்தில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்துவதற்காக அமைச்சர்கள் மற்றும்நாடாளுமன்றஉறுப்பினர்களுக்கு இந்திய இராணுவம் பணம் வழங்கியது என்று முன்னாள் தலைமை இராணுவ தளபதி வி.கே.சிங் அண்மையில் கூறி இருந்தார். இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், "காஷ்மீர் அமைச்சர்களுக்கு இராணுவம் பணம் கொடுத்ததாக நான் கூறவில்லை. காஷ்மீரில் ஸ்திரத்தன்மை ஏற்படுத்துவதற்காக, பாலம் கட்டுவது போன்ற சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன என்றுதான் கூறினேன்" என்றுதிடீரெனப்பின்வாங்கினார் வி.கே.சிங்.

"புதுடில்லியில் இருந்த அமெரிக்காவின் முன்னாள் தூதர் டேவிட் மூல்போர்டு கூறினார் என்று 'விக்கி லீக்ஸ்' இணையத்தளம் வெளியிட்டிருந்த தகவலில் காஷ்மீர் அமைச்சர்களுக்கு பணம் கொடுத்ததாக இடம் பெற்றிருந்த தகவலைத்தான் நான் பேட்டியில் கூறி இருந்தேன்" என்றும் அவர் மேலும்தெரிவித்துள்ளார். (ற)

## "வறுமை தாங்க முடியவில்லை, எனது கிட்னியை விற்கட்டுமா?"

### மகாராஷ்டிர முதலமைச்சரிடம் அனுமதி கேட்ட விவசாயி

வர்தா, நவ.14

வறுமை தாங்க முடியாத விவசாயி ஒருவர் தனது சிறுநீரகத்தை விற்க அந்த மாநில முதலமைச்சரிடம் அனுமதி கோரியுள்ளார்.

இந்த விநோத சம்பவம் இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் நடந்துள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் யவத்மால் மாவட்டத்தில் உள்ள திக்ரஸ் கிராமத்தைச் சேர்ந்தவர் 50 வயதான தியானேஷ்வர் லோகந்தே என்ற விவசாயி.

மழை பொய்த்து விவசாயம் சரியாக நடக்காததால் வறுமையில் வாடி வருகிறார். விவசாயம் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாநில அரசு நிவாரணத் தொகை வழங்கிவருகின்றது. எனினும் நிவாரணம் பெறத் தகுதியிருந்தும்லோகந்தேவுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை.

அதையடுத்து அவர் மகாராஷ்டிர முதலமைச்சர் சவானுக்கு கடிதம் ஒன்றை எழுதி அனுப்பியுள்ளார்.

"என்னை நம்பி மனைவி, 2 குழந்தைகள் இருப்பதால் என்னால் தற்கொலை செய்துகொள்ள முடியாது. நிவாரணத் தொகை பெற நான் தகுதி உடையவன் என்று 2 மாதங்களுக்கு முன்பேகூறப்பட்டது. ஆனால் இன்னும் பணம் கிடைக்கவில்லை. அதனால் வறுமையை போக்க எனது சிறுநீரகத்தை விற்க அனுமதி அளியுங்கள்" என்று தெரிவித்துள்ளார்.

அந்தக் கடிதத்தை அடுத்து இதுகுறித்து உடன் நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக லோகந்தேமுன்னர்உண்ணாவிரதம் இருந்தார், சேதமடைந்த பயிர்களை தீவைத்து எரித்தார். எனினும் தற்போதுதான் அவரது முயற்சி வெற்றிபெற்றுள்ளது. (ற)

## இரகசியம் பேணுவதில் சுவிஸ் முதலிடம்

லண்டன், நவ.14

நிதிசார் விடயங்களை இரகசியமாக பேணும் நாடுகளின் பட்டியலில் சுவிட்ஸர்லாந்து முன்னிலை வகிக்கின்றது.

வரி விதிப்புக்கள் தொடர்பில் ஆராயும் நிறுவனம் ஒன்றால் நடத்தப்பட்ட ஆய்விலேயே இந்த விடயம் தெரியவந்துள்ளது.

லக்ஸம்பேர்க், ஹொங்கொங், சிங்கப்பூர், அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் முதல் பத்து இடங்களைப் பிடித்துள்ளன.

இந்தப் பட்டியலில் இந்தியா 32 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது

உலகில் அதி சிறந்த நிதி சார் நிறுவனங்கள் சுவிட்ஸர்லாந்தில் செயற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

வங்கி இரகசியத் தன்மை, வினைத்திறனான வரி விதிப்பு முறைகள், நிதி மோசடிகளுக்கு எதிரான ஏற்பாடுகள் என்ற விடயங்களின் அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.(ற)



ஊடகங்களில் அறிவிக்கப்பட்டதை விடவும் மிகவும் குறைந்தளவிலானோரே பிலிப்பைன்ஸைத் தாக்கிய சூறாவளியினால் உயிரிழந்துள்ளனர் என்று அந்நாட்டு ஜனாதிபதி பெனிக்கோ அக்குய்னோ தெரிவித்துள்ளார். சுமார் 2,500 பேர் வரையிலேயே உயிரிழந்திருக்கக் கூடும் என்று நம்புவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எங்குபார்த்தாலும் உடல்கள் சிதறிக் கிடக்கின்றன என்று மீட்புப் பணியில் ஈடுபடுவர்கள் கூறுகின்றனர். (ற)

## அவசர நிலை எகிப்தில் நீக்கம்



கெய்ரோ, நவ.14

எகிப்து நாட்டில் நடைமுறைப் படுத்தப்பட்டிருந்த அவசரநிலை நீக்கப்பட்டது. அதற்கான உத்தரவை எகிப்தின் நிர்வாக நீதிமன்றம் நேற்றுமுன்தினம் வெளியிட்டுள்ளது.

நீதிமன்ற ஆணைப்படி நேற்று முன்தினம் மாலை 4 மணி முதல் எகிப்திலுள்ள அவசர நிலை நீக்கப்பட்டுள்ளது. நாட்டின் பல மாநிலங்களில் நடைமுறையில் இருந்த ஊரடங்கும் நீக்கப்பட்டுள்ளது.

எகிப்தில் அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்ததை அடுத்து தற்காலிக ஜனாதிபதி அத்லி மான் சோர் கடந்த ஓகஸ்ட் 14ஆம் திகதி நாட்டில் அவசர நிலையைப் பிரகடனப்படுத்தியிருந்தார்.(ற)

## பெண்களை மிரட்டும் நாடு எகிப்து

நியூயோர்க், நவ.14

மத்திய கிழக்கு நாடுகளில் பெண்களுக்கான உரிமைகள் மறுக்கப்படும் மிக மோசமான நாடாக எகிப்து பதிவாகியுள்ளது.

மத ரீதியான கட்டுப்பாடுகள், பெண்களுக்கு எதிரான துஷ்பிரயோகங்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான பாகுபாடுகள் அதிகளவில் எகிப்தில் இடம்பெறுவதாக ஆய்வுகள் மூலம் தெரியவந்துள்ளது.

சிரியா உள்ளிட்ட 21 அரபு நாடுகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளிலேயே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

2011 ஆம் ஆண்டு அரபு நாடுகளில் எழுச்சிப் போராட்டங்கள் நடத்தப்பட்டதன் பின்னர் மூன்றாவது முறையாக இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ற)

# சரிகின்றார் ஒபாமா

## கருத்துக் கணிப்பில் தகவல்

நியூயோர்க், நவ.14

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் செல்வாக்கு முன்னெப்போதும் இல்லாதவாறு கிடுகிடுவென சரிந்து வருகின்றது என்று கூறப்படுகின்றது. இதுகுறித்து நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு ஒன்றிலேயே இந்தத் தகவல்கள் வெளியாகியுள்ளன.



ஒபாமா ஜனாதிபதியாகப் பதவியேற்றபோது அவருக்கு இருந்த செல்வாக்கு இப்போது இல்லை. அமெரிக்கர்கள் மத்தியில் அவர் மீது அவநம்பிக்கை ஏற்பட்டுள்ளது என்று கூறுகின்றது அந்த கருத்துக் கணிப்பு.

2011ஆம் ஆண்டு அல்குவைதா நிறுவுனர் ஒசாமா பின்லேடனை அமெரிக்கப் படைகள் சுட்டுக் கொன்றதைத் தொடர்ந்து அமெரிக்கர்களிடையே ஜனாதிபதி பராக் ஒபாமாவின் செல்வாக்கு கிடுகிடுவென உயர்ந்தது. வெளிநாட்டுக் கொள்கையைக் கையாளுவது, ஜனாதிபதியாகப் பணியாற்றுவது, ஆப்கானிஸ்தான் விவகாரம், தீவிரவாத மிரட்டல் உள்ளிட்டவற்றில் ஒபாமா சிறப்பாகக் கையாள்வது என்பவற்றுக்குப் பெரும்பாலான அமெரிக்கர்கள் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

ஆனால் தற்போது ஒபாமாவின் செல்வாக்கு 46 சதவீதமாக குறைந்துள்ளது என்று கூறப்படுகின்றது. அதற்கு அமெரிக்கா தற்போது எதிர்நோக்கும் நிதிப் பற்றாக்குறை முக்கிய காரணமாக அமைகின்றது என்று மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## மனித உரிமைகள் சபையில் உறுப்பு நாடாகியது சீனா

### ஆதரவாக 176 வாக்குகள்

ஜெனிவா, நவ.14

ஐ.நா சபையின் மனித உரிமை சபையின் உறுப்பு நாடாக சீனா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நடந்த தேர்தலில் 176 வாக்குகள் பெற்று சீனா உறுப்பு நாடாகியது.

ஐ.நா. மனித உரிமை பேரவையில் சீனா 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை உறுப்பினராக இருக்கும்.


அத்துடன் ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், கியூபா, தென்னாபிரிக்கா, சவூதி அரேபியா ஆகிய 13 நாடுகள் ஐ.நா. மனித உரிமை பேரவையின் உறுப்பு நாடுகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. (ற)

## மீண்டும் தலைநிமிர்ந்தது உலக வர்த்தக மையம்

நியூயோர்க், நவ.14

அமெரிக்காவிலேயே மிகவும் உயர்ந்த கட்டடமாக நியூயோர்க் நகரில் கட்டப்பட்டுள்ள புதிய உலக வர்த்தக மையம் அறிவிக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு அல்குவைதா அமைப்பு நடத்தியத் தாக்குதலில் உலக வர்த்தக மையம் தகர்க்கப்பட்டது. இந்த கோர தாக்குதலில் சிக்கி சுமார் 19 தீவிரவாதிகள் உள்பட 2996 பேர் உயிரிழந்தனர்.



தீவிரவாத தாக்குதலில் சிதைந்து போயிருந்த பழைய வர்த்தகக் கட்டடத்தை முழுவதுமாக இடித்து அங்கு புதிய கட்டடம் கட்ட தீர்மானித்தது அமெரிக்கா. 2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட புதிய உலக வர்த்தக மையக் கட்டடப் பணி தற்போது முழுவதுமாக பூர்த்தியாகி விட்டது.

408 அடி கூம்பு பகுதியுடன் ஆயிரத்து 1, 776 அடி உயரத்தில் வானளாவ உயர்ந்துள்ள இந்த கட்டடம் அமெரிக்காவின் மிக உயர்ந்த கட்டடம் என்ற சிறப்பிடத்தைப் பிடித்துள்ளது. இதற்கு முன்னர் வரை சிக்காகோ நகரின் வில்லிஸ் கோபுரம் தான் அமெரிக்காவின் உயரமான கட்டடம் என்ற பெருமையைப் பெற்று வந்தது குறிப்பிடத்தக்கது. (ற)

# சிவன் கோயில் நிலத்துக்கு இருநாடுகள் சண்டை

## தலையிட்டுத் தீர்த்தது சர்வதேச நீதிமன்றம்

நியூயோர்க், நவ.14

தாய்லாந்து-கம்போடியா நாட்டு எல்லையில் அமைந்துள்ள 9ஆம் நூற்றாண்டை சேர்ந்த சிவன் கோவில் அருகே உள்ள நிலம் கம்போடியா நாட்டுக்கே சொந்தமானது என்று தீர்ப்பளித்துள்ளது சர்வதேச நீதிமன்றம்.

கம்போடியாவில் அங்கோர் வாட் என்ற இடத்தில் மிகப் பெரிய இந்துக்கோவில் உள்ளது. அந்தக் கோவிலை யுனெஸ்கோ அமைப்பு புராதன இடமாக அங்கீகரித்துள்ளது.

தாய்லாந்துக்கும், கம்போடியாவுக்கும் இடையே அமைந்துள்ள ஆயிரம் ஆண்டு பழமைவாய்ந்த இந்த சிவன் கோயிலுக்கு இரு நாடுகளும் உரிமை கொண்டாடி சண்டையிட்டு வந்தன.

1962ஆம் ஆண்டிலிருந்து இந்தப் பிரச்சினை நீடித்தது. அதனால் அப்பகுதியிலிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பு கருதி வெளியேறினர். இருநாட்டு இராணுவமும் கோயிலைச் சுற்றி பாதுகாப்பில் ஈடுபட்டன.

அதையடுத்து இந்தப் பிரச்சினை சர்வதேச நீதிமன்றத்துக்குச் சென்றது. இரு நாட்டு இராணுவமும் கோயிலில் இருந்து வெளியேற வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் கடந்த ஆண்டு உத்தர விட்டது. ஆயிரக்கணக்கான இராணுவ வீரர்கள் அந்தப் பகுதியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். விசாரணைகளின் முடிவில் சிவன் கோயில் கம்போடியாவுக்கு தான் சொந்தம் என்று சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த தீர்ப்பை ஏற்றுக்கொண்ட தாய்லாந்து சிவன் கோவிலையொட்டியுள்ள, 4.6 சதுர கி.மீ.பரப்பளவுள்ள இடத்துக்கு தொடர்ந்து உரிமை கோரியது. இந்நிலையில், வழக்கில் இறுதித் தீர்ப்பு வழங்கியுள்ள சர்வதேச நீதிமன்றம் சர்ச்சைக்குரிய நிலமும், கம்போடியாவுக்கே சொந்தம் என்று தீர்ப்பளித்துள்ளது. (ற)

## தவறிவிட்டது

276, Hill Street, Dehiwala முகவரியுடைய கந்தசாமி ஐங்கரன் என்பவரின் தே.அ.அ. (823543867V) ATM காட், சாரதி அனுமதிப் பத்திரம் என்பன அடங்கிய பேர்ஸ் கொட்டடிச் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் தொலைபேசியுடன் தொடர்பு கொள்ளவும்.
077 224 9530, 077 132 6854 (40077)(2.6.3)


## டுபாய் நாட்டில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு

**Secure Manpower Recruitement (pvt) Ltd. Colombo - 4, Lice No/ 2813**

**Restaurant, Super Market, Hospital** போன்றவற்றில் **Cleaning** ஆகப் பணிபுரிய அரியதோர் சந்தர்ப்பம், அதி உயர் சம்பளம், உணவு, தங்குமிடம், மருத்துவம், இலவசம் ஒப்பந்த காலம் 2 வருடம்.
வயது எல்லை 20 - 35 வரை ஆண்/ பெண்
வீசா கை வசம் உள்ளதால் மூன்று வாரத்துக்குள் பயணமாகலாம்.
**Passport** சகிதம் விரையுங்கள்.
* டுபாய் நாட்டில் செல்வந்த வீடுகளில் வீட்டுப் பணிப்பெண்களாகப் பணிபுரிய உடன் தொடர்பு கொள்ளவும்.
எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 9 மணி முதல் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். யாழ்ப்பாணம், **Hospital** வீதி, ஆசீர்வாதம் ஒழுங்கையில் அமைந்துள்ள **Green Grass Hotel** இல்
தொடர்பு:- **LANKAVOICE 077 792 9475** 29846)(2.6.3)


## நூலகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ.14

யாழ்.அளவெட்டி அபிவிருத்தி மன்றத்தின் ஒழுங்கமைப்பில் நூலக விழிப்புணர்வு நிறுவனம் நடத்தும் Information Eye எனும் தலைப்பிலான முப்பரிமாண நூலகக் கண்காட்சி அளவெட்டி மகாஜன சபையில் நடைபெறவுள்ளது.

இன்றும் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் பெறுமதி மிக்க நூல்கள், புராதன பண்டங்கள், தொல்பொருளியல் பொருள்கள் என்


## புதுப்பொலிவுடன் புதிய இடத்தில்...




## நாளை

(15.11.2013) வெள்ளிக்கிழமை முதல்
யாழ் நகர் மத்தியில்
இல. 80/8, கஸ்தூரியார் வீதி,
(யாழ். மாநகர சபை
புதிய கட்டடத் தொகுதி
யாழ்ப்பாணம்
என்னும் முகவரியில்...
உங்கள் அபிமானதுமான,
நம்பகரமானதுமான

## வீ.எம்.கே. ஜுவல்லறி
## V.M.K Jewellery

*Dealers in 22 Kt. Gold Jewellery*

Tel: 021 720 1117, 077 784 9369

(A/12267)(7.6.3)



# அக்ஷதை



உயர்தர
## சைவ விருந்து

இன்று முதல் தினமும்
அக்ஷதையில் உயர்தர சைவ
விருந்தாக வடை, பாயாசத்துடன் சாதம்,
காரக்குழம்பு, சாம்பார், ரசம், கூட்டு,
பொரியல், கீரைப்பச்சடி,
ஊறுகாய், மோர் மிளகாய், பப்படம்
ஆகியற்றுடன் உண்டு மகிழ்ந்திட
விரைந்திடுவீர்.

உயர்தர மதிய உணவு 170/=

பட்ஜெட் பார்சல் (Take away) 100/=

தற்பொழுது யாழ். நகர்ப் பகுதிக்குள் உங்கள் இருப்பிடத்திற்கே இலவச விநியோகம் செய்யப்படுகின்றது.

★ மினி மசாலா தோசை 100/=
★ செட் தோசை (2 pcs) 100/=

(40078) (7.6.3)

## இல. 60, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P : 021 221 9946


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
### விவசாய பீடம், கிளிநொச்சி

இருபத்தியோராம் நூற்றாண்டுக்கான உயர்கல்வி (HETC) வேலைத்திட்டம்
பண்ணைத் தொழிலாளி - கால்நடைப் பண்ணை (ஒப்பந்த அடிப்படையில்)
பண்ணைத் தொழிலாளி – பயிர்ப் பண்ணை (ஒப்பந்த அடிப்படையில்)

விவசாயக் கல்வி நிகழ்ச்சி இணைப்பாளரின் வழிநடத்தலின் கீழ் செயற்படுவதற்கு மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**தேவையான தகைமைகள் :**

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல்.
2. கால்நடை மற்றும் பயிர்ப் பண்ணைகளில் பணி புரிந்தமை, அவற்றின் பராமரிப்பு தொடர்பான அனுபவம்.
3. பண்ணைப் பணிகளைச் செய்யக்கூடிய உடல் தகுதி.
4. தேவையேற்படுமிடத்து. மேலதிக நேரம் பணிபுரியத் தயாராக இருத்தல்.
5. அர்ப்பணிப்புடன் பணிபுரிதல்.
6. கடமைகளை சுயமாக முன்னெடுத்து செயல்ப்படுத்தக்கூடியவராக இருத்தல்.
7. வேலைத்தளத்தில் நல்லுறவு பேணக்கூடியவராக இருத்தல்.

**வேதனம்** : நாளொன்றுக்கு ரூபா 750/= கூலியாக வழங்கப்படும். மாதமொன்றுக்கு இருபத்திரண்டு (22) வேலைநாட்கள் எனக் கணிப்பிடப்படும்.

**ஓப்பந்தக்காலம்** : முதற் சந்தர்ப்பத்தில் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்யப்படும். பணி திருப்திகரமாக இருப்பின், மேலும் 1-2 வருடங்களுக்கு ஓப்பந்தக்காலம் நீடிக்கப்படும்.

**தெரிவு** : நேர்முகத்தேர்வு மூலம். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி உடனடியாக கடமைகளைப் பொறுப்பேற்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்ப படிவங்களை யாழ் பல்கலைக்கழக செயற்பாட்டு தொழில்நுட்ப அலுவலகத்தில் (OTS) பெற்று விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து கொண்டு, நேரடியாக 25 கார்த்திகை 2013 அன்று காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அவைக்கூடத்தில் (Board Room) நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு சகல அவசியமான ஆவணங்களுடன் சமுகமளிக்கவும்.

சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

துணைவேந்தர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

(C/12268)(2.6)

### UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### HIGHER EDUCATION FOR THE TWENTY FIRST CENTURY (HETC) PROJECT

Applications are invited from suitable candidates for the following posts to work under the guidance of the Coordinator of the respective study programmes (Physical Science and Agriculture).

**a. POST OF MANAGEMENT ASSISTANT (on Contract)**

**Required Qualification and Skills:**
Should have
- passed G.C.E (O/L) examination in six subjects in one sitting, with credit pass in at least four subjects including Tamil/English and Mathematics,
- passed G.C.E (A/L) examination in three subjects in one sitting,
- knowledge and skills in MS Office applications, windows file management and email communication,
- English language proficiency: Skills in written and oral communications and typing with good speed and
- systematic record keeping skills.

Must be
- 25-35 years old and
- an efficient team worker.

**Remuneration:** Rs.15,000/- per month (fixed)
**Contract period:** One year in the first instance and will be extended for a further period of 1-2 years on satisfactory performance.
**Recruitment:** By interview. Only the shortlisted candidates will be called for interview. Successful candidates should be able to start work immediately.

**b. POST OF PROJECT MANAGEMENT ASSISTANT (on Contract)**

**Required Qualification and Skills:**
Should have
- passed G.C.E (A/L) examination,
- knowledge and skills in MS Office applications, windows file management and email communication,
- English language proficiency,
- written and oral communication skills to deal with people of diverse backgrounds,
- skills in setting priority and managing multiple assignments
- systematic record keeping skills and
- experience in preparing reports

Must be
- 25-35 years old,
- an initiator in taking responsibilities and
- an efficient team worker

**Note:** Candidates, who have knowledge in agriculture, are preferred.

**Remuneration:** Rs.15,000/- per month (fixed)
**Contract period:** One year in the first instance and will be extended for a further period of 1-2 years on satisfactory performance.
**Recruitment:** By interview. Only the shortlisted candidates will be called for interview. Successful candidates should be able to start work immediately.

Applications must be submitted in the prescribed application form available at the Operational Technical Secretariat (OTS), HETC Project, University of Jaffna and in the University website **www.jfn.ac.lk**. The envelope containing duly filled application form must bear "the name of the post applied for" on its top left hand corner and must be either hand delivered or sent under registered post to reach "**Director Operational Technical Secretariat (OTS), HETC Project, University of Jaffna, Thirunelvely, Jaffna**" on or before **25.11.2013**. Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected. Canvassing in any form will be a disqualification.

**Vice-Chancellor**
**University of Jaffna**

(C/12269)(2.6)

# காணி அபகரிப்பை தடுக்க வேண்டும்

## வடமாகாண சபை உறுப்பினர் தியாகராசா கோரிக்கை

வட பகுதிகளிலுள்ள காணிகள் படையினராலும், அரசியல் செல்வாக்கு மிக்கவர்களாலும் அபகரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றை உடனடியாக நிறுத்துவதற்கு வட மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். இறுதிக் கட்டப் போரில் சிக்குண்டு அனைத்தையும் இழந்த மக்களின் தேவைகளை நாம் நிறைவு செய்ய வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண சபையின் முதலாவது அமர்வின் போது வடமாகாண சபை உறுப்பினர் ம.தியாகராசா உரையாற்றும் போது தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்;

எமது மக்கள் பல்வேறு பாதிப்புக்களுடன் வாழ்ந்து வருகின்றனர். இவற்றை நிவர்த்தி செய்வதற்கு வட மாகாண சபை நடவடிக்கை எடுக்க வேண்டும். இடம் பெயர்ந்த மக்களில் பலர் இன்னமும் தமது சொந்த இடங்களில் மீள்குடியமராத நிலையில் உள்ளனர்.

மேலும், மீளக்குடியமர்ந்த மக்கள் நிரந்தர வீடு, குடிதண்ணீர் வசதி, சுகாதாரம், கல்வி, மின்சாரம், போக்குவரத்து வசதிஎன்பன கிடைக்காத நிலையில் அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர். வேலைவாய்ப் புக்கள் கிடைக்காததால் இளைய தலைமுறையினர் பெரும் விரக்திக்கு மத்தியில் வாழ்கின்றனர். கடந்த காலங்களில் அரச நியமனங்கள் அரசியல் ரீதியில் செல்வாக்கு மிக்கவர்களுக்கே வழங்கப்பட்டன.

மேலும், எமது பகுதியில் காணப்படும் குளங்கள் யாவும் புனரமைக்கப்பட வேண்டும். விவசாயம், கால்நடை வளர்ப்பு ஆகியவற்றில் நவீன தொழில் நுட்பங்கள் புகுத்தப்பட வேண்டும். மேலும், வட மாகாண சபை நடமாடும் சேவைகளை நடத்துவதன் மூலமாக மக்களின் பிரச்சினைகளுக்குதீர்வுகாணமுடியும் - என்றார்.

(க-402)

## மாந்தை கிழக்கில் இன்னும் உரிய புனரமைப்புகளில்லை

### மக்கள் அவலத்தில்

முல்லைத்தீவு, நவ 14

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்குப் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கரும்புள்ளியான், பாண்டியன்குளம் ஆகிய கிராமங்களுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருமாறு இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.


இந்த இரண்டு கிராமங்களிலும் போரின் பின்னர் முதன் முதலாக மக்கள் மீள் குடியமர்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இங்கு கடந்த 2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் மக்கள் குடியமர்வதற்கு அனுமதிக் கப்பட்டனர்.

ஆனால் மேற்படி கிராமங்களில் உள்ள வீதிகள் இதுவரை புனரமைக்கப்படாத நிலையிலேயே காணப்படுகின்றன. குறிப்பாக இந்தக் கிராமங்களுக்கான பிரதான வீதி எந்தப் புனரமைப்புப் பணிகளும் இடம்பெறாத நிலையில் உள்ளது.

இதனைவிட இங்குள்ள சில குடும்பங்களுக்கு மின்சாரவசதிவழங்கப்படவில்லை. கரும்புள்ளியான் கிராமத்தில் 62க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கும் பாண்டியன் குளத்தில் 50 க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கும் இதுவரை மின்சார வசதி வழங்கப்படவில்லை. இதனால் இவர்கள் இருளில் வாழும் நிலை தற்போது காணப்படுகின்றது.

இதனைவிட உள்ளக வீதிகள் கூட இதுவரை புனரமைக்கப்படவில்லை. தமக்குரிய அடிப்படை வசதிகள் வழங்கப்படாததால் தாம் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக இந்தக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

(க-6)



நெடுங்கேணியிலுள்ள சூடுவெந்தான் கிராமத்தில் காட்டுயானைகளால் துவம்சம் செய்யப்பட்ட வாழைகள் சரிந்து கிடக்கின்றன. (க-435)

## உவராகி வரும் நிலங்கள்; கண்டாவளையில் அவலம்

### விவசாய நிலங்களும் பாழாகின்றன

கிளிநொச்சி கண்டாவளைப் பகுதியில் பெருமளவு விவசாய நிலங்கள் உவரடைந்து வருவதால் குடிதண்ணீர்த் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்புக்கள் காணப்படுவதாகவும் இந்தப் பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசத்துக்கு உட்பட்ட கண்டாவளை கிராம அலுவலர் பிரிவின் கீழ் 13 கிராமங்கள் அமைந்துள்ளன. இங்கு காணப்படும் ஏராளமான விவசாய நிலங்கள் உவரடைந்து வருகின்றன.

கடல் நீர் தடுப்பு அணைகள் கடந்த போரின்போது சேதமடைந்ததால் வடமராட்சி கிழக்கு கேவில், போக்கறுப்பு, முள்ளியான் ஆகிய எல்லையோரப் பகுதியினூடாக வெள்ளப் பெருக்கு ஏற்படும் காலங்களில், உவர் நீர் இப்பகுதிக்குள் உட்புகுந்து வருகின்றது. இவ்வாறு உவர் நீர் உட்புகுவதினால் பெருமளவான விவசாய நிலங்களில் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அவை உவர் நிலமாக மாறி வருவதே இதற்கான பிரதான காரணமாகும்.

ஆகவே உவர்நீர்த் தடுப்பணைகளை ஏற்படுத்தித் தருமாறு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது மேற்கொள்ளப்படாது விட்டால் எதிர் காலத்தில் குடிதண்ணீருக்குக் கூட தட்டுப்பாடு ஏற் படும் அபாய நிலை ஏற் படுமென இங்கு வசிக்கும் மக் கள் தெரிவித்துள்ளனர். (க-6)

## போக்குவரத்து நெருக்கடியை போக்குமாறு கோரிக்கை

அக்கராயன், நவ. 14

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் நிலவும் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்ப்பதற்கு முல்லைத்தீவு அரச அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இங்கு மீளக்குடியமர்ந்த மக்கள்வேண்டுகோள் விடுத்துள்ளனர். போக்குவரத்து நெருக்கடி மிகுந்த கிராமங்களைக் கொண்ட பகுதியாகவும் துணுக்காய் விளங்குகின்றது.

துணுக்காயிலிருந்து அக்கராயன் வரையான பகுதிக்கும், ஐயன்கன்குளம்-புத்துவெட்டுவான் ஆகிய பகுதிகளுக்கும் பஸ் சேவைகள் இடம்பெறுவதில்லை. இதன் காரணமாக மக்கள் போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பாகப் பலரிடம் நீண்ட கால மாகத் தெரியப்படுத்தியுள்ள போதிலும் பயன் எதுவும் கிடைக்கவில்லையெனவும் துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில்வசிக்கும்மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். (க-18)



## வயல்காணிகளை பகிர்ந்தளிக்குமாறு ஆனைவிழுந்தான் மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி மாவட்டம் ஆனைவிழுந்தான் குளம் பகுதியில் வசிக்கும் குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வயல் காணிகளைப் பகிர்ந்தளிக்குமாறு இந்தப் பகுதியைச் சேர்ந்த கமக்கார அமைப்பு கேட்டுக் கொண்டுள்ளது.

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள ஆனைவிழுந்தான் குளம் கிராமத்தில் தற்போது சுமார் 450 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

ஆனால் இந்தக் குடும்பங்கள் தமது வாழ்வாதாரத்துக்கான தொழில்களை மேற்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றன. மேலும் இந்தக் குடும்பங்கள் தமது அன்றாட உணவுக்கே அல்லாடும் அவல நிலையில் உள்ளன.

ஆனைவிழுந்தான் குளத்தைப் புனரமைத்து அதன் கீழ் காணப்படும் சுமார் 420 ஏக்கர் நிலப்பரப்பில் நெற்செய்கையை மேற்கொள்ளக்கூடிய நிலை காணப்படுகின்ற போதிலும் வயல்நிலங்கள் பகிர்ந்தளிக்கப்படாமை மற்றும் குளம் உரிய முறையில் புனரமைக்கப்படாமை ஆகிய காரணங்களால் அது இதுவரை சாத்தியப்படவில்லை.

எனவே, இந்தக் குளத்தைப் புனரமைப்பதுடன் இங்குள்ள 420 ஏக்கர் வயல் நிலங்களை விவசாயம் மேற்கொள்ள இங்குள்ள குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்குமாறு இந்தப் பகுதியைச் சேர்ந்த கமக்கார அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை குளத்தைப் புனரமைக்கும் போது இங்குள்ள 150 மீனவக்குடும்பங்களும் தமது தொழில்களை மேற்கொள்ள முடியும்என்றும், குறித்த அமைப்பு தெரிவித்துள்ளது. (க-6)

## பளை மருத்துவமனை தனியார் வீட்டில்; நோயாளிகளுக்குப் பல்வேறு சிரமங்கள்

கிளிநொச்சி, நவ.14

பளை மருத்துவமனை தனியார் வீடொன்றில் இயங்கி வருவதால் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டு வருகின்றன.

போரின் போது சேதமடைந்த கிளிநொச்சி பளை மருத்துவமனைக்கான கட்டடம் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்திடம் கையளிக்கப் பட்ட போதிலும் இன்று வரை அது திறந்து வைக்கப்படாத நிலையிலேயே காணப்படு கின்றது. இதனால் மருத்துவமனை தனியார் வீடொன்றில் தொடர்ந்தும் இயங்கி வருகின்றது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு முதல் பெய்ந்த மழை காரணமாக வெள்ளநீர், வைத்தியசாலை இயங்கிவரும் கட்டடத்தினுள் புகுந்துள்ளது. இதனால் மருந்துவகைகளும் ஏனைய பொருள்களும் சேதமடைந்துள்ளன.

இதனைவிட இங்கு சிகிச்சை பெறச் சென்ற நோயாளிகளும் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இதனால் முழுமையான சிகிச்சையை வழங்கமுடியாத நிலையில் மருத்துவமனை நிர்வாகமும், சிகிச்சை யைப் பெற முடியாமல் நோயாளிகளும் இடர்களை எதிர்கொண்டு வருவதால் புதிய கட்டடத்தில் மருத்துவமனையை இயங்கவைக்க நடவடிக்கைஎடுக்க வேண்டுமென கோரிக்கை விடப்பட்டுள்ளது. (க-6)

# சிறுவர்களின் தனிமையே தவறுகளுக்குக் காரணம்

### உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்சரிக்கை

மட்டக்களப்பு.நவ.14

சிறுவர்கள் தனிமையில் இருக்கும் போதுதான் தவறான வழிகளில் செல்கின்றனர். போதைப் பொருள் பாவனை மூலமாகவே இந்தத் தவறுகள் இடம் பெறுகின்றன.



இவ்வாறு களுவாஞ்சிக்குடி பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயந்த ரத்நாயக்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக பட்டிருப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு மட்டக்களப்பு, களுதாவளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-


சட்டம் பிள்ளைகளின் எதிர்காலத்துக்காகத்தான் இருக்கின்றது.

நாட்டில் மாணவர்கள் நல்ல பிள்ளைகளாக வளர்ந்து வருவதையே அனைவரும் எதிர்பார்க்கின்றனர். திணைக்களமும் நடவடிக்கை எடுத்து வருகின்றது. துஷ் பிரயோகங்கள் சொற்கள் மூலமாகவோ, உடலியல் ரீதியாகவே வரமுடியும்.

பிள்ளைகளுக்கு தவறு நடப்பது அவர்கள் தனிமையில் இருக்கும் போது தான் ஏற்படுகிறது. போதை வஸ்துப் பாவனையால் தவறுகள் இடம்பெறுகின்றன. சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இத்தகைய குற்றங்களைத் தடுக்கமுடியும் -என்றார். (ச)

## கண்டெடுக்கப்பட்ட தெய்வ விக்கிரகம்

### பார்வையிட திரண்டனர் மக்கள்



மட்டக்களப்பு.நவ.14

கல்முனை மாமாங்கப்பிள்ளையார் ஆலயத்துக்கு அருகில் திடீரெனத் தோன்றிய தெய்வ விக்கிரகத்தைப் பார்வையிட அதிகளவான மக்கள் திரண்டுள்ளனர்.

இங்கு அம்மன் விக்கிரகம், திரிசூலம் , இரண்டு தகடுகள் ஆகியன கண்டு பிடிக்கப்பட்டன.

இந்தப் பிரதேசத்தில் வாழும் ஒருவரின் கனவில் தோன்றிய செய்தியால் அவர் அங்கு சென்று தெய்வ விக்கிரகத்தை எடுத்து மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் வைத்துள்ளார்.

அதனையடுத்து ஆலய நிர்வாகத்தின் ஆலோசனைக்கு அமையவும், தெய்வ வாக்குக்கமையவும் இந்த ஆலயத்திலே கோயில் கட்டி தெய்வ உருவத்தினை வழிபடுவதென முடிவெடுக்கப்பட்டது.

இந்த ஆலயம் 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் போது முற்றாக சேதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-31)

## ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள்

### மட்டக்களப்பில் சம்பவம்

மட்டக்களப்பு.நவ.14

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தாய் ஒருவர் செவ்வாய்க்கிழமை ஒரே பிரசவத்தில் மூன்று பிள்ளைகளை பெற்றெடுத்துள்ளார்.



களுவாஞ்சிக்குடி பிரதேச செயலர் பிரிவில் உள்ள மகிழூர் கிராமத்தை சேர்ந்த தாய் ஒருவரே இவ்வாறு மூன்று பிள்ளைகளை பிரசவித்துள்ளார்.

மூன்று பிள்ளைகளும் ஆரோக்கியமான நிலையில் இருப்பதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் மகப்பேற்று மருத்துவ நிபுணர் கே. திருக்குமார் தெரிவித்தார். (ச)



திருகோணமலை நகராட்சி மன்றத்தின் ஏகாம்பரம் மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு கிரிக்கெட் பயிற்சி ஆடுகளங்களை செவ்வாய்க்கிழமை நகராட்சி மன்றத் தலைவர் க.செல்வராஜா திறந்து வைத்தார். (ச-40)

## சைக்கிள்கள் சிக்கின

மட்டக்களப்பு.நவ.14

மட்டக்களப்பு, ஏறாவூர் பகுதியில் இரவில் மின்குமிழை ஒளிரச் செய்யாது பயணித்த 30 சைக்கிள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஏறாவூர் பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் இந்த சைக்கிள்கள் கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்டுள்ள சைக்கிள்கள் தொடர்பில் நீதிமன்றத்தில் விடயங்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர், சைக்கிள்களுக்கு மின்குமிழ்களை பொருத்துவதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இரவு நேரங்களில் ஏற்படும் வாகன விபத்துக்களை தடுப்பதற்காகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என்று ஏறாவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சுட்டிக்காட்டினார்.

## மேய்ச்சல் தரையாக மாறிய விளையாட்டு மைதானம்

நற்பிட்டிமுனை அஷ்ரப் விளை யாட்டு மைதானம் மாடுகள் மேயும் மேய்ச்சல் தரையாக மாறியுள்ளது.


உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லாவால் 49 லட்சம் ரூபா நிதியில் கட்டிமுடிக்கப்பட்ட அஷ்ரப் விளையாட்டு மைதான பார்வையாளர் அரங்கு இரண்டு வருடங்கள் கடந்தும் இன்னும் விளையாட்டு வீரர்களின் பாவனைக்கு பயன்படுத்தப்படாமல் இருந்து வருகின்றது.

இந்தப் பார்வையாளர் அரங்கில் சமூகத்துக்கு முரணான செயல்கள் இடம்பெற்று வருகின்றன.

விளையாட அமைத்த அரங்கு மது.சூது என் பவற்றுக்கான பிரதான நிலையமாக மாறியுள்ளது.

இவற்றுக்கெல்லாம் பொறுப்புக் கூறவேண்டிய கல்முனை மாந கர சபை நிர்வாகம் பொறுப்பற்ற முறையில் நடந்து வருகின்றது என்று மக்கள் கூறுகின்றனர்.

எனவே இந்த மைதானம் குறித்து உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)



## வெளிநாட்டு தலைவர்களின் மட்டக்களப்பு வருகை ரத்து

மட்டக்களப்பு.நவ.14

மட்டக்களப்புக்கு நேற்று புதன்கிழமை வருகைதர விருந்த பொதுநலவாய மாநாட்டின் அரச தலைவர்களின் பயணம் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளும் இருபது நாடுகளின் அரச தலைவர்கள் மட்டக்களப்புக்கு நேற்று மாலை வருகை தந்து இரண்டு தினங்கள் மட்டக்களப்பில் தங்கியிருந்து மாவட்டத்தின் பல்வேறு இடங்களுக்கும் சென்று பார்வையிடவிருந்தனர்.

இந்தநிலையில், அவர்களின் வருகை ரத்துச்செய்யப்பட்டுள்ளது என்று செவ்வாய்க்கிழமை மாலை அறிவிக்கப் பட்டுள்ளது.

மட்டக்களப்புக்கு வருகை தரவிருந்த பொதுநலவாய மாநாட்டு அரச தலைவர்களின் வருகையை யொட்டி மட்டக்களப்பு மாவட்ட செயலகம் மற்றும் சிவில் சமூக அமைப்பு என்பன ஏற்பாடுகளை செய்திருந்தன.

இந்த நிலையில் அவர்களின் வருகை ரத்து செய்யப்பட்டமை தமக்கு கவலை அளித்துள்ளது என்று ஏற்பட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

ஏற்கனவே மட்டக்களப்புக்கு இளவரசர் சாள்ஸ் உட்பட வெளிநாட்டு அரச தலைவர்கள் வருகை தருவதாக இருந்தது.

இதனையொட்டி இலங்கையிலுள்ள பிரிட்டன் தூதர் மற்றும் பொதுநலவாய மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் மட்டக்களப்புக்கு வருகை தந்து பார்வையிட்டுச் சென்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# மஹிந்த அரசைக் காப்பாற்ற ஒருபோதும் முயற்சிக்காதீர்!

## கமலேஷ் சர்மாவிடம் மனோ கணேசன் வேண்டுகோள்



இனி எதிர்காலத்திலும் இலங்கை அரசைக் காப்பாற்றும் முயற்சியில் கமலேஷ் சர்மா இறங்கக்கூடாது. செயலாளர் நாயகம் என்ற முறையில் அவர் பொதுநலவாய அமைப்புக்குப் பொறுப்பு கூற வேண்டுமே தவிர இலங்கை அரசுக்கு அல்ல.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்தும் இயக்கத்தின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று கொழும்பில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுநலவாய கொள்கை பிரகடனத்தில் பதினாறு அடிப்படை விதிகள் உள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமான விதிகளான ஜனநாயகம், மனித உரிமைகள், மத சுதந்திரத்தை வலியுறுத்தும் சகிப்புத் தன்மை, பேச்சு சுதந்திரம், நீதி - நாடாளுமன்றம் - நிர்வாகம் ஆகியவற்றின் பரஸ்பர சுதந்திரம், சட்டத்தின் ஆட்சி, நல்லாட்சி, சுகாதாரம் -கல்வி - குடிதண்ணீர் ஆகிவற்றுக்கான உரிமை ஆகிய எட்டு விடயங்கள் தொடர்பில் இந்த மஹிந்த அரசின் கறைபடிந்த வரலாற்றை செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா கழுவி சுண்ணாம்பு அடித்து சுத்தப்படுத்த முனையக் கூடாது.

பொதுநலவாய கொள்கைகளை அமுல் செய்யும்படி ஏனைய பொதுநலவாய நாடுகளுக்கு உபதேசம் செய்ய முன் தனது சொந்த நாட்டில் அவற்றை அமுல்செய்து உலகத்துக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ளும்படியும், இவற்றுக்கு முதற்படியாக கற்றுக்கொண்ட ஆணைக்குழு பரிந்துரைகளை முழுமையாக அமுல் செய்யும்படியும், பொதுநலவாயத்தின் புதிய தலைவரான மஹிந்த ராஜபக்ஷவை கமலேஷ் சர்மா வலியுறுத்த வேண்டும் எனவும் நாம் கோருகிறோம்.

இந்தப் பணியிலிருந்து கமலேஷ் சர்மா தவறுவாராயின், புதிய தலைவர் மட்டும் அல்ல, கமலேஷ் சர்மாவும் தனது பதவிலிருந்து விலகி வீடு போக வேண்டி வரும்.

இந்த நாட்டில் இடம்பெற்ற இறுதிப் போரின் போது தமிழ் மக்களை காப்பாற்றுவதில் ஐ.நா. தவறிவிட்டது என ஐநா செயலாளர் நாயகம் பகிரங்கமாக ஒப்புக்கொண்டுள்ளார். அதாவது இந்த நாட்டில் போர்க் குற்றம் இழைக்கப்பட்டுள்ளது என அவர் கோடிட்டு காட்டுகின்றார். சனல் - 4 தொலைகாட்சியில் காட்டப்பட காணொலிகள், படுகொலைகள், காணாமற்போனோர், தடுத்து வைகப்பட்டுள்ளோர் ஆகிய விவகாரங்கள் பற்றி விசாரிக்கப்பட வேண்டும் என நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இதைச் செய்வதாக அரசு ஐ.நா மனித உரிமை பேரவை கூட்டத்தில் இலங்கை அரச பிரதிநிதிகள் ஏற்றுகொண்டனர்.

ஆனால், இந்த ஊடக மாநாடு நடக்கும் இவ்வேளையில் கூட கொழும்பில் நடக்கும் நிகழ்வில் கலந்துகொள்ள வடக்கில் இருந்து வந்து கொண்டிருந்த காணாமற்போனோரின் உறவினர்கள் மதவாச்சியில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளார்கள். அதேபோல் இலங்கைக்குள் விசா வாங்கி கொண்டு வந்துள்ள சனல் - 4 தொலைக்காட்சி ஊடகவியலாளர் கெலும் மெக்ரே வடக்கு நோக்கி செல்லும்போது அனுராதபுரத்தில் தடுக்கப்பட்டுள்ளார்.

இவை என்ன? இந்த நாட்டில் மனித உரிமை, பேச்சு சுதந்திரம், ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி ஆகியவை இருக்கின்றனவா? பொதுநலவாயத்தின் 53 நாடுகளுக்கும், பொதுநலவாய பிரகடனத்தில் அடங்கியுள்ள பல்வேறு கொள்கை விதிகளை அமுல்செய்யும்படி கூற வேண்டிய இந்த அமைப்பின் புதிய தலைமை நாடான இலங்கை, தலைமை பதவியை ஏற்றுக்கொள்ளப் போகும் இன்றைய வேளையிலேயே பொதுநலவாய கொள்கை பிர கடனத்தை அப்பட்டமாக மீறுகிறது. இந்த நிலைமைக்கு பிரதான



பொறுப்பை கமலேஷ் சர்மா ஏற்றுகொள்ள வேண்டும்.

புதிய தலைமை நாடான இலங்கையை, தனது சொந்த நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை பரிந்துரைகளை அமுல் செய்யும்படியும், பொதுநலவாய கொள்கை பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளின் படி நாட்டை நடத்தி செல்லும்படியும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு கமலேஷ் சர்மா அறிவுரை கூற வேண்டும். இது நடக்காவிட்டால் தலைவரும், செயலாளர் நாயகமும் பதவி விலக வெண்டும் - என்றார்.

# வெல்லம்பிட்டியில் ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள் அச்சகம் சுற்றிவளைப்பு

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இருவர் உட்பட நால்வர் கைது

ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களைப் பெருமளவில் அச்சிட்டு விநியோகம் செய்து வந்த கும்பலொன்று வெல்லம்பிட்டிய பகுதியில் கடந்த திங்கட்கிழமை பேலியகொடை தலைமையகப் பொலிஸ் குழுவினரால் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரில் ஒருவர் ஏற்கனவே போலி நாணயத்தாள் விவகாரத்தில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு அண்மையில் பிணையில் வெளிவந்தவர் எனத் தெரியவருகிறது.

இந்தச் சுற்றிவளைப்பின் போது 15 ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்கள், ஒரு லேசர் அச்சியந்திரம், ஒரு மடிக் கணினி விசேட கடதாசி, விசேட பேனைகள் இரண்டு ஆகியவை மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளின் போது தெரியவந்தவை வருமாறு:-

கடந்த திங்கட்கிழமை மாலை களனிப் பகுதியிலுள்ள ஒரு சூதாட்ட விடுதிக்கு வந்த நால்வர் சூதாட்டத்துக்காக ஏழு ஆயிரம் ரூபா நாணயத்தாள்களை அங்கிருந்த பெண் காசாளரிடம் கொடுத்திருக்கின்றனர்.

அந்தப் பெண் அவை போலி நாணயத்தாள்கள் எனத் திருப்பிக் கொடுத்திருக்கிறார். அதையடுத்து, அந்தப் பெண் பேலியகொடைப் பொலிஸாருக்கு இரகசியமாகத் தகவல் கொடுத்ததும் சூதாட்ட விடுதிக்கு விரைந்து வந்த பொலிஸ் குழு நால்வரையும் கைதுசெய்தது.

கைதுசெய்யப்பட்ட நால்வரில் இருவர் வெல்லம்பிட்டியிலுள்ள சைவ ஹோட்டலொன்றை நடத்தும் சகோதரர்கள் எனவும் ஏனைய இருவரும் கிராண்ட்பாஸ் நவகம்புர பிதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

கைப்பற்றப்பட்ட ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள்களில் ஏழு நாணயத்தாள்களில் S/50 989153 எனும் இலக்கமும் எட்டு நாணயத் தாள்களில் S/12 103247 என்ற இலக்கமும் பதிவாகியிருந்தன.

சுற்றிவளைக்கப்பட்ட வீட்டின் உரிமையாளர் நீண்டகாலமாகப் போலி நாணயத்தாள் வியாபாரத்தில் ஈடுபட்டவர் எனவும் சுற்றிவளைப்பின் போது தப்பிச்சென்ற அவரைத் தேடிப்பிடிக்க தீவிர நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பேலியகொடை பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி ஜீ.யூ.பாலசூரியவின் தலைமையில் மேலதிக விசாரணைகள் நடைபெற்றுவருகின்றன.

# கறுப்புப் புகைவிடும் 3 ஆயிரம் வாகனங்கள் கறுப்புப் பட்டியலில்

## மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தகவல்

கடந்த ஒன்பது மாதக் காலப் பகுதியில் நிர்ணயிக்கப்பட்ட அளவுக்கு அதிகமாகக் கறுப்புப் புகையை வெளியேற்றும் 3 ஆயிரம் வாகனங்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாக மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள வாகனங்கள் திருத்தப்பட்டு மீண்டும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் பரிசீலனைக்குக் கொண்டுவரப்படவேண்டும். பரிசீலனையின்போது திருப்திகரமான விளைவு தென்பட்டால் கறுப்புப் பட்டியலிலிருந்து அந்த வாகனங்கள் நீக்கப்படும். அதுவரை அப்பட்டியலில் உள்ள வாகனங்கள் சம்பந்தமான எந்தவித அலுவலையும் எமது திணைக்களம் இடைநிறுத்திவைக்கும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் ஆணையாளர் எஸ்.எச்.ஹரிச்சந்திர தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்ட வாகனங்களில் வான்கள் முதலிடம் பிடிக்கின்றன. அதற்கடுத்து பஸ், லொறி, ட்ரக் ஆகியவை உள்ளன. சுற்றாடலை மாசுபடுத்தும் வகையில் நிர்ணயம் செய்யப்பட்ட அளவைவிட அதிகமாகப் புகைவிடும் வாகனங்கள் மீதான பரிசோதனையை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களமும், மத்திய சுற்றாடல் பாதுகாப்புச் சபையும், பொலிஸாரும் கூட்டாக மேற்கொள்கின்றனர்.

பிடிபடும் வாகனங்கள் இரு வார காலத்தில் பழுது பார்க் கப்பட்டு திணைக்களத்தின் பரிசோதனைக்கு உட்படுத்த அவகாசம் வழங்கப்படுகின்றது.

கடந்த வருடம் 4 ஆயிரம் வாகனங்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டன.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மேலும் மூவருக்கு விளக்கமறியல்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையப் பூமியில் தரைக்குக் கீழ் புதைக்கப்பட்டிருந்த மூன்று கோடி ரூபா பெறுமதியான வயர்களைத் திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட மேலும் மூவரை நாளை வரை (15ஆம் திகதி) விளக்கமறியலில் வைக்குமாறு நீர்கொழும்பு பிரதம நீதிவான் என்.பீ.அமரதுங்க உத்தரவிட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்ட மூவரும் கட்டுநாயக்க விமான நிலையம் மற்றும் சிவில் விமானசேவையைச் சேர்ந்த சிற்றூழியர்கள் எனவும், அவர்கள் வரக்காபொல, நெலும்தெனிய, சீதுவை ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் தெரியவருகின்றது.

இந்தத் திருட்டுச் சம்பவத்தில் ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட விமான நிலையப் பொலிஸ் பிரிவின் கான்ஸ்டபிள் ஒருவரும் சிவில் விமான சேவை அதிகாரசபையின் சாரதியொருவரும் நாளை வரை (15ஆம் திகதி) விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையப் பூமியில் புதைக்கப்பட்டிருந்த எட்டு அங்குல விட்டமுள்ள மின் வயர்களை சந்தேகநபர்கள் வெட்டித் திருடியுள்ளனர் எனவும், அந்த வயர்களுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கவில்லை எனவும் இது தொடர்பில் விசாரணை நடத்திய புலனாய்வுப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருடிய வயர்களை அவ்வப்போது கொஞ்சம் கொஞ்சமாக வெட்டி இவர்கள் விற்றுப் பணமாக்கியுள்ளனர் எனவும் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

# புற்றுநோய் வைத்தியசாலை மருந்துத் திருட்டில் சம்பந்தப்பட் நிறுவனத்தின் பதிவு இரத்து

## மருந்து இறக்குமதிக்கும் முற்றாகத் தடை

மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் உள்ள சிறுவர்களுக்கு வழங்கப்படும் விலையுயர்ந்த மருந்தைத் திருடிய மருந்தாளர்களுக்கு உடந்தையாகச் செயற்பட்ட பிரபல மருந்து நிறுவனத்தின் பதிவை தற்காலிகமாக இடைநிறுத்துவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால, மருத்துவ உபகரணங்கள் மற்றும் தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பெளரகமவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இந்த இடைநிறுத்தம் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன், குறிப்பிட்ட மருந்து நிறுவனம் தற்சமயம் இறக்குமதி செய்து விநியோ கிக்கும் 12 வகை மருந்துகளையும் மறு அறிவித்தல் வரை இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

நோயாளிச் சிறுவர்களுக்கு வழங்கப்படும் விலையுயர்ந்த மருந்துக்குப்பிகளைத் திருடி இதே நிறுவனத்துக்கு விற்றமை, மீண்டும் அதே குப்பிகள் மீள் விநியோகம் செய்யப்பட்டமை தொடர்பில் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் ஐந்து மருந்தாளர்கள் அண்மையில் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

# மகளை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகத்துக்கு அனுப்புவதாகக் கூறி தாயிடம் 13 இலட்சம் ரூபா மோசடி

ஆஸ்திரேலியாவிலுள்ள பல்கலைக்கழகத்தில் மகளுக்கு அனுமதி பெற்றுக் கொடுப்பதாகக் கூறி அவளது தாயிடம் 13 இலட்சம் ரூபாவை மோசடி செய்த நபரொருவரைக் கண்டிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுக்கும் ஏனைய கல்வி நிறுவனங்களுக்கும் இந்நாட்டு மாணவர்களை அனுப்பும் தொழிலில் நீண்டகாலமாக ஈடுபட்டிருந்தவர் எனவும் இந்த யுவதியின் விடயத்தில் அவர் கொடுத்த உறுதி மொழியை நிறைவேற்றத் தவறியுள்ளதுடன், வாங்கிய பணத்தைத் திருப்பித் தரவில்லையென தாய் கண்டி பொலிஸில் முறைப்பாடு செய்ததையடுத்து சந்தேகநபர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெறுவதாகக் கண்டி பொலிஸார் தெரிவித்தனர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கொழும்பு பொதுநலவாய மாநாடு மூன்றாவது நாடும் பகிஷ்கரிப்பில்...

பொதுநலவாய மாநாடு கொழும்பில் நாளை நடைபெற ஏற்பாடாகி உள்ள நிலையில், மூன்றாவது நாடும் அதனைப் பகிஷ்கரிக்கப் போவதாக அறிவித்துள்ளது.

மொத்த சனத்தொகையில் தமிழ் மக்களைப் பத்துச் சதவீதம் கொண்டுள்ள மொரிசியஸ் நாடே இந்த மாநாட்டைப் பகிஷ்கரிக்கப்போகிறது.

இறுதிநேரத்தில் அந்த நாட்டின் பிரதமர் ராம் குலாம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். அது இலங்கைக்கு பேரிடிக்கு மேல் பேரிடியாக அமைந்துள்ளது.

1968 ஆம் ஆண்டு முதல் மொரிசியஸ் தொடர்ச்சியாக பொதுநலவாய மாநாட்டில் பங்குபற்றி வருகிறது. 2015 ஆம் ஆண்டு மாநாடு மொரிசியஸில்தான் நடைபெற இருக்கிறது. அதாவது அடுத்த மாநாட்டை நடத்தப் போகும் நாடும் அதுவே.

சமீப நாள்களாக கனடா, பிரிட்டன், இந்தியா ஆகிய நாடுகளில் இருந்துதான் பகிஷ்கரிப்பு அச்சுறுத்தல்கள் வந்தன. இந்த நாடுகளில் கனடாப் பிரதமர் வில்லியம் ஹார்பர், தாம் மாநாட்டைப் பகிஷ்கரிக்கப் போவதாக முதலில் அறிவித்து விட்டார்.

மனித உரிமைகள் தொடர்பான நாடாளுமன்றச் செயலாளர் தீபக் ஒப்ராய் தலைமையில் மிகவும் குறைந்த மட்டத்திலான குழுவை கனடா மாநாட்டுக்கு அனுப்பியுள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரூன் கலந்து கொள்வதற்கு பிரிட்டனிலும் புலம்பெயர் தமிழர்கள் வாழும் நாடுகளிலும் கடுமையான எதிர்ப்பு இருந்தது. இலங்கையின் மனித உரிமை மீறல்களை பிரிட்டிஷ் பிரதமர் பகிரங்கமாகக் கண்டித்தார். எனினும், பகிஷ்கரிப்புக் கோரிக்கையை ஏற்க மறுத்துவிட்டார்.

இன்று கொழும்பு வரும் பிரிட்டிஷ் பிரதமர் கமரூன் இலங்கை அரசுக்கு இறுக்க மான செய்தி ஒன்றை விடுக்கப் போவதாக லண்டனில் வைத்துத் தெரிவித்திருக்கிறார். சனல்- 4 ஊடகவியலாளர்கள் இலங்கைக்கு ஏற்கனவே வந்துள்ளனர். இலங்கை மீது அவர்கள் பகிரங்கமாக போர்க் குற்றச்சாட்டுகளைத் தெரிவித்தமையால், மாநாட்டில் பிரிட்டனின் பங்களிப்பு இலங்கைக்குச் சவாலாகவே உயரப்போகிறது.

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் போரின் இறுதிப் பகுதியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மனிதஉரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் குறித்து இலங்கை அரசின் மீது பகிரங்கமாகக் குற்றம் சுமத்துவதைத் தவிர்த்து வருகிறார். இறுதிப் போரில் விடுதலைப் புலிகளைத் தோற்கடிப்பதில் இந்தியாவுக்கும் கணிசமான பங்கு இருந்ததால்.

இந்தியா மிகவும் அவதானமாகச் செயற்படுகிறது. மன்மோகன் சிங் மாநாட்டைப் பகிஷ்கரிப்பது இலங்கை - இந்திய நல்லுறவுகளைப் பாதிக்கும், பொருளாதார உறவுகளைப் பாதிக்கும் என்று இந்திய அமைதிப்படையின் புலனாய்வுப் பிரிவுத் தலைவர் ஹரிஹரன் உட்படப் பலர் விமர்சனங்களை வெளியிட்டுள்ள போதிலும், அடுத்த ஆண்டு மே மாதம் இந்தியாவில் தேர்தல் நடைபெறவிருப்ப தால் தமிழ்நாட்டின் உறவுக்கே முன்னுரிமை வழங்கியிருக்கிறார் மன்மோகன் சிங்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெறவுள்ள ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கைக்கு எதிராக மற்றொரு தீர்மானம் (மூன்றாவது தீர்மானம்) கொண்டுவரப்படும் பட்சத்தில், இந்தியா கடந்த இரு தீர்மானங்கள் தொடர்பாக நடந்துகொண்டது போலவே இனியும் நடந்துகொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவின் பகிஷ்கரிப்பு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று இலங்கை அரச தலைவர்கள் கூறுகிறார்கள். ஆனால், பொதுநலவாய உறுப்பு நாடுகளில் பெரிய நாடான இந்தியாவினதும், பொதுநலவாய அமைப்புக்கு நிதியுதவி அளிப்பதில் இரண்டாவது நாடான கனடாவினதும் பிரதமர்கள் கலந்துகொள்ளாமை இலங்கை அரசுக்கு பெரும் சங்கடத்தையும் இக்கட்டையும் ஏற்படுத்தியுள்ளது.

எதிர்காலத்தில் பொதுநலவாய அமைப்பு பலவீனமடைந்து விடலாம். அமைப்பைக் கொண்டுநடத்த முடியாது நிதி நெருக்கடி ஏற்படலாம். அத்துடன் அமைப்பினால் தண்டிக்கப்படும் உறுப்பு நாடுகள் அமைப்பிலிருந்து வெளியேறுவது தொடர்ந்தால், அமைப்பின் நோக்கங்கள் அர்த்தமற்றவையாகி விடலாம். இவை பொதுநலவாய அமைப்பின் எதிர்காலம் குறித்து பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளது.

அதுமட்டுமன்றி, தற்போதைய பொதுநலவாய நாடுகள் மாநாடு இலங்கைக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். போரின் இறுதிப்பகுதியில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு இலங்கை அரசு பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளது. இலங்கையில் மனித உரிமைகளை மேம்படுத்த வேண்டிய கடப்பாடும் அதற்கு உண்டு என்பதனை இப்போதைய அரசு மனங்கொள்ளப்போவது எப்போது?

# இந்திராகாந்தியும் மன்மோகன் சிங்கும்

ராஜராஜன்

பொதுநலவாய நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் இலங்கைக்கு வர மாட்டார் என்பது உறுதியாகிவிட்டது. பல வாரங்களாக நிலவிய இழுபறி நிலைக்கு தற்போது முடிவு கட்டப்பட்டு விட்டது.

ஆனால் பிரதமரின் இந்த முடிவினால் ஈழத்தமிழர்கள் மகிழ்ச்சி அடைவதில் அர்த்தமே இல்லை. ஏனென்றால் மன்மோகனின் வருகை தடைப்பட்டதற்கான காரணங்களே வேறு. அடுத்த ஆண்டு இடம்பெறவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலை ஒட்டியதாகவே அவரது முடிவு அமைந்துள்ளது. மாறாக ஈழத் தமிழர் மீதான அனுதாபத்தினால் இது ஏற்பட்டதாகக் கூறுவதில் எவ்வித உண்மையுமில்லை. ஏனென்றால் மன்மோகன் சிங் சுயமாகச் சிந்தித்து முடிவெடுத்து வெகு நாள்களாகி விட்டன.

### இலங்கையின் மிரட்டல்களுக்குப் பணியாதவர்

மறைந்த இந்திய முன்னாள் பிரதமரான இந்திராகாந்தி அம்மையார் பிறப்பில் ஹிந்தி பேசும் இனத்தைச் சேர்ந்தவர். நேரு குடும்பத்தைச் சேர்ந்தவர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. இவரும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்தான். ஆனால் இலங்கையின் மிரட் டல்களுக்கெல்லாம் அவர் மருண்டு போய்விடவில்லை. இலங்கையைப் பகைப்பதால் இந்தியாவின் பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்பட்டுவிடுமோ என்றும் அவர் அஞ்சியதில்லை. இலங்கை நாட்டின் ஆட்சியாளர்களின் கபடத்தனங்களையும், வஞ்சக எண்ணங்களையும் இவர் நன்கு புரிந்து கொண்டதால் அவற்றை முறியடிப்பதற்கான வியூகங்களையே வகுத்தார். இலங்கையைப் பகைத்துக் கொண்டால் சீன வல்லரசு இலங்கையில் கால் பதித்து விடுமோ என்ற பயமும் அவரிடம் இல்லாததால் சுதந்திரமான வகையில் கொள்கைகளை வகுத்து அதற்கு ஏற்றாற்போன்று செயற்பட்டார்.

### இந்திராகாந்தி உயிரோடு இருந்திருந்தால் தமிழரின் தலைவிதி மாறியிருக்கும்

இலங்கையைச் சேர்ந்த தமிழ்ப் போராளிகள் இந்தியாவில் பயிற்சிபெற்றதுடன் சுதந்திரமாக உலாவக் கூடிய நிலை இந்திரா அம்மையார் பிரதமராக இருந்த போதே காணப்பட்டது. இந்திராவின் காலத்தில் இலங்கையால் அடக்கி வாசிக்கவே முடிந்தது. தற்போது உள்ளதைப் போன்று சீனாவைச் சுட்டிக்காட்டி காரியங்களைச் சாதிக்கவும் அதனால் முடியவில்லை. 1971 இல் பாகிஸ்தானிலிருந்து வங்காளதேசம் பிரிக்கப்பட்டதைப் போன்றதொரு நிலை இங்கு ஏற்பட்டு விடுமோ என்ற அச்சமும் இலங்கை ஆட்சியாளர்களிடம் காணப்பட்டது. 1983 இல் ஈழத் தமிழர்களுக்கு எதிரான வரலாறு காணாத கொடுமைகள் ஆட்சியாளர்களின் பேராதரவுடன் இங்கு அரங்கேறியபோது அப்போது வெளி விவகார அமைச்சராகப் பதவி வகித்த நரசிம்மராவை இந்திரா அம்மையார் இலங்கைக்கு அனுப்பி வைத்து வன்செயல்களின் கொடுமையைத் தணிப் பதற்கு முயற்சி எடுத்தார். அவர் இன்று உயிரோடு இருந்திருந்தால் ஈழத் தமிழர்களின் நிலை வேறாக இருந்திருக்கும். அதற்குக் கூட ஈழத் தமிழர்களுக்கு கொடுத்து வைக்கவில்லை. 1984 ஆம் ஆண்டு அவர் கொலை செய்யப்பட்டார். அவரது மறைவுக்குப் பின்னர் ஈழத் தமிழர் மீதான இந்திய நாட்டின் போக்கில் பெரும் மாறுதல்கள் தோன்ற ஆரம்பித்தன. ராஜீவ் காந்தியில் இருந்து தற்போதைய பிரதமர் வரை அது நீடிக்கவே செய்கின்றது.





### சுதந்திரமாகச் செயல்பட முடியாதவர்

தற்போது பிரதமர் பதவியை வகிக்கும் மன்மோகன்சிங் சுதந்திரமாகச் செயற்படும் திராணியற்றவராகவே காணப்படுகின்றார். சீக்கிய சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த இவர், சோனியா காந்தியின் நம்பிக்கைக்கு உரியவர் என்ற வகையில் பிரதமர் பதவியில் தொடர்ந்து அமர்ந்திருக்கின்றார். இத்தாலியில் பிறந்தவரான சோனியா பிரதமராவதற்குப் பலத்த எதிர்ப்புக் கிளம்பியதால், தனக்கு மாற்றாக மன்மோகனை நியமித்து அவரை இயக்கியும் வருகின்றார் சோனியா. இதனால் தற்போதைய இந்தியப் பிரதமரிடம் சோனியா குடும்பத்துக்கு எதிரான சிந்தனை யைக் கூட நாம் எதிர்பார்க்க முடியாது.

இறுதிப் போரின்போது இந்திய வெளி விவகார அமைச்சராக அப்போதிருந்த பிரணாப் முகர்சி இலங்கைக்கு அடிக்கடி வந்து சென்றார். இந்திராவின் காலத்தில் நரசிம்மராவ் வந்ததற்கும், இவரது வருகைக்குமிடையே மலைக்கும், மடுவுக்குமுள்ள வேறுபாடு காணப்பட்டது. முன்னவர் கலவரத்தைத் தணிப்பதற்கு இங்கு வந்தார். பின்னவர் போரைத் தீவிரமாக்குமாறு ஆலோசனை வழங்கவென வருகை தந்தார். பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்களின் அழிவுகள் கூட இந்திய அரசின் இதயத்தில் சுட்டதில்லை. மாறாகக் களிப்பையே ஏற்படுத்தியது.

### காத்திருப்பதில் பயனில்லை

இந்த நிலையில் இந்தியா உதவுமென இனியும் ஈழத் தமிழர் காத்திருப்பதில் பயன் எதுவும் கிடைக்கப் போவதில்லை. இந்த நிலையில் மன்மோகன் சிங் இங்கு வருகை தருவதால், ஈழத் தமிழர்களுக்கு ஏதோ விமோசனம் கிடைத்துவிடுமென சிலர் கூறுவதைக் கருத்தில் கொள்வதுகூட பயனற்றதொரு செயலாகவே இருக்கும்.

இந்தியா சுமார் 40 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான நலத்திட்டங்களைப் போரினால் பாதிக்கப்பட்ட ஈழத் தமிழர்களுக்காகச் செயற்படுத்தி வருவதாகவும் காட்டப்படுகிறது. போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென நடைமுறைப்படுத்தப் படும் இந்திய வீட்டுத் திட்டம் கூட பாதிக்கப்பட்ட மக்களுக்கு முழு அளவில் பயன்படாது அவர்களை வதைப் பதாகவே தெரிகின்றது.

### இந்திய வீட்டுத்திட்டத்திலும் குளறுபடி

சுமார் 10 லட்சம் ரூபா செலவை ஏற்படுத்தும் வீட்டுத் திட்டத்தை 8 லட்சம் ரூபாவுக்குள் முடக்குமாறு கூறிவிட்டு 5 லட்சத்து 50 ஆயிரம் ரூபா மட்டுமே வழங்கப்படும் எனத் தெரிவிப்பது எந்த வகையில் நியாயம் என்பது எவருக்குமே தெரியவில்லை. மீதிப் பணத்துக்கு அவர்கள் எங்கே போவார்கள் என்ற சிந்தனை கூட உரிய அதிகாரிகளிடம் இருப்பதாகத் தெரிய வில்லை. இந்திய வீட்டுத் திட்டத்தில் உள்வாங் கப்பட்ட பலரும் நிம்மதியிழந்த நிலையில் உள்ளதைக் காண முடிகின்றது. ஒரு திட்டத்தை ஆரம்பித்து விட்டால் அதற்கான செலவு முழுவதையும் வழங்குவது தான் நியாயமானது. ஆனால் இந்திய அரசு இதனைத் துளியளவு கூட சிந்திப்ப தாகத் தெரிய வில்லை.

மேலும் வசதி படைத்த சிலர் ஏதோ ஒரு வகையில் இந்திய வீட்டுத் திட்டத்தில் உள் நுழைந்து அங்கு கிடைக்கும் பணத்துடன் தமது சொந்தப் பணத்தையும் செலவிட்டு வீடுகளை அமைத்துவிட்டு இதுதான் இந்தியன் வீடு எனக்கூறுவது தமக்கு வேதனையை ஏற்படுத்துவதாகப் பாதிக்கப்படுபவர்கள் கூறுகின்றனர். ஒரு வீட்டை அமைப்பதற்குத் தேவையான நிதியை வழங்குவதற்குக் கூட இந்திய அரசுக்கு மனம் வரவில்லை. இந்த நிலையில் ஒட்டுமொத்த ஈழத் தமிழரின் துயரங்க ளைத் துடைப்பதற்கான தகுதியும், விருப்பமும் அவர்களிடம் இருக்குமென எதிர்பார்ப்பது வெறும் பகற்கனவே யாகும்.

### போர்க்குற்றவிடயத்தில் தொடர்ந்து மௌனம் காக்கும் இந்தியா

இறுதிப் போரின்போது இலங்கையிலே இடம்பெற்ற படுகொலை அவலங்களையும், அழிவுகளையும், கொடுமைகளையும் கண்டு சர்வதேசமே கலங்கி நிற்கும் போது இந்தியா தொடர்ந்து மௌனம் சாதித்து வருகின்றது. போர்க் குற்றங்களில் தானுமொரு பங்காளி என்ற வகையில் இதற்கு முக்கியத்துவம் கொடுப்பதை இந்தியா விரும்பவில்லை. மேலும் இலங்கைக்கு எந்த வகையிலாவது தண்டனை கிடைக்கும்போது அது தன்னையும் பாதிக்கும் என்ற அச்சமும் நிறையவே இந்தியாவிடம் உள்ளது. தற்போது ஒரு போர்க் குற்றவாளி என்ற நிலையில் இந்தியா உள்ளதை எவருமே மறுக்க முடியாது. ஏனென்றால் இறுதிப் போரின் சூத்திரதாரியாக இந்தியாவே செயற்பட்டது. இந்தியா வழங்கிய ஆதரவு போரைத் தீவிரமாக முன்னெடுக்கும். இலங்கை ஆட்சியாளர்களுக்குத் துணிவை ஏற்படுத்தியது. நாம் தமிழர்களுக்கு எதிராக எதனைச் செய்தாலும் இந்தியா அதனைக் கண்டு கொள்ளாது என்ற நம்பிக்கை நிறையவே அவர்களின் மனங்களில் குடிகொண்டிருந்தது. ஈழத் தமிழர்களின் அழிவுக்கும் இதுவே வழிகோலியது. ஆனால் இவற்றை எல்லாம் இந்திய அரசு கண்டு கொள்ளவில்லை. கொல்லப்பட்ட ஒவ்வொரு தமிழனும் விடுதலைப் புலியாகவே அவர்களின் கண்களுக்குத் தெரிந்தனர்.


இந்த நிலையில் ஈழத் தமிழர்களை அறவே வெறுத்து ஒதுக்கும் சோனியாவின் தயவில் ஆட்சியில் நீடிக்கும் மன்மோகன்சிங் தமக்கு உதவுவாரென ஈழத் தமிழர்கள் இனியும் நம்பிக் கொண்டிருந்தால் அதைவிட வேறொரு முட்டாள்தனம் இருக்கவே முடியாது. இந்தியா வேறு மன்மோகன் வேறு என்பதுதான் இன்றைய யதார்த்த மாகும்.

# நீரிழிவு நோயை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் சிறுநீரக செயலிழப்பைத் தவிர்க்க முடியும்

சர்வதேச நீரிழிவு தினம்
நவ. 14

Dr. ச.முருகானந்தன்

நவீன உலகில் உடலுழைப்பற்ற வாழ்க்கை முறையினால் இன்றைய மனிதன் பலவித சிக்கல்களை எதிர்கொள்கிறான். இன்று அதிகம் பேசப்படும் நோய்களில் ஒன்றாக சிறுநீரக செயலிழப்பு விளங்குகின்றது. இந்த நோய்த் தாக்கத்தின் தீவிரத் தன்மையும், சிகிச்சையளிப்பதில் எதிர்கொள்ளும் சிரமமும், செலவும், அதிகரித்த சாவு அச்சுறுத்தலும் சிறுநீரக செயலிழப்பு நோய் பற்றிய அதிக கவனவீர்ப்பை ஏற்படுத்தியுள்ளது எனலாம்.





அதிகரித்த நீரிழிவு நோயாளர்கள் மற்றும் உயர் குருதி அழுத்த நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் சிறுநீரக செயலிழப்பு நோயாளர்களினது எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்து வருகின்றது. இவற்றை விட சூழல் மாசினால் ஏற்படும் காரணிகளும் சிறுநீரக செயலிழப்புக்கு வித்திடுகின்றன. இரசாயனக் கலப்புள்ள தூய்மையற்ற நீர், கிருமிநாசினிகள் இரசாயனப் பதார்த்தங்களால் மாசுபட்ட உணவுப் பொருள்கள், மரக்கறி பழவகைகள் முதலானவையும் சிறுநீரகங்களைப் பாதிக்கின்றன.

நாம் உண்ணும் உணவின் ஊட்டங்களின் கழிவுகளும், உடற் சிதைவின் கழிவுகளும் உடற் தொழிற்பாடுகளின் போது ஏற்படுவதை அறிவீர்கள். இவை மனித உடலுக்கு வேண்டப்படாதவை மாத்திரமன்றி, உடலுக்குத் தீமை விளைவிக்கக் கூடியன. இக் கழிவுகள் குருதிச் சுற்றில் சேரும் போது அவற்றைப் பிரித்தெடுத்து வெளியேற்றி மனிதரைக் காக்கும் முக்கியமான உறுப்பு சிறுநீரகமாகும். சிறுநீர்த் தொகுதியின் பிரதான உறுப்பான சிறுநீரகம் (KIDNEY) அல்லும் பகலும் அயராது செயற்படுகின்ற பிரதான உறுப்பு என்பதால் இதன் செயலிழப்பு மரணத்தை ஏற்படுத்தக் காரணமாகிறது.

கழிவகற்றல், மேலதிகமாக உடலின் தேவைக்கு ஏற்ப நீர் மற்றும் கனியுப்புகளைப் பேணுதல், இரத்த அழுத்தத்தைச் சீராக வைத்திருத்தல், செங்குருதிச் சிறுதுணிக்கைகளின் உற்பத்தியைத் தூண்டுதல், உடற்திரவத்தின் அளவையும் அதன் கார அமிலத் தன்மையையும் (PH VALUE) சீராக வைத்திருத்தல், எலும்புகளை உறுதிப்படுத்தல் போன்ற இதர பணிகளையும் சிறுநீரகம் செய்கிறது. ஒவ்வொரு மனிதரிலும் இரண்டு சிறுநீரகம் இருந்தாலும், ஒரு சிறுநீரகம் முழுமையாகச் செயற்பட்டாலேயே உடலுக்குப் போதுமானது. இதனாலேயே உயிரோடு இருக்கும் ஒருவரால் இன்னொருவருக்கும் சிறுநீரகத்தைத் தானமாக வழங்க முடிகின்றது.

நீண்ட கால கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயால் மனித உடலுக்கு மிகவும் பாரதூரமான நோய்கள் ஏற்படுவதை அறிந்திருப்பீர்கள். சிறுநீரகச் செயலிழப்பு, மாரடைப்பு, மூளையடைப்பும் பக்கவாதமும், கண் பார்வைக் குறைபாடு, புண்கள் மாறாமல் அங்க இழப்பு, கால் எரிவு, கர்ப்ப பிரசவ கால பிரச்சினைகள், உயர் குருதி அழுத்தம், அதிகரித்த கொலஸ்ரோல் எனப் பல பிரச்சினைகளை நீரிழிவு நோய் தோற்றுவிக்கக் கூடியது.

நீரிழிவால் ஏற்படும் சிறுநீரக செயலிழப்பை DIABETIC NEPHROPATHY என்றழைப்பர். கட்டுப்பாடற்ற நீரிழிவு நோயாளர்களில் இது மெது மெதுவாகவேஏற்படுகிறது. ஒருவரின் குருதி குளுக்கோசின் வெறும் வயிற்றில் கணிக்கும் அளவானது (To-110) Mg/dl என்ற அளவுக்குள் இருக்கும். நீரிழிவு நோயாளர்களில் இதன் அளவு அதிகரிக்கிறது. மருந்து, உணவுக் கட்டுப்பாடு, உடலுழைப்பு அல்லது அப்பியாசம் என்பவற்றால் குருதி குளுக்கோசின் அளவை உரிய கட்டுப்பாட்டில் வைத்திருந்தால் பாரதூரமான பாதிப்புக்கள் ஏற்படுவதில்லை. சிகிச்சையையும் ஆலோசனைகளையும் முறையாகக் கடைப்பிடித்தால் நீரிழிவு நோயாளர்கள் சுகதேகிகளாக வாழ முடியும். ஆரம்பத்தில் நீரிழிவு நோயாளர்களுக்கு பாரதூரமான அறிகுறிகள் வெளித் தெரியாதமையினால் பலரில் நீரிழிவு நோய் தற்செயலாகவே கண்டு பிடிக்கப்படுகிறது. நீரிழிவு நோய் உடலில் ஆரம்பித்து அந்நோயைக் கண்டு பிடிப்பதற்கு இடைப்பட்ட காலத்திலேயே உடலுறுப்புக்கள், குருதிக் குழாய்கள் என்பன பாதிப்படைய ஆரம்பிக்கின்றன. ஏற்கனவே பாதிப்படைந்தவற்றை மீளச் சீர் செய்தல் சிரமம். எனினும் நீரிழிவு நோயை இனங் கண்ட பின்னர் அதை உதாசீனம் செய்யாமல் சிகிச்சையைத் தொடர்ந்து செய்து நோயைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதன் மூலம் உடல் உறுப்புகளுக்கு மேலதிக பாதிப்பு ஏற்படுவதைத் தவிர்க்க முடியும்.

நீரிழிவு நோயைப் போலவே சிறுநீரக செயலிழப்புக்கும் ஆரம்பத்தில் நோயின் குணம் குறிகள் வெளித்தெரிவதில்லை. உரிய நேரத்தில் நோயை இனங் கண்டு சிகிச்சை பெற்றால் பாதிப்பு அதிகரிப்பதைத் தடுக்க முடியும். எனவே தான் நீரிழிவு நோயாளர்கள் தமது சிறுநீரகம், இதயம், கண் முதலானவற்றை வருடா வருடம் சோதிப்பது நல்லது. இவ் உறுப்புகளில் அல்லது இவற்றின் செயற்பாடுகளில் குறைபாடு தென்பட்டால் உடனடியாக அதற்குரிய சிகிச்சையை ஆரம்பித்து தொடர்வதனால் பாதிப்புகளைத் தவிர்க்க முடியும்.

சிறுநீரக செயலிழப்பின் குணம் குறிகள் சற்று தாமதமாகவே வெளித் தெரிகின்றன. சோர்வு, குமட்டல், வாந்தி, மெலிதல், எடை, குறைதல், சுறுசுறுப்பின்மை, பசியின்மை, அதிக தாகம், வீக்கம், இரவில் அதிக சிறுநீர் கழித்தல் போன்ற அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்திய ஆலோசனையை நாட வேண்டும். சிலருக்கு உடல் அரிப்பும் ஏற்படும்.


சிறுநீரக செயலிழப்பு ஆரம்பித்ததும் தேவையற்ற தீங்கான கழிவுப் பொருள்கள் உடலில் தேங்கத் தொடங்கிவிடும். உடற் தொழிற்பாடுகளின் போது ஏற்படும் கழிவுகள் உணவுக் கூறுகளின் கழிவுகள், உடற் தேய்மான கழிவுகள் என்பன முழுமையாக வெளியேற்றப்பட முடியாமல் தேங்க ஆரம்பிக்கும். யூரியா கிறியேற்றனின், யூரிக் அமிலம், பிலிறூபின் மற்றும் தீங்கான இரசாயனப் பொருள்கள் தேங்கும் போது உடலுள் நச்சுத் தன்மை அதிகரிக்கும். இவை தீவிரமடையும்போது உடலில் பல சிக்கல்கள் ஏற்பட்டு உடற் தொழிற்பாடுகளும் மந்தகதியாகி பாதிப்புகள் ஏற்படலாம். இதனால் சிறுநீரக கற்களும் சிறுநீரக தொற்றுகளும் ஏற்பட்டு சிறுநீரக செயலிழப்பு மேலும் தீவிரமடைந்து மரணத்திற்கும் இட்டுச் செல்லும். அதிலும் நீரிழிவுடன் உயர் குருதி அழுத்தமும் சேர்ந்திருப்பவர்களில் சிறுநீரக செயலிழப்பு துரிதமாக நிகழும்.

சிறுநீரக செயலிழப்பு நோயாளர்களில் கணிசமானோர், நோய் முற்றிய நிலையிலேயே சிகிச்சைக்கு வருவதால் மருத்துவ சிகிச்சை சிரமமாகிறது. தொடர்ச்சியான (DIALYSIS) சிகிச்சை மூலமே சிறுநீரகத்தை ஓரளவு செயற்பட வைக்கவும், கழிவுகளை மாற்று வழியில் அகற்றவும் முடிகிறது. தொடர்ந்து இதைச் செய்து வருவது சிரமம் என்பதால் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்படுகிறது. சிரமமானதும் அதிக செலவு பராமரிப்பு என்பன தேவையானதுமான சிறுநீரக மாற்றுச் சிகிச்சை மூலமே நோயாளரைக் காத்திட முடிகிறது.

சிறுநீரக நோய் ஏற்பட்டதாக இனங் காணப்பட்டவர்கள் உணவில் கட்டுப்பாடுகளைப் பேண வேண்டும். அதிக புரத உணவுகளை உட்கொள்ளலாகாது. பழவகை, மரக்கறி வகைகளை கூடுதலாகச் சேர்க்க வேண்டும். பிறநோய்களுக்கு மருந்து பாவிக்கும் போது வைத்திய ஆலோசனையுடனேயே பாவிக்க வேண்டும். சிறுநீரகப் பாதிப்பின் அளவை மதிப்பிட பரிசோதனைகளை இடையிடையேமேற்கொள்ள வேண்டும். அதற்கு ஏற்றவாறு வைத்திய ஆலோசனையுடன் சிகிச்சைகளை மேற்கொள்ள வேண்டும்.

மிகவும் சிக்கலான சிறுநீரக செயலிழப்பை வருமுன் காப்பதே சிறந்தது. நீரிழிவு நோயாளர்கள், உயர் குருதி அழுத்த நோயாளர்கள், சிறுநீரக கல் மற்றும் தொற்றுள்ள நோயாளர்கள் தமது நோய் நிலைகளுக்கு உரிய சிகிச்சை பெற்று சிறுநீரகத்தைச் செயலிழப்பு ஏற்படாவண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும். நீரிழிவு நோயாளர்களில் சிறுநீரக செயலிழப்பு ஆரம்பித்த பின் உயர் குருதி அழுத்தம், இதயச் செயலிழப்பு முதலான நோய்களும் ஏற்படும் சாத்தியம் உண்டு.

உலகெங்கும் அதிகரித்து வரும் பரவா நோயான நீரிழிவைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் பல கொடிய நோய்களிலிருந்து தப்ப முடியும்.




அதிகரித்த நீரிழிவு நோயாளர்களி னாலும் உயர் குருதி அழுத்த நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் சிறுநீரக செயலிழப்பு நோயாளர்களினதும் எண்ணிக்கையும் கணிசமாக அதிகரித்து வருகின்றது. இவற்றை விட சூழல் மாசினால் ஏற்படும் காரணிகளும் சிறுநீரக செயலிழப்புக்கு வித்திடுகின்றன. இரசாயனக் கலப்புள்ள, மற்றும் தூய்மையற்ற நீர், கிருமிநாசினிகள் இரசாயனப் பதார்த்தங்களால் மாசுபட்ட உணவுப் பொருள்கள், மரக்கறி பழவகைகள் முதலானவையும் சிறுநீரகங்களைப் பாதிக்கின்றன.

# மன்னிப்புச் சபையின் ஏற்பாட்டில் சுவிஸில் சனல் - 4 படக்காட்சி

## நீதி கோரி உலகளாவிய ரீதியில் பரப்புரை

சுவிஸ், நவ.14

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்கு நீதி கோரி சர்வதேச மன்னிப்புச் சபை உலகளாவிய ரீதியில் நடத்திவரும் தொடர் பரப்புரையின் ஓர் அங்கமாக சுவிஸ் நாட்டில் சனல் - 4 தொலைக் காட்சியில் ஒளிபரப்பப்பட்ட போர் தவிர்ப்பு வலயம் என்ற ஆவணப் படம் பல்வேறு இடங்களிலும் காட்சிப்படுத்தப்பட்டு வருகின்றது. அதன் ஒரு அங்கமாக அண்மையில் சுவிஸ் லவுசான் மாநகரில் நடைபெற்ற நிகழ்வில் சுமார் இருநூறு வரையான பார்வையாளர்கள் கலந்து கொண்டனர்.



பிரெஞ்சு மொழிபேசும் பிராந்தியத்துக்கான தமிழ்ச் சங்கத்தின் ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் சங்கத்தின் பொதுச் செயலாளரும் லவுசான் மாநகரசபை உறுப்பினருமான தம்பிப்பிள்ளை நமசிவாயம், சர்வதேச மன்னிப்புச் சபையின் இலங்கைப் பரப்புரைப்பிரிவின் இணைப்பாளர் பற்றிக் வால்டர், சர்வதேச மன்னிப்புச் சபையின் சுவிஸ்கிளைத்தலைவி மனோன் சிக் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட போர்க் குற்றங்களுக்கு எதிராக பக்கச் சார்பற்ற நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும், தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்ட தமிழர்களைத் திருப்பி அனுப்புவதை இடைநிறுத்த வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து சேகரிக்கப்பட்ட 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கையெழுத்துக்களை இன்று வியாழக் கிழமை வெளிநாட்டு அமைச்சிடம் கையளிப்பதற்கு சர்வதேச மன்னிப்புச் சபை தீர்மானித்துள்ளது. பிற்பகல் 1.30 மணிக்கு பேர்ண் நாடாளுமன்றத்துக்கு முன்பாக உள்ள வைசன்ஹவுஸ் பிளற்ஸில் நடக்கும் ஒன்றுகூடலைத் தொடர்ந்து இந்தக் கையளிப்பு நிகழ்வு இடம்பெறும் என்றும் சர்வதேச மன்னிப் புச் சபை அறிவித்துள்ளது. (ஓ)

# யாழில் 5ஆவது தடவை வர்த்தகக் கண்காட்சி

## ஜனவரியில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.14

வடக்கின் மிகப் பிரசித்தி வாய்ந்த நிகழ்வான யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் ஜனவரி மாதம் 17 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை ஐந்தாவது தடவையாக யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் பிரமாண்டமானவகையில் நடைபெற ஏற்பாடாகியுள் ளது. வழமை போன்று யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறை மன்றம் மற்றும் இலங்கை கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் சேவைகள் தனியார் நிறுவனம் ஆகியன இணைந்து இந்த வர்த்தக கண்காட்சியை ஏற்பாடுசெய்துள்ளன.

தொழிற்றுறை அபிவிருத்தியில் ஒரு மைக்கல்லாக அமைந்துள்ள இந்தக் கண்காட்சி வடபகுதிக்கும் இலங்கையின் ஏனைய பிரதேசங்களுக்கும் இடையே ஓர் இணைப்புப் பாலமாக விளங்குவதுடன் வர்த்தக மற்றும் கைத்தொழில் தொடர்புகளைப் பலப்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கி வருகின்றது. வழமைபோன்று இந்த முறையும் பல்வேறு தரப்பட்ட துறைசார் நிறுவனங்கள் கண்காட்சியில் தத்தமது உற்பத்திகள் மற்றும் சேவைகளை வழங்கவுள்ளன.

மேற்படி கண்காட்சியில் காட்சிக் கூடங்களை அமைக்க விரும்புவோர் இல 124, இராசாவின் தோட்டம் வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்றுறைமன்றத்துடன் தொடர்பு கொண்டு தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ)

பருத்தித்துறையில் சாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில்

# முதியோருக்கு நாளை இலவச மருத்துவ முகாம்

பருத்தித்துறை சாயிசேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் முதியோருக்கான இலவச மருத்துவ முகாம் நாளை பருத்தித்துறை சாயி சேவா நிறுவன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அறுபது வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் முதியவர்களுக்கு இரத்த அழுத்தம், சலரோகம் போன்ற நோய்களை இனம் கண்டு மருத்துவ ஆலோசனைகளை மந்திகை ஆதார வைத்திய சாலையில் கடமை புரியும் மருத்துவர் கே.சிவராமன் வழங்குவார்.

நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணி தொடக்கம் 3 மணி வரை மருத்துவ ஆலோசனைகள் வழங்கப்படும்.

நீரிழிவு நோயைச் சரியாக இனம் கண்டு அறிவதற்கான பரிசோதனைக்கு தயாராக வரும் விதத்தில் மதிய உணவை பரிசோதனைக்கு இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்னர் நண்பகல் 12 மணிக்கு முன்னர் உட்கொண்டால் பிற்பகல் 2 மணிக்கு இரத்தப் பரிசோதனை செய்ய உதவியாக இருக்கும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த மருத்துவ முகாமின் தொடர்ச்சியாக பிற்பகல் 3 மணியில் இருந்து மாலை 5 மணி வரை வைத்திய ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் "முதியோர் நலம் காப்போம்" என்ற கருப்பொருளில் கருத்துரை வழங்குவார். (ஓ)



யாழ்.மாவட்ட சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவு சங்கத்தினால் நடத்தப்பட்ட கூட்டுறவாளர் தின விழாவுக்கு வருகை தந்த சபைத் தலைவர் கலாநிதி பி.ஏ.கிரிவெந்தியா சமாசப் பணியாளர்களைச் சந்தித்து உரையாடினார். இந்தச் சந்திப்பில் சமாசத் தலைவர் எஸ்.இலகுநாதன் மற்றும் பணியாளர்கள் கலந்துகொண்டனர். (ந-17)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்**: வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும். உறவினர், நண்பர்கள் சிலர் பணம் கேட்டு தொந்தரவு தருவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் மோதல்களைத் தவிருங்கள். தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள்.

**இடபம்**: துடிப்புடன் காணப்படுவீர்கள். எதிரிகளின் கொட்டம் அடங்கும். முன்கோபம் குறையும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும்.

**மிதுனம்**: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு காரியங்களைச் சாதிப்பீர்கள். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஒத்துழைப்பு உண்டு. வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். மாணவர்கள் பொறுப்பாக நடந்துக் கொள்வர்.

**கடகம்** : உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும்.

**சிங்கம்**: வெளுத்ததெல்லாம் பாலாக நினைத்து சிலரிடம் பேசி சிக்கிக் கொள்ளாதீர்கள். நெருங்கியவரிடம் உங்களின் மனக்குறைகளைச் சொல்லி ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் அவ்வப்போது பதற்றமடைவீர்கள்.

**கன்னி**: ஆரவாரமின்றி சில வேலைகளை முடிப்பீர்கள். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. தன்னம்பிக்கை துளிர்விடும்.

நாளை

ஐப்பசி-29 வெள்ளிக்கிழமை 15.11.2013
திதி: திரயோதசி மு.இ.08.15 வரை
நட்சத்திரம்: ரேவதி மு.ப.10.53 வரை
சுபநேரம்: 06.07 - 07.37 வரை
இராகுகாலம்: 10 -37 - 12.07 வரை

**துலாம்**: மனக்குழப்பங்கள் நீங்கும். நம்பிக்கைக்குரியவர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**விருச்சிகம்**: அதிரடியாகச் செயற்பட்டு சில காரியங்களை விரைந்து முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். மாணவர்களின் சிந்தனைத்திறன் அதிகரிக்கும்.

**தனுசு**: சில தினங்களாக முடியாமல் இழுத்தடித்த காரியங்களெல்லாம் இனி முடிவுக்கு வரும். வெளிவட்டாரத்தொடர்பு அதிகரிக்கும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்**: சோர்வாக இருந்த நீங்கள் சுறுசுறுப்படைவீர்கள். சிந்தனைத்திறன் அதிகரிக்கும். அரச காரியங்களில் அனுகூலமான நிலை காணப்படும்.

**கும்பம்**: ஆடம்பரச் செலவுகளைக் குறைப்பீர்கள். நண்பர்கள், உறவினர்களின் உதவி கிடைக்கும். மனக்குழப்பங்கள் நீங்கும். அயல் வீட்டாரின் ஆதரவு அதிகரிக்கும்.

**மீனம்**: வேலைச்சுமை இருந்து கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் ஏற்படக்கூடும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | | 8 | | 1 | | 3 | 6 | |
| 4 | | | | | | | 2 | 1 |
| | 1 | | | | 2 | | | 5 |
| 9 | | 6 | 7 | | 8 | 4 | | 3 |
| | | | 4 | | 9 | | | |
| 8 | | 7 | 2 | | 1 | 5 | | 6 |
| 7 | | | 3 | | | | 5 | |
| 1 | 3 | | | | | | | 9 |
| | 6 | 9 | | 4 | | 2 | | 8 |

*நேற்றைய சுடோக்கின் விடை*

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 2 | 1 | 8 | 6 | 9 | 7 | 3 | 4 |
| 3 | 4 | 8 | 1 | 7 | 5 | 2 | 6 | 9 |
| 7 | 9 | 6 | 4 | 3 | 2 | 5 | 8 | 1 |
| 9 | 3 | 7 | 6 | 2 | 1 | 8 | 4 | 5 |
| 8 | 1 | 2 | 3 | 5 | 4 | 6 | 9 | 7 |
| 6 | 5 | 4 | 7 | 9 | 8 | 3 | 1 | 2 |
| 2 | 8 | 5 | 9 | 1 | 6 | 4 | 7 | 3 |
| 1 | 6 | 3 | 5 | 4 | 7 | 9 | 2 | 8 |
| 4 | 7 | 9 | 2 | 8 | 3 | 1 | 5 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## முகப்புத்தகப் பாவனை
# தீமையே தரும்



இந்த 21ஆம் நூற்றாண்டில் உலகத்தின் பல பாகங்களில் வாழும் மக்கள் முகப் புத்தகத்தைப் பயன்படுத்தி வருகின்றனர். முக்கியமாக பாடசாலை மாணவர்கள் முகப் புத்தகத்தை பயன்படுத்துகின்றனர். இது அனைவரும் அறிந்த ஒரு விடயம் ஆகும்.


முகப்புத்தகப் பாவனை மாணவர்களிடையே தீய பழக்கவழக்கங்களைப் பெருக்குகிறது. உலகிலே வாழும் பல பில்லியன் கணக் கான மக்கள் முகப்புத்தகத்தைப் பயன் படுத்துவதாக தகவல் கிடைத்துள் ளது. பெரும்பாலானவர்களின் வாழ்க்கை முகப்புத்தகப் பாவனைப் பழக்கத்தால் சீரழிக்கப்படுகின்றது. இவ்வாறு பலரின் வாழ்க்கை சீரழிக்கப்படுவதனை நாம் பத்திரிகை வாயிலாக அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது. இந்த முகப் புத்தகத்தினால் சில பெண் பிள்ளைகள் தற்கொலை செய்யும் அளவுக்கு துணிந்துள்ளார்கள். இது போன்ற பல சம்பவங்கள் யாழ்ப்பாணத்திலும் நடந்துள்ளதை கேள்விப்படுகிறோம். முகப்புத்தகப் பாவனை மூலம் மலர்ந்த காதலால் பெண் பிள் ளைகளின் வாழ்க்கை கேள்விக் குறியாக உள்ளது. இவ்வாறாக முகப்புத்தகத்தில் ஏமாற்றுவதற் கென்றே ஒரு கும்பல் காத்திருக்கிறது.

'பேஸ்புக்' மூலம் யார் என்று தெரியாத ஒருவருடன் கதைப்பதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகின்றன. மாணவர்கள் தமது கையடக்கத் தொலைபேசியில் முகப்புத்தகத்தை பாவிக்கின்றனர். இதனால் இவர்கள் எந்த நேரத்திலும் முகப்புத்தகத்தை பார்வையிடக் கூடிய நிலை ஏற்படுத்தப் பட்டுள்ளது. இதனால் தமது வாழ்க்கை சீரழிகின்றது என்பதை அறியாமலே செயற்படுகின்றார்கள். குறிப்பாக பெண் பிள்ளைகள் தமது புகைப்படங்களை தமது முகப்புத்தகத்தில் போடுவதனை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். இதனால் அவர்களுடைய வாழ்க்கையே கேள்விக் குறியாகும் நிலை ஏற் படுகிறது. இதனைப் பலர் அறியாது செயற்படுகின்றனர்.

முகப் புத்தகத்தின் மூலம் பல பெண்பிள்ளைகள் ஏமாற்றப்படுகின்றனர். முகப்புத்தகத்தால் ஏற்பட்டுள்ள பாதகமான விளைவுகளை நோக்கும் போது முகப்புத்தகப் பாவனை தீமையே பயக்கின்றது என்று கூறலாம்.

பு.அனுஷயா, கச்சேரியடி.

'முகப்புத்தகம்' மூலம் யார் என்று தெரி யாத ஒருவருடன் கதைப்பதனால் பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுகிறது. மற்றும் மாணவர்கள் தமது கையடக்கத் தொலைபேசியில் முகப் புத்தகத்தை பாவிக்கின்றனர்.



# அம்மா



அன்பு என்ற வார்த்தைக்கு
ஆயிரம் அர்த்தம் அம்மா
அதை புரிய வைத்தவள் - நீ
அம்மா

ஆயிரம் உறவுகள்
இவ்வுலகினில் இருந்தாலும்
உயிரினில் கலந்த - ஓர்
உயிர் அம்மா

வேஷம் என்ற மாயைக்குள்
மூழ்கியிருந்த உலகை
பாசம் என்ற சுடரால்
ஒளிர வைத்தவள் - நீ
அம்மா

ஒளி விளக்காய்
இவ்வுலகுக்கு
பாசத்தை உணர வைத்தவள் - அம்மா
உறவுக்கு புத்துயிர் அளித்தவள் - நீ
அம்மா.



அவள் இன்றேல்
பாசத்தின் அர்த்தம்
புரியாமல் போயிருக்கும்
மானுடப் பிறவிக்கு

அம்மா என்ற உறவினிலே
இவ்வுலகம் உதிராது
உயிர் வாழ்கிறது
இன்பத்துடன்

எஸ்.றணிஸா, வவுனியா.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :- ......................................................

..........................................................

.......................... ..........................
தி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
ன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

முகப்புத்தகப் (பேஸ்புக்) பாவனை

**நன்மையா?**
**தீமையா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாகும்.




# வேகம்

- செயில்ஃபிஷ் நீந்தும் வேகம் மணிக்கு 110 கிலோ மீற்றர்.
சிறுத்தை பாயும் வேகம் மணிக்கு 120 கிலோ மீற்றர்.
- காஸெல் என்ற சில மான் ஓடும் வேகம் மணிக்கு 96 கிலோ மீற்றர்.
- யானை நடக்கும் வேகம் மணிக்கு 14 கிலோ மீற்றர். ஓடும் வேகம் மணிக்கு 50 கிலோ மீற்றர்.
- பந்தயக் குதிரைகளின் வேகம் மணிக்கு 88 கிலோ மீற்றர்.
- மரங்கொத்திப் பறவை மரத்தை கொத்தும் வேகம் மணிக்கு 2080 கிலோ மீற்றர்.
- தேனீக்களின் பறக்கும் வேகம் மணிக்கு 65 கிலோ மீற்றர்.
- நெருப்புக் கோழி ஓடும் வேகம் மணிக்கு 88 கிலோ மீற்றர்.

சிந்து சிவதாஸ், ஐங்கரன் வீதி, சுதுமலை.





## உன் நினைவுகளுடன்

நேரில் பார்த்து பேசாத
நாள்களை விடவும்
உன்னுடன் நெருங்கிப் பழகி
சொல்லாதவைகளை விடவும்
நீ என்னை விட்டுப்
பிரிந்து சென்ற
கடைசி சந்திப்பு கொடுமையானது...

இரவின் ஊமை ஜாலங்களில்
இரகசிய கண்ணீரோடு
நான்...
எனக்குள் மட்டும்
தனியனாய்...
நலன் விசாரித்து
மறையும் நெற்றியின்
உதிரம் சொட்டும்
ரணப் பொழுதுகள்...

உன் வருகைக்காய்
தவமிருந்து-சந்தடியில்லாத
தெருக்களின் வெறுமையில்
சொப்பனமாய் நீ தெரிய
தலை கவிழ்ந்து
உற்று நோக்கும்
அற்ப மனம்...

கனவு கலைய
நினைவை அணைக்க
தலையணையை இறுகக்
கட்டிக் கொண்டு
வாழ்ந்து விட்டேன்
உன் நினைவுகளுடனே

எஸ்.தர்சி.

## கலாசாலையில் நீரிழிவு தினம்

கோப்பாயம், நவ.14

சர்தேச சிறுவர் தினத்தையொட்டி இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலை கணித விஞ்ஞான மன்றத்தினரின் ஏற்பாட்டில் இலவச நீரிழிவுப் பரிசோதனையும், வைத்திய ஆலோசனை வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது. ஹேமாஸ் நிறுவனத்தின் ஆதரவுடன் இடம்பெறும் இந்த நிகழ்வில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் மருத்துவர் எஸ்.ஶ்ரீகரன் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகளை வழங்கவுள்ளார். (ஒ)

## எரிகாயங்களுடன் வயோதிபர் மருத்துவமனையில்

மேசையில் வைக்கப்பட்டிருந்த குப்பி விளக்கு பூனை ஓடியதால் தட்டுண்டு நிலத்தில் வீழ்ந்தது. இதனால் அங்கு தூங்கிக் கொண்டிருந்த வயோதிபர் மீது தீப்பற்றிக் கொண்டதில் அவர் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு கைதடி கிழக்கில் இடம்பெற்றது. அதே இடத்தைச் சேர்ந்த கந்தர் கதிர்காமு (வயது-65) என்பவர் எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## ஆயுள்வேத வைத்தியசாலையில் சட்டவிரோத ஆங்கில மருந்துகள்

### சுகாதாரப் பகுதியினர் கைப்பற்றினர்

நவாலி, நவ.14

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள நான்கு ஆயுள்வேத வைத்தியசாலைகளில் சட்டவிரோதமாக வைத்திருந்த ஆங்கில மருந்து வகைகள் சுகாதாரப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன.

கடந்த சனிக்கிழமை சுகாதார வைத்திய அதிகாரி அ.சுரேணுகா தலைமையில் சென்ற குழுவினர் அந்தப் பிரதேசத்திலுள்ள 7 ஆயுள்வேத வைத்தியசாலைகளில் திடீரென புகுந்து மருந்து வகைகளைப் பரிசோதனை செய்தனர். இதன் போது நவாலி, சுதுமலை, தொட்டிலடி, பண்டத்தரிப்பு ஆகிய இடங்களிலுள்ள வைத்தியசாலைகளில் சட்ட விரோதமாக பெருளவு மருந்து வகைகள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டு கைப்பற்றப்பட்டன.

இவற்றில் அதிகமானவை குழந்தைப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் அதிக சக்தி வாய்ந்த மருந்துகள் என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்துகளை வைத்திய நிபுணர்களின் ஆலோசனையின் படிதான் வழங்க வேண்டும். ஆனால் ஆலோசனையில்லாமல் இவர்கள் வழங்குவதால் பல பக்க விளைவுகள் ஏற்படும் என்று கூறப்படுகிறது.

தற்போது இவை யாவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-100)

## வாழ்க்கையின் இலட்சியமாக இன்று தோற்றப்படுவது எது?

இன்றைய இலட்சிய வாழ்வில் சம்பாதிப்பதும் திரட்டி வைப்பதுமே குறிக்கோளாகக் காணப்படுகிறது.

இந்தக்காலத்து மாணவர்களிடையே தியாக உணர்வு இல்லாமை மிக வெளிப்படையாகத் தெரிகிறது.

நன்றி

தெய்வீகம் மலரும் பொழுது



## மாதிரிக் கல்வி வலயமாக தென்மராட்சி வலயம்

தென்மராட்சி, நவ.14

ஓர் அறிவுக் கேந்திரத்துக்கான அத்திபாரமாக பாட சாலைக் கல்வி அமைப்பை மாற்றுவதற்கான செயற்றிட்டத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான மாதிரி கல்வி வலயமாக தென்மராட்சி கல்வி வலயம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. செயற்றிட்டத்தின் செயற்பாடுகளை நடை முறைப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களை வழங்குவதற்காக, அடுத்த ஆண்டில் வலயப் பாடசாலைகளில் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் வலுப்படுத்தப்படவுள்ளன. (ந-9)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

மு/சிவநகர் தமிழ் வித்தியாலயம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.

2013 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 168 புள்ளியும், மாவட்ட நிலையில் 48 ஐயும் பெற்றுச் சித்தியடைந்த மாணவி செல்வி சத்தியசீலன் திகழினி அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.




தோற்றிய அனைத்து மாணவர்களும் சித்திப் புள்ளி பெற்றுள்ளனர்.

| | | | |
|---|---|---|---|
| செல்வி வி.தயானி | 135 | செல்வி வி.திவானுகா | 107 |
| செல்வி ஜெ.திலக்சனா | 102 | செல்வி ஜெ.துசானா | 98 |
| செல்வி க.காயத்திரி | 90 | செல்வன் மோ.மிதுசன் | 86 |

இம் மாணவர்களையும் வாழ்த்துவதோடு கல்வி புகட்டி, வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களையும் வாழ்த்துகின்றோம்.

பாடசாலைச் சமூகம்,

சிவநகர், புதுக்குடியிருப்பு. (39967)(5.6.4)



இதோ!

சித்த ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட இருமல் நிவாரணி!

தீராத இருமல்,சளி,இளைப்பு மற்றும் நுரையீரல்,சுவாச நாளங்களில் உண்டாகும் சளி நோய்கள், தொண்டையில் ஏற்படும் நமைச்சல் ஆகிய நோய்களை விரைவில் குணமாக்கும் அதியற்புத தேசிய ஔஷதம்

**சித்தாரா அதிமதுரம் ஆடாதோடை இருமல் பாணி**

யாழ்.குடாநாட்டின் அனைத்து பார்மஸிகளிலும்,கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

*Manufactured By:*
SITHARA PRODUCTS
Puttalam Road, Chilaw.
(Reg.No.:-6382) AR/PR/No.228

யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்:
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 2567

(குறிப்பு: சத்திரச் சந்திக்கு அண்மையில்) (C/13577)(5.6.3)


## விளக்கீட்டுத் திருவிழா

யாழ்ப்பாணம், நவ.14

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகியம்மன், கண்ண லிங்கேஸ்வரர் ஆலய விளக்கீட்டுத் திருவிழா எதிர்வரும் 17 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 18 ஆம் திகதி சோமவார உற்சவம் இடம்பெற்று சுவாமி உள் வீதி வலம் வரும் நிகழ்வு இடம்பெறவுள்ளது. (வ-10)

## தென்னையால் வீழ்ந்தவர் 6 தினங்களின் பின் உயிரிழப்பு

தென்மராட்சி, நவ.14

தேங்காய் பறிப்பதற்காக உயரமான தென்னை மரத்தில் ஏறி தவறி வீழ்ந்த குடும்பஸ்தர் சிகிச்சை பயனின்றி ஆறு தினங்களின் பின்னர் உயிரிழந்தார்.

கடந்த வியாழக்கிழமை மிருசுவில், தவசிகுளம் பகுதியில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் காயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பயனின்றி நேற்று முன் தினம் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த வல்லிபுரம் சிவானந்தம் (வயது-46) என்பவரே உயிரிழந்தவராவார். (வ-9)







**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் றக்கா றோட் புனித திரேசம்மாள் கோயிலுக்கு அருகில் றக்கா லேனில் திருக்கை வளவு என்னும் நிலப்பரப்பு 6.4 குழி கொண்ட நீதிமன்றத்தால் பிரிவிடப்பட்டு நில அளவைப்படமும் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:077 878 3819 (39963)(5.6.4)



**யாழ்ப்பாணக் கல்வி நிலையம்**
**The Jaffna Education Centre**
(சீயோன் தேவாலயத்துக்கு அருகில்)

Spoken English With Grammar

"சிங்களம்"

Shorthand Typing

ESOL, IELTS ஆகிய வகுப்புக்களுக்கு ஆயத்தம் செய்து விடப்படும்.

புதிய பிரிவு ஆரம்பம்: 15.11.2013

பாட முடிவில் "சான்றிதழ்" வழங்கப்படும்.

ஆசிரியை: இ.லோகநாயகி

T.P: 077 677 9340 (39973)(3.6.4)

# கூட்டமைப்பின் நல்லிணக்கத்தை அரசு பயன்படுத்துமென்ற நம்பிக்கை தகர்ப்பு

## கண்டிக்கிறார் ஜ.ம.முன்னணியின் ஊடகச் செயலாளர்

கொழும்பு, நவ. 14
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நல்லிணக்கத்தை அரசு சரிவரப் பயன்படுத்துமென்ற நம்பிக்கை தகர்ந்துள்ளதாகவும், இதனைத் தாம் கடுமையாகக் கண்டிப்பதாகவும் ஜன நாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலாளரும், கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான சி.பாஸ்கரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில்:
அரசுக்கான தனது நல்லிணக்கத்தைக் காட்டும் முகமாக வட மாகாண சபையின் முதலமைச்சர் ஜனாதிபதி முன் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார். ஆனால் அந்தச் செய்தி மறையும் முன்னரே அரசு தனது சதித்தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. முழங்காவில் மக்களின் நிலங்களை அபகரித்தல், நாவற்குழியில் சிங்களக் குடியேற்றம், மக்கள் தொடர்பாடல் அமைச்சரின் மதிகெட்ட பேச்சு, யாழ்.வலி. வடக்கில் வீடுகள் தகர்ப்பு, தம்புள்ளையில் இந்து ஆலயம் தகர்ப்பு, கூட்டமைப்புடன் கலந்துரையாடிய ஆளி. நியூஸிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை அவர்களின் நாட்டுக்குத் திருப்பி அனுப்பி யமை, எல்லாவற்றுக்கும் மேலாக வலி.வடக்கு மக்களின் மீளக்குடியமர்வை வலியுறுத்திய வலி.வடக்குப் பிரதேச சபைத் தலைவர் சுகிர்தனுக்கான அச்சுறுத்தல் என நீண்ட வரிசைப்படுத்தலாம். இதன் மூலம் நல்லிணக்கத்தை அரசு சரிவர பயன்படுத்தப் போவதில்லை என்பதை தெளிவாகக் காட்ட முயல்கின்றது.

மேலும், கிளிநொச்சியில் ஆயிரம் ஏக்கர் நிலத்தில் சீமெந்து தயாரிக்கும் சுண்ணக்கல் அகழ்வை மேற்கொள்வதற்கு முதலமைச்சருக்குத் தெரியாமல் காணிகளைச் சுவீகரித்தது கண்டிக்கத்தக்கதாகும். அதேவேளை நாவற்குழியில் அத்துமீறிய சிங்களக் குடியேற்றம் மோதலை உருவாக்கும் அரசின் நடவடிக்கையாகவே உள்ளது.

உலகமே ஆவலாக எதிர்பார்க்கும் பொதுநலவாய மாநாடு நடைபெறப் போகும் வேளையில் நல்லிணக்கத்தை காட்டிக் கொண்டிருக்கும் கூட்டமைப்பின் செயற்பாட்டைத் தனது மதிகெட்ட பேச்சால் மக்கள் தொடர்பாடல் அமைச்சர் விமர்சித்தமை அமைதிப் போராட்டத்தை வன்முறைப் போராட்டமாக மாற்ற முயலும் செயற்பாடாகவே காணக் கூடியதாக உள்ளது.

வாழ்வாதாரம் இன்றி அகதி வாழ்க்கை வாழும் வலி.வடக்கு மக்களை மீளக்குடியமர்த்தாது அவர்களின் வீடுகளை உடைப்பது எந்த விதத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாதது கண்டிக்கத்தக்கதும் ஆகும். எல்லாவற்றுக்கும் மேலாக தம்புள்ளை அம்மன் கோயில் தரைமட்டமாக்கியமை காட்டுமிராண்டித் தனத்தின் உச்சத்தன்மையைக் காட்டுகின்றது.

இதேவேளை- வலி.வடக்கு மக்களை வனுக் கட்டாயமாக வேறு இடத்தில் குடியமர்த்த முனைவதும் மக்களின் குறைகளை அகிம்சைப்போராட்டத்தின் மூலமாக வெளிக்கொணர உழைத்த வலிகாமம் வடக்குப் பிரதேச சபைத் தலைவர் தொலைபேசி மூலம் அச்சுறுத்தப்பட்டு, இராணுவ முகாமில் இருந்து 50 மீற்றர் தொலைவில் உள்ள அவரின் வீட்டுக்கு முன்பாக மாட்டுத் தலையை வைத்து அச்சுறுத்தியமை என்பனவும் கண்டிக் கத்தக்கதாகும் - என்று மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (க)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், நவ .14
மயிலணி ஸ்ரீ விஸ்வநாத சுவாமி ஆலயத்தில் இயம சங்கார உற்சவம் நாளை வெள்ளிக்கிழமை மாலை 3 மணியளவில் நடைபெறவுள்ளது.
விசேட பூஜைகளுடன் ஆரம்பமாகும் நிகழ்வுகள் மார்கண்டேயர் சிவபூஜை, யம சங்காரம், பிராயச்சித்த அபிஷேகங்களுடன் நிறைவுறும். (10)

♦♦♦

யாழ்ப்பாணம், நவ .14
மண்டைதீவு ஸ்ரீ சிவகாமவல்லி அம்பிகை சமேத ஸ்ரீமத் தில்லேஸ்வரர் தேவஸ்தானத்தின் பாலஸ்தாபனம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் 9.30 மணி வரை நடைபெறவுள்ளது.
இன்று வியாழக்கிழமை விநாயக வழிபாடு, கர்மாரம்பம், யாகபூஜைகள் இடம்பெற்று நாளை பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (10)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ .14
கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா நாளை மறுதினம் காலை 9.30 மணிக்கு கல்லூரியின் 125 ஆம் ஆண்டு நினைவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.
கல்லூரி அதிபர் கே.ஆர்.ராஜசேகரம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சற்குணராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினராக செங்குந்தா இந்துக் கல்லூரி அதிபர் ஆர்.பாலகுமாரும் கலந்து கொள்வர். (வ-10)

♦♦♦

யாழ்ப்பாணம், நவ.14
புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி ஜே.கிறிஸ்ரபெல் தலைமையில் நடைபெறும்.
நிகழ்வில் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் தம்பிராசா குருகுலராஜா பிரதம விருந்தினராகவும், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமாரும் கலந்து கொள்வர். (வ)

## அதிபர்களுக்கான கூட்டம்

தென்மராட்சி, நவ.14
தென்மராட்சி அதிபர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பி.ப.2.15 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும்.
எனவே வலயப் பாடசாலை அதிபர்களைக் கலந்து கொள்ளுமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (வ-9)

## தாய், மகளுக்கு கத்தி வெட்டு

வலி.வடக்கு, நவ. 14
வீட்டினுள் அத்துமீறி நுழைந்த இளைஞர் கத்தியால் வெட்டியதில் தாயும், மகளும் படுகாயமுற்று ஆபத்தான நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சேர்க்கப்பட்டுள்ளனர்.
மாவிட்டபுரம் சாயோடையைச் சேர்ந்த இரத்தினம் செல்வநாயகி (வயது-53), இரத்தினம் சுகந்தினி (வயது-33) ஆகிய இருவருமே வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் ஆவர்.
மேலதிக வைத்திய சிகிச்சைக்காக நள்ளிரவு இருவரும் அம்புலன்ஸ் மூலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டு, அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
உறவினரான 21 வயது நிரம்பிய இளைஞரே அவர்களின் இந்தத் தாக்குதலை மேற்கொண்டார். காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஒ-86)

## கும்பாபிஷேகம்

வடமராட்சி, நவ .14
மேலைப்புலோலி, வாணக்குடியிருப்பு அருள்மிகு ஸ்ரீ வீரபத்திரர் சுவாமி கோயில் புனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.23 மணி முதல் 9 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.
பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடம்பெறும்.
கும்பாபிஷேகத்தை வரணி சுட்டிபுரம் கண்ணகை அம்மன் கோயில் பிரதமகுரு ஸ்ரீ சக்தி கிரியா குருமணி சிவஸ்ரீ இ.குமாரசுவாமிக் குருக்கள் பிரதிஷ்டா பிரதம குருவாக இருந்து நடத்தி வைப்பார். (ஒ-8)

## விபத்தில் கை முறிந்தது

வீதியைக் கடந்த குரங்கை மோட்டார் சைக்கிள் மோதிய வேளை விபத்து ஏற்பட்டு அதில் பயணித்த ஆசிரியருக்கு கை முறிந்ததுடன் தலையில் பலத்த காயமும் ஏற்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மட்டுவில் தெற்கில் இடம்பெற்றது.
அதே இடத்தைச் சேர்ந்த சிவபாதம் சிவகுமார் (வயது-42) என்னும் ஆசிரியரே காயமடைந்தவர் ஆவார். காயமடைந்த ஆசிரியர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (வ-9)

## பதவி உயர்வு

தென்மராட்சி,நவ.14
சாவகச்சேரி நகர சபை வேலைகள் பகுதி தொழில்நுட்ப அலுவலர் க.சூரிய குமாரன் மாகாண தொழில்நுட்பவியல் சேவையின் வகுப்பு - I இற்கு பதவி உயர்வுபெற்றுள்ளார். வகுப்பு -II இல் கடமையாற்றிய இவருக்கு வகுப்பு - I இற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)


ஓம் ஸ்ரீராமஜெயம் ...

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**துரையப்பா கோபாலகிருஸ்ணன்**



(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், கணுக்கேணி கிழக்கு, முள்ளியவளை)

ஆண்டுகள் ஆறு ஆனாலும்
ஆறாதையா உங்கள் நினைவு
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
அப்பா! உங்களுக்கு ஈடாகுமா
நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும்
உங்கள் பணி தொடர்ந்து
நாம் செல்வோம்

மலர்வு:- 28.07.1941
உதிர்வு:- 23.10.2007

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.
கோ.கோகுலன்

நாச்சிமார் கோயிலடி,
யாழ்ப்பாணம். (40072)(2.3.6)

# மரண அறிவித்தல்கள்



**திருமதி புவனேஸ்வரி சிவலிங்கம்**

மாப்பாணவூரி, காரைநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது இணுவில் வீதி சதுமலை வடக்கு, மானிப்பாயில் வசித்தவருமாகிய திருமதி புவனேஸ்வரி சிவலிங்கம் 12.11.2013 செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-வள்ளியம்மை தம்பதியின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவலிங்கத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு-இராசம்மா தம்பதியின் மருமகளும், சோதிலிங்கம் (வண்ணப் பூக்கள் பல்பொருள் வாணிபம், சதுமலை), மேனகை (ஆசிரியர் கிளி/திருவையாறு மகா வித்தியாலயம்), கோணேசலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவநிதி, சிவபாலன் (நடத்துநர் இ.போ.ச காரைநகர்சாலை), அம்பிகாவதி ஆகியோரின் மாமியாரும், துவாரகன், பவித்திரன், கேதாரன் ஆகியோரின் பேர்த்தியும், சிவனேஸ்வரி, பரமேஸ்வரி, புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.11.2013) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் வீதி, சதுமலை வடக்கு,மானிப்பாய்.
T.P: 077 967 1905, 077 530 1154 (40076)(7.6.3)
தகவல்:
குடும்பத்தினர்.

**குட்டிப்பிள்ளை அரசேஸ்வரன்**
(ஆசிரியர், யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் 56, மலர்மகள் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலய ஆசிரியர் குட்டிப்பிள்ளை அரசேஸ்வரன் (அரசு) 10.11.2013 அன்று காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டிப்பிள்ளை -சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், சண்முகலிங்கம்-தவமணிதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் சர்மிளாவின் அன்புக் கணவரும், கபிர்த்தன் (யா/இந்துக் கல்லூரி மாணவன்), வாசவி (யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை மாணவி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான சந்திரமலர், பரமேஸ்வரன் மற்றும் யோகேஸ்வரன் காலஞ்சென்றவர்களான செல்வனேஸ்வரன், சிவகுமார் மற்றும் மகேந்திரகுமார், சந்திரகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சண்முகலிங்கம் மற்றும் புஸ்பமலர், யோகதர்சினி, நாகேஸ்வரி, ராகினி, ஸ்ரீகர்ஷன், சியாமளா, ஸ்ரீகாந்தன், ஸ்ரீகுமார், ஸ்ரீதர், ஸ்ரீகரன், பிரமிளா, கிரிசலா, ஸ்ரீநிவாஸ், ரமேஸ், கமலன், பௌசலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல. 56, மலர்மகள் வீதி,
அரியாலை. (40080)(7.6.2)
தகவல்:
குடும்பத்தினர்.

## இரு நூல்களுக்கான விமர்சன அரங்கு



யாழ்ப்பாணம், நவ.14

வடமராட்சி உயில் கலை இலக்கிய மன்றத்தினர் லண்டன் எழுகை வெளியீட்டகத்தால் வெளியிடப்பட்ட இரு நூல்களுக்கான விமர்சன அரங்கை ஞாயிற்றுக்கிழமை வதிரி வடக்கு மெ.மி.த.க.பாடசாலையில் நடத்தினர்.

பரஞ்சோதி தங்கேஸ் எழுதிய "யாழ்ப்பாணத்து தமிழர் கலாசாரத்தில் சாதியமும் இனத்துவமும்" என்னும் நூலும், அ.கௌரிகாந்தன் எழுதிய "யாழ்ப்பாண சமூகம் உருவாக்கமும் விபுலானந்தரும்" என்னும் நூலும் விமர்சன அரங்கில் எடுக்கப்பட்டன.

எழுத்தாளர் மு.இராச நாயகம் (அநாதரட்சகன்) தலைமையில் நடைபெற்ற அரங்கில் செ.நடேசன் (தெணியான்), ஏ.சி.ஜோர்ஜ், யாழ். பல்கலைக்கழக சமூகவியற்றுறை விரிவுரையாளர் இ.இராஜேஸ்கண்ணன், ஆசிரியர் சி.ரமேஸ் ஆகியோர் நூல்கள் குறித்த ஆய்வுரையை நிகழ்த்தினர்.

அறிமுகப்பிரதிகளை க.தணிகாசலம், ஜீ.ரி.கேதாரநாதன் ஆகியோர் வழங்க எஸ்.கே.இராஜேந்திரன், உடுவில் அரவிந்தன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர். (வ-9)

## நூல்கள் வெளியீடு

கொழும்புத்துறை, நவ.14

கனடாவில் வாழ்ந்துவரும் அரியாலையைச் சேர்ந்த ப.ஸ்ரீஸ்கந்தன் எழுதிய இருநூல்களின் வெளியீட்டு விழா நாளைமறுதினம் சனிக்கிழமை பி.ப.3 மணிக்கு நடை பெறவுள்ளது.

அரியாலை சித்திவிநாயகர் ஆலயப் பகுதியில் அமைந்துள்ள மயிலு-மீனாட்சி ஞாபகார்த்த மண்டபத்தில் பேராசிரியர் கலாநிதி க.மோகனதாஸ் தலைமையில் நடைபெறும் வெளியீட்டு விழாவில் 'மனசுலாவிய வானம்', அரியாலையூர் நாடக ஆளுமைகள் ஆகிய இரு நூல்கள் வெளியிட்டு வைக்கப்படவுள்ளன.

அரியாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.ரி.பத்மநாதனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் ஆசியுரையை பிரம்மஸ்ரீ சு.முரளீதரக் குருக்கள் வழங்குவார்.

வாழ்த்துரைகளை முன்னாள் யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன், யாழ். நாடக அரங்கியல் கல்லூரியைச் சேர்ந்த சட்டத்தரணி சோ.தேவராஜா, பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பா.அகிலன் 'நூல்களும் சமூகங்களும்' என்ற பொருளில் சிறப்புரையாற்றுவார்.

கலாநிதி ஆறு. திருமுருகன் வெளியீட்டுரையை நிகழ்த்துவார்.

'மனசுலாவிய வானம்' நூலின் முதற்பிரதியை யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதனும், அரியாலையூர் நாடக ஆளுமைகள் நூலின் முதற்பிரதியை பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிவான் திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரனும் பெற்றுக் கொள்வர். (வ-135)

## பரிசளிப்பு விழா

அச்சுவேலி, நவ.14

புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாட சாலை மண்டபத்தில் நடை பெறும்.

பாடசாலை அதிபர் கு.ரவிச்சந்திரன் தலைமையில் நடை பெறும் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண சபை உறுப் பினர் அ.பரஞ்சோதியும், வே.சிவமோகனும் கலந்து கொள்கின்றனர். (வ-11)

## இலட்சார்ச்சனை

யாழ்ப்பாணம், நவ.14

வட்டுக்கோட்டை உடுக்கியவளை ஸ்ரீ மஹா கணபதிப் பிள்ளையார் ஆலய இலட்சார்ச்சனை எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் டிசெம்பர் 7 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தினமும் காலை 8 மணி முதல் 9.30 மணி வரை இலட்சார்ச்சனை, கணபதி ஹோமம் என்பன நடைபெறவுள்ளன. (வ-10)

## தசாகக் கிரியை அழைப்பு



அமரர்

**சோமசுந்தர ஐயர் பாலசந்திர ஐயர்**

(ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தர்)

05.11.2013 செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்திய யாழ். புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்தி விநாயகர் ஆலய ஸ்தாபகர் சோமசுந்தர ஐயர் பாலசந்திர ஐயர் அவர்களின் தசாகக் கிரியை இன்று (14.11.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கும், ஏகோதிஸ்டம், இடபதாபனம், மாசிகம் நாளை (15.11.2013) வெள்ளிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கும், சபிண்டீகரணம் (16.11.2013) சனிக்கிழமை மு.ப. 10.00 மணிக்கும், சமாராதனை (17.11.2013) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணிக்கும் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திக் கிரியைகளில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

இல.26/68, புதிய அமைப்பு வீதி, பூந்தோட்டம், வவுனியா.

குடும்பத்தினர்.

T.P:- 024 324 8521

(29845) (6.3.12)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 18 / 03 / 1952

விண்ணுலகில் 26 / 10 / 2012

திருமதி

**பூமணி கந்தசாமி**

கருவிலே எமைச் சுமந்து
காலம் எல்லாம் எம் உயர்வுக்காய்
அயராது உழைத்த எம் அன்புத் தெய்வமே!
எம்மைப் பிரிந்து ஓராண்டு நிறைவில்
உங்கள் பாதங்களை வணங்கி நிற்கின்றோம்
தங்கள் பாசப் பிணைப்பு எப் பிறப்பில் எமக்கினிக்
கிடைக்குமென ஏங்கித் தவிக்கின்றோம் தாயே!

வேம்படி, காரைநகர். குடும்பத்தினர்.

(40055) (12.6.3)

## 31ஆம் நாள் மோட்சதீப ஆராதனை



அமரர்

**தேவராஜா ராஜ்பவான்**

பிறப்பு 02 ★ 10 ★ 1976

இறப்பு 16 ★ 10 ★ 2013

கடந்த 16.10.2013 புதன்கிழமை சிவபதமடைந்த எமது புதல்வன் தேவராஜா ராஜ்பவான் அவர்களின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம். நாளை (15.11.2013) வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் மோட்சதீப ஆராதனையும் மதிய போசன நிகழ்வும் நடைபெறும்.

கீரிமலை றோட், சண்டிலிப்பாய். குடும்பத்தினர்.

(39606)(6.3.4)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 26 . 03 . 1932

ஆண்டவன் அடியில் 15 . 10 . 2013

திருமதி

**திலகவதி குமாரசாமி**

கடந்த 15.10.2013 அன்று எம்மை விட்டுப் பிரிந்த எமது குடும்பத் தலைவி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு நேரிலும், தொலைபேசியிலும் அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், இன்று (14.11.2013) வியாழக்கிழமை லண்டனில் எமது இல்லத்தில் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(29696) (12.6)

## மரண அறிவித்தல்

திருமதி

**செபஸ்ரியானா பொன்றோஸ் மரியாம்பிள்ளை**



வவுனியாவைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் வளன்புரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செபஸ்ரியானா பொன்றோஸ் மரியாம்பிள்ளை 12.11.2013 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வென்ரகோன் - அக்கினேஸம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான துரைராசா, றெஜினா (அழகம்மா) மற்றும் அருட் சகோதரி மிரியம் (HFC) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற யோசவ் மரியாம்பிள்ளையின் அன்பு மனைவியும், புஸ்பா, றூபா (கனடா), வனஜா (ஜேர்மனி), சறோஜா, பெனற் ராஜ்குமார் (லண்டன்), சுசிலா (ஜேர்மனி), காலஞ்சென்ற லலிதா ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்ரன், இராஜரட்ணம், சாந்தகுமார், யேசுதாசன், மரினா, தேவபாலன் ஆகியோரின் மாமியாரும், ஆன்பிரியாந்தி, றொஜாந்தி, அஜந்தி, ஜொரான், அலன், அஞ்சலோ, சங்கீதா, கபில்றோய், துஷாரா, சுகன்யா, பிறண்டா, பிறயன், மெலினா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (14.11.2013) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வளன்புரம் புனித சூசையப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

981/6, வளன்புரம், முதலாம் ஒழுங்கை, கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

T.P: 021 745 1530
077 129 8118

(40071) (7.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

## மன்னாரில் ஆசிரியர்களை கௌரவிக்கும் நிகழ்வு



மன்னார், நவ.14

மன்னார் வலயக் கல்வி அலுவலகத்தின் ஏற்பாட்டில் ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மன்னார் சித்திவிநாயகர் இந்து தேசியப் பாடசாலையில் இடம்பெற்றது. ஆசிரியர்தின நிகழ்வுடன் இணைந்ததாக இந்தக் கௌரவம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மன்னார் வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எம். சியான் தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ் வின் போது 25 வருடங்க ளாக ஆசிரியர் சேவையில் உள்ள 108 ஆசிரியர்களும் 25 வருட அதிபர் சேவையைப் பூர்த்தி செய்த 23 பேரும் கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை 'பிரதீபா பிரபா' விருது பெற்ற அதிபர் மற்றும் ஆசிரியர்களும் விருது மற்றும் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக் கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வி, கலாசார, விளை யாட்டு, இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா, சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல், மன்னார் நகர சபைத் தவிசாளர் எஸ். ஞானப்பிரகாசம், வட மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி எஸ்.பிரிமூஸ் சிராய்வா ஆகியோர் கலந்து கொண்டு விருதுகளை வழங்கி வைத்தனர்.

இதன்போது மன்னார் வலயக் கல்வித் திணைக் களத்தினால் வெளியிட்டு வைக்கப்பட்ட மகுடம் சஞ்சிகையை அமைச்சர் த.குருகுலராசா வெளியிட்டு வைத்தார். இந்த நிகழ்வில் மன்னார் வலயக் கல்வித் திணைக்கள அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இதன்போது ஆசிரியர்களின் சிறப்பு நிகழ்ச்சிகளும் இடம்பெற்றமை குறிப்பிடத் தக்கது. (க-12)

## மாநாட்டு முத்திரை இன்று வெளியீடு

பொதுநலவாய மாநாட்டை முன்னிட்டு தபால் சேவைகள் அமைச்சு 5 ரூபா, 25 ரூபா பெறுமதியான இரண்டு முத்திரைகளையும் 30 ரூபா பெறுமதியான தபால் அட்டையொன்றையும் வெளியிடவுள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இன்று வியாழக்கிழமை காலை 9.45 மணிக்கு தபால் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமார துங்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பொதுநலவாய செயலர் கமலேஷ் சர்மா ஆகியோருக்கு முத்திரைகளையும் தபால் அட்டையையும் உத்தியோகபூர்வமாக கையளிப்பார். (ச)


## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
22
*
06
*
1982

உதிர்வு
14
*
11
*
2010

அமரர் **ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ்**
(றீகன்)

சிறுபாவம் செய்தவர் சிறுவயதில் இறைவனடி சேர்வர் - ஆனால்
உன்னை நாம் இழக்க பெரும்பாவம் செய்து விட்டோமா ? றீகா
நீ எம்மை விட்டுப் பிரிந்த அந்தக் கொடிய நாள்
இன்னமும் மறையாத சுவடுகளாய்.
காலம் போகப் போக கவலைகள் ஆறும் என்பர் பெரியோர்கள்
ஆனால் றீகா இன்னமும் உன்மேல் நாம் வைத்த அன்பின் ஆழத்தை
அறியாமல் முழிக்கின்றோம்... உன் ஆசை முகமும்
அன்புச்சிரிப்பும் வளர்ச்சியையும் கற்பனையில்
எண்ணித் துடிக்கின்றோம்
மூன்று ஆண்டுகள் உன் நினைவோடும்
வாழும் எமக்கு ஆறுதல் கூறவாவது
ஓர் புதிய விடி வெள்ளியாய் பிரகாசிப்பாயா ?

என்றும் உன்
நினைவுகளுடன் வாழும்
திரு. ஜஸ்ரின்
குடும்பத்தினர்.

புலவர் வீதி,
நவாலி வடக்கு மானிப்பாய்

(40112)(8.14)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அன்னை மடியில் 20.01.1933 ஆண்டவன் அடியில் 14.11.2012

அமரர்
**லில்லி ஜேற்றூட் பற்றிக்**

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன அம்மா
ஆறவில்லை எங்கள் துயரம்
ஆண்டொன்று கடந்தாலும் அம்மா
மாறாது உங்கள் நினைவலைகள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய
எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

என்றும் உங்கள் நினைவில்
பிள்ளைகள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். சகோதரர்கள்,
உற்றார். உறவினர்கள்.

14/1. புது வீதி, கொய்யாத்தோட்டம்.

(40102)(2.6.3)

## கண்ணீர் அஞ்சலி



நோயாளரின் அதி உச்ச
நலனே மூச்சாகவும்
நோயாளரை உயர்வு தாழ்வின்றி
நோய் நீக்குதலே
நோக்காகவும் கொண்டு
செயற்படும் செயல் வீரன் என்று -
தன் மகனைச் செவ்வி
ஒன்றில் முன்னிறுத்திய
யாழ்.போதனா வைத்தியசாலையின்
என்பு மூட்டு வைத்திய நிபுணர்
கணபதிப்பிள்ளை உமாபதியின்
அன்புத் தந்தை

**நாகராஜா கணபதிப்பிள்ளை**

இயற்கை எய்திய செய்தி கேட்டோம்
நெஞ்சு நெகிழ்ந்து எம்
கண்ணீரைக் காணிக்கையாகச் செலுத்துகின்றோம்.

**கந்தூர் விசுவலிங்கம் கந்தவேள்**
வடக்கு மாகாண இணைப்பாளர்,
நோயாளர் உரிமைக்கான மக்கள் இயக்கம்.

(சி/12270)
(2.3.6)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
25
*
09
*
1942



மறைவு
15
*
10
*
2013

திருமதி **தவமணிதேவி பொன்னுத்துரை**

கடந்த 15.10.2013 அன்று இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி தவமணிதேவி பொன்னுத்துரை அவர்களது 31 ஆம் நாள் அந்தியேட்டி ஆத்ம சாந்தி கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (14.11.2013) வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. இந்த கிரியைகளிலும் தொடர்ந்து இல்லத்தில் நடைபெறவுள்ளமதிய போசனத் திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். அத்துடன் அன்னாரின் இறுதிக் கிரியைகளின் போது சகல வகையிலும் உதவி புரிந்தோருக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இல. 45 ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்

(40112)(8.14)

## மரண அறிவித்தல்

**தம்பையா கந்தையா** (துரையப்பா)



சுழிபுரம் பத்திரகாளி கோயிலடியைப், பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா கந்தையா (துரையப்பா) நேற்று முன்தினம் (12.11.2013) செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - பூரணம் தம்பதியரின் மூத்த மகனும், வசாவிளானைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான கந்தையா - செல்லாச்சி தம்பதியரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ் சென்றவர்களான மயில் வாகனம், மாரிமுத்து - தங்கம்மா, வள்ளியம்மை, ஆகியோரின் சகோதரனும் கனகமணி, யோகம்மா, தவலாம்பிகை (பல் வைத்தியர் பிரதேச வைத்தியசாலை - யூரி) காலஞ்சென்ற தயாநிதி மற்றும் மகேந்திரகுமார் (ஆசிரியர்-வ.நெ.க.ம.வி.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சாம்பசிவம் மற்றும் பாலசுப்பிரமணியம், சந்திரகுமார் (ஆசிரியர்) காலஞ்சென்ற சாந்தினி ஆகியோரின் அன்பு மாமனும் பத்மதீபன் (நிர்வாகி விஸ்டம் கல்லூரி), பிரதீபன் (N.G.O), தர்சிகா (வேடுசா கம்பனி), ஸதீபா (யாழ் பல்கலைக்கழக மாணவி), சஞ்சீவ் (பேராதனை பொறியியல் துறை மாணவன்), சந்துஜன் (பொறியியல் பீட மாணவன்), பவித்திரன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2013) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 2 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக திருவடிநிலை மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பத்திரகாளி கோயிலடி சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்

(40114)(8.14)

## மரண அறிவித்தல்

திருமதி **கமலாம்பாள் இரத்தினக்குருக்கள்**



இந்தியாவை பிறப்பிடமாகவும் மாதகல், கொக்குவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கமலாம்பாள் இரத்தினக்குருக்கள் செவ்வாய்க் கிழமை (12.11.2013) இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினக்குருக்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வர ஐயர்-பார்வதி அம்மா தம்பதியரின் மூத்த மகளும், காலஞ்சென்ற லலிதாம்பாள், சாரதாம்பாள் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சிதம்பரநாதசர்மா சிவபாலக்குருக்கள் (கொழும்பு) ஆகியோரின் மைத்துனியும், பத்மநாத சர்மா (இந்தியா), இராமச்சத்திரசர்மா (கொக்குவில்), பிறேமா (கொக்குவில்), ஜெகதீஸ்வர சர்மா (நோர்வே), ஜெயமுரளிசர்மா (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தி, யோகேஸ்வரி, மார்க்கண்டேயசர்மா, தாட்சாயினி, ஸ்ரீலேகா ஆகியோரின் அன்பு மாமியாரும், அமிர்தகலா, வசந்தகலா, சுகந்தகலா, ஜெயந்தகலா, சசிரேகா, சசிகாந்தன் ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், கவிதா, விஜிதா, சுபா, பிரசாந், ரம்யா, சந்தியா, ஆரண்யா, பிரதீபன், பிறேம தீபன், பார்த்தீபன், றக்ஷனா, கீர்த்தனா, ஆத்மிகா, கீதையள் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மிருதுளா, பிரனுஷா, கரிகேஷ், ஸ்வஸ்திகா, சதுர்த்திகன், தீனசரண்யா, மிருதுஞ்ஜெய், றக்சிதா ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.11.2013) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

C.C.T.M.S லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

தகவல்:
**குடும்பத்தினர்.**
021 205 2667 , 021 321 8409
077 126 5666

(40103)(7.6.3)

**காணி விற்பனைக்கு**

பருத்தித்துறை யாழ்ப்பாணம் வீதியில் சாரையடியில் மதுவரித்திணைக்களத்தின் பின்புறமாக 100 மீற்றர் தொலைவில் 2 பரப்புக் காணி நன்னீர் குழாய்க் கிணற்றுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்:- 021 226 3071, 077 1267295

**தவறிவிட்டது**

கா.கனகரெத்தினம் (382490169V) என்பவரின் தே.அ.அட்டை சில ஆவணங்களுடன் தவறிவிட்டது.
தொடர்பு: 021 222 7769,
குமரன் போட்டோ, பலாலி றோட், யாழ்ப்பாணம். (40109) (2.6.3)

**உடனடி வேலை வாய்ப்பு**
**Innovage international (pvt) Ltd**

சர்வதேச ரீதியில் இயங்கிக் கொண்டிருக்கும் எமது Innovage நிறுவனம் இலங்கையில் 60 கிளைகளை ஸ்தாபித்துள்ளது. மீண்டும் இரு கிளைகளை வடக்கில் ஸ்தாபிக்க வுள்ளது. இதற்கு O/L or A/L படித்த ஆண்/பெண் இருபாலருக்கும் வேலை வழங்கவுள்ளது.

Customer service — Marketing executive
Asst. manager — Manager

100 வீத இலவச பயிற்சி

180 நாள்களுடன் கூடிய பயிற்சியும் நிரந்தர வேலையுடன் வெளிநாடு செல்லும் வாய்ப்பும் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் ஊக்குவிப்பு தொகை 10, 000– 15, 000 பயிற்சியின் பின் 30,000–50,000 சம்பளம் பெற்றுக் கொள்ளமுடியும். தங்குமிட வசதி உண்டு.

| யாழ்ப்பாணம்/ கிளிநொச்சி | வவுனியா/மன்னார் |
|---|---|
| 077 8920777 | 077 7009820 |
| 077 4216146 | 024 790 0171 |

# போக்குவரத்து சபையிடம் பழைய பஸ்களே அதிகம்

## கூறுகிறது போக்குவரத்து அமைச்சு



கொழும்பு,நவ.14

இலங்கை போக்குவரத்துச் சபையிடமுள்ள பஸ்களில் அதிகளவு பத்து வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பயன்படுத்தப்பட்டுப் பழுதடைந்து போயுள்ள பஸ்களே என்று போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இலங்கை போக்குவரத்துச் சபையிடம் 5,600 பஸ்கள் இருந்தாலும் அவற்றுள் 2,748 பஸ்கள் 10 வருடங்களையும் கடந்துள்ள பழைய பஸ்களே என்று அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த பஸ்களின் 'எஞ்ஜின்கள்' மூன்று தடவைகளாகவோ அல்லது அதற்கும் மேற்பட்ட தடவைகளில் புதுப்பிக்கப்பட்டிருந்தால், அந்த பஸ்களை போக்கு வரத்தில் ஈடுபடுத்துவதால் கிலோமீற்றர் ஒன்றுக்கு 6 ரூபா வரையிலான பராமரிப்புச் செலவினத்தை ஏற்கவேண்டி நேர்ந்துள்ளது என்று அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

கால அட்டவணைத் தேவைகளைப் பூரணப்படுத்த 7,000 பஸ்கள் வரை இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குத் தேவைப்படுகின்றன என்று அமைச்சு கூறியுள்ளது. (ச-22)

**காணி விற்பனைக்கு**

யாழ்.மாம்பழம் சந்தியில்
கண்டி வீதிக்கு அருகில்
3 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:-
077 075 7875.
Email :-
numoorthy@gmail.com (40081) (2.6.3)



# பொதுநலவாய சாசனம் வெளியீடு

கொழும்பு,நவ.14

2013 ஆம் ஆண்டுக்கான பொதுநலவாய சாசனம் நேற்றுமுன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.


பொதுநலவாய அமைப்பின் தலைவி இரண்டாவது எலிசபெத் மகாராணியின் கையொப்பத்துடன் இந்த அதிகாரபூர்வ பத்திரம் வெளியிடப்பட்டது.

ஜனநாயகம், மனித உரிமைகள், சர்வதேச சமாதானம் மற்றும் பாதுகாப்பு, சகிப்புத் தன்மை, மரியாதை மற்றும் புரிந்து ணர்வு, சுதந்திரத்தின் வெளிப்பாடு, அதிகாரப் பகிர்வு, சட்டவிதிமுறைகள், நல்லாட்சி, நிலையான அபிவிருத்தி, சுற்றாடல், பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி, உணவு மற்றும் வதிவிடம் தொடர்பான அணுகுமுறை, பாலின சமத்துவம், பொது நலவாயத்தில் இளைஞர்களுக்கான முக்கியத்துவம், சிறிய நாடுகளின் தேவைகள் குறித்து இனங்காணுதல், சிவில் சமூகத்தின் பங்களிப்பு, பாதிக்கப்பட்ட நாடுகளின் தேவைகளை அங்கீகரித்தல் போன்ற 16 விடயங்களை உள்ளடக்கியதாக கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

கையேட்டின் இறுதியில் பொதுநலவாய அமைப்பின்செயலர் கமலேஷ்சர்மா கையெழுத்திட்டுள்ளார். (ச)

# அரச நிறுவனங்களில் தேசிய கொடி ஏற்றுக

## இன்று முதல் 19 வரை



கொழும்பு,நவ.14

இலங்கையில் நடைபெறும் 23 ஆவது பொதுநலவாய அரச தலைவர்கள் மாநாட்டையும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவி ஏற்பின் 4 ஆவது வருட நிறைவு விழாவையும் முன்னிட்டு இன்று முதல் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நாடு முழுவதும் உள்ள சகல அரச நிறுவனங்களின் கட்டடங்களில் தேசிய கொடியேற்றுமாறு பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு கோரியுள்ளது.

இது தொடர்பில் பொது நிர் வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலர், சகல அமைச்சுக்களின் செயலாளர்கள் அடங்கலான சகல அரச நிறுவன தலைவர்களுக்கும் சுற்றறிக்கை ஊடாக அறிவித்துள்ளார்.

இதேபோன்று தனியார் நிறுவனங்கள், வீடுகள் ஆகியவற்றிலும் தேசியக் கொடி யேற்றுமாறு அரசு கோரியுள்ளது. (ச)

யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்

# அருள் ஒளி தர்ஷன மாலை நிகழ்வும் விசேட கார்த்திகை திருவிளக்கீட்டுப் பூஜை வழிபாட்டு நிகழ்வும்





டென்மார்க் ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் நிகழ்ந்த அற்புதம்



கண் திறந்து அருள் பாலித்த முருகன்



பூத்தவளே, புவனம் பதினான் கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்று ஓர் தெய்வம் வந்திப்பதே?



வரமருளிக் காத்தருளும் வராகி அம்பாளாக அவதாரமெடுத்து டென்மார்க் - பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையாரின் கார்திகை விளக்கீட்டு பூஜை யாழில் இடம்பெற. ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகி அம்மையாரின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

நடமாடும் தெய்வமாகவும், அன்பான தாயாகவும், நல்வழிகாட்டும் குருவாகவும் விழங்கும் அபிராமி உபாசகித் தாயாரின் திருவடி பூஜையில் கலந்துகொள்ளும் பக்தர்கள் அனைவருக்கும் நல்எண்ணமும், உள்ளத்தில் சாந்தியும், வாழ்க்கையில் நம்பிக்கையும், நோய் நொடியற்ற சுபீட்சமான வாழ்வும், தெய்வத்தின் அருட்கடாட்சமும் நிறைவாக கிட்டும்.
அம்மாவிடம் அருள்வாக்கு கேட்க விரும்பும் பக்தர்கள், அன்றைய தினம் நேரடியாகக் கேட்டுக் கொள்ளலாம்.

**இடம் :**
**திவ்வியஜீவன சங்க மண்டபம், சட்டநாதர் கோயலடி, நல்லூர்**
**காலம் : 16-11-2013**
**சனிக்கிழமை**
**காலை 10.00 மணி**

**திருவருள் நிகழ்வுகள்:**

- மங்கள வாத்தியக் கச்சேரிகள்
- தெய்வீக பஜனை நிகழ்வுகள்
- அவதார நிகழ்வுகளின் ஒளித்திரைக் காட்சி
- அன்னையாரின் திருவடிகளுக்குப் பாத பூஜை
- அன்னையாரின் திருக்கரங்களால் பூஜிக்கப்பெற்ற தேசிக்காய்,
- காவல் பொருட்கள், திருவருட் பிரசாதம் ஆகியன வழங்கப்படும்
- அன்னதான நிகழ்வும் இடம்பெறும்

அன்னையாரின் ஆலயத்தில் பூஜையில் வைத்துப் பூஜித்து தருவிக்கப்பட்ட காவல் தேசிக்காய்; திருவுருவப் படம், அம்மையாரின் திருவுருவம் பொறிக்கப்பட்ட பென்ரன்கள், திறப்புக் கோர்வைகள், அம்பாளுக்கு அபிஷேகம் செய்யப்பட்ட யாகநீர் போன்ற அருட் பொருட்களை மண்டபத்தில் பெற்று அம்பாளின் திருவருளை பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

| | ஆலயத் தொடர்புக்கு: | யாழ் தொடர்புக்கு: |
|---|---|---|
| Tel: | 0045 97180192, 0045 40413431 | 077 699 3861, 077 982 5004 |
| Fax: | 0045 97184192 | |

www.abiramiamman.dk

www.nisaart.com

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### 'சனல் - 4'

விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொதுநலவாய வர்த்தகப் பேரவைக் கூட்டத்தைவிட்டு ஜனாதிபதி வெளியே வந்த போது 'நான்' சனல் - 4 ஊடகவியலாளர் என்று ஜொனாதன் உரத்த குரலில் தெரிவித்தார். இதனையடுத்து ஜனாதிபதி அவருக்குக் கைலாகு கொடுத்தார்.

அந்தச் சந்தர்ப்பத்தில் சனல் - 4 ஊடகவியலாளர் ஜனாதிபதியிடம் போர்க் குற்றச் சாட்டுக்கள் குறித்து கேள்வியை எழுப்பினார். இதற்ககுப் பதிலளித்த ஜனாதிபதி அதனை பொருட்படுத்தவில்லை என்று கூறினார்.

அத்துடன் சனல் - 4 ஊடகவியலாளரை தேநீர் அருந்துமாறும் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பிலேயே விசாரணைக்கு உத்தர விடப்பட்டுள்ளது. (த-5)

### அரசு தடை

புறப்பட்டனர். முல்லைத்தீவில் இருந்தும் கிளிநொச்சியில் இருந்தும் புறப்பட்ட மக்களை அனுராதபுரம், மதவாச்சிப் பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து தடுத்து நிறுத்தினர்.

காணாமற்போனோரின் உறவுகள் பயணித்த பஸ்ஸின் சாரதியுடன் உரையாடிய இராணுவத்தினரும், பொலிஸாரும் கொழும்புக்கு செல்லமுடியாது என்று மிரட்டல் பாணியில் தெரிவித்துள்ளனர். அதற்கான காரணம் என்ன என்பதை அவர்கள் தெரிவிக்கவில்லை. ஒரு மணிநேரம் மதவாச்சிச் சந்தியில் மக்களைத் தடுத்து வைத்திருந்த பின்னர் அவர்களை பஸ்ஸுடன் மதவாச்சிப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். அங்கு சுமார் ஒரு மணிநேரம் வரை தடுத்து வைத்துப் பதிவுகள் மேற்கொண்ட பின்னர் மக்களை வவுனியாவுக்குத் திருப்பி அனுப்பினர்.

அதேபோன்று மன்னாரிலிருந்து கொழும்பு சென்ற காணாமற்போனோரின் உறவுகள் கட்டைஅடம்பன் பகுதியில் வைத்துப் பொலிஸாரினாலும் இராணுவத்தினராலும் தடுக்கப்பட்டனர். அவர்களை மீண்டும் மன்னாருக்கு திரும்பிச் செல்லுமாறு கூறப்பட்டது.

இதற்கு எதிராக மக்கள், மடு - தலைமன்னார் வீதியில் படுத்திருந்து போராட்டம் நடத்தினர். சுமார் மூன்று மணிநேரம் வரை போராட்டம் நடத்திய மக்களை வலுக்கட்டாயமாக இராணுவத்தினரும், பொலிஸாரும் அங்கிருந்து அப்புறப்படுத்தினர். இவ்வாறு திரும்பிச் சென்றவர்கள், மடுத்திருத் தலத்துக்குச் சென்று விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் வீடு திரும்பினர்.

மதவாச்சியில் வைத்து திருப்பி அனுப்பப்பட்ட காணாமற்போனோரின் உறவுகள் வவுனியா நகரசபை மைதானத்தில் ஒன்றுகூடிப் போராட்டம் நடத்தினர்.

போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அரசின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், காணாமற்போன தமது உறவுகளைக் கண்டுபிடித்துத் தருமாறும் அவர்கள் கோரினர். போராட்டத்தில் கலந்து கொண்ட ஒருவர் 'உதயனுக்கு' கருத்துத் தெரிவிக்கையில்,

"எங்களுக்கு பிள்ளைகள் தான் வேண்டும். எந்த நஷ்டஈடும் வேண்டாம். எங்கள் பிள்ளைகளைப் புனர் வாழ்வுக்கு உட்படுத்தியாவது விடுதலை செய்யுங்கள்.

நீங்கள் உலகம் முழுவதையும் கூட்டிச் சந்தோசமாக மாநாட்டை நடத்துகிறீர்கள். அதில் எங்கள் மனக்குறைகளையும் சொல்ல சந்தர்ப்பம் தாருங்கள். தென்பகுதி மக்கள் இங்குவரமுடியுமானால் நாம் ஏன் கொழும்பு செல்லமுடியாது.

நாங்கள் கொழும்புக்கு அரசை கவிழ்க்கும் நோக்கத் தோடோ அல்லது நாட்டைப் பிடிக்கும் நோக்கத் தோடோ செல்லவில்லை. எங்கள் பிள்ளைகள் வேண்டும் என்றுதான் கேட்கிறோம் - என்றார் கிளிநொச்சியைச் சேர்ந்த 43 வயதான தாயொருவர்.

(த-5-12-402)

### யாழ்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. அத்தோடு பல்கலைக்கழக மாணவர்களை விடுதியிலிருந்து வெளியேறுமாறும் அறிவிக்கப்பட்டிருந்தது. இது அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் பொதுவான ஒன்றாகும். ஆனால், யாழ். பல்கலைக்கழகத்துக்கு மட்டும் எதிர் வரும் டிசெம்பர் முதலாம் திகதி வரை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்தக் காலப் பகுதியில் மாணவர்கள் விடுதிகளில் தங்கியிருக்கவும் பல்கலைக்கழக வளாகத்துக்குள் நுழையவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இது மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளுக்குப் பெரும் தடையாக உள்ளது.

குறிப்பாக ஒரு சில பீடங்கள் இரண்டாம் அரையாண்டு கல்விச் செயற்பாடுகளை ஆரம்பித்த நிலையில் இந்த விடுமுறை அறிவிப்பு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தி உள்ளது. ஏற்கனவே தென்பகுதியில் உள்ள பல்கலைக்கழக செயற்பாடுகள் துரிதமாக இடம்பெற்றுவரும் நிலையில் இவ்வாறு தேவையற்ற விடுமுறைகளை அறிவிப்பது மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்குப் பாதிப்பாக அமைந்துள்ளது. இது எதிர்காலத்தில் மாணவர்களின் தகுதிகளையும் கேள்விக்குரியதாக்கி உள்ளது.

தமிழ் மக்களின் சொத்தமாக மதிக்கப்படும் யாழ்.பல்கலைக்கழக நிர்வாகச் செயற்பாடுகள் மாற்றம் அடைந்து வருவது கவலை அளித்து வருகிறது. இந்த விரும்பாத விடயங்களை தவிர்த்து ஏனைய பல்கலைக்கழகங்களைப் போல் யாழ். பல்கலைக் கழக கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க நிர்வாகத்தினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது.

(ஐ)

### வலி.வடக்கு

யாளர் பிரிவுகளும் மக்கள் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட வேண்டும் என்று கோரியும், அந்தப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடழிப்பு நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு வலியுறுத்தியும், அந்தப் பகுதி மக்களால் தொடர் உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் முன்றலில் ஆரம்பமான இந்தப் போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.

குழப்ப முயற்சி

போராட்டத்தின் முதலாவது நாளில் எந்தவித குழப்பங்களும் ஏற்படுத்தப்படாத போதும் நேற்று மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பருத்தித்துறை எரிஞ்ச அம்மன் கோயிலடிப் பகுதியிலிருந்து போராட்டத்துக்குப் புறப்பட்ட மக்கள் பயணம் செய்த பஸ் மீது முதலாம் கட்டைப் பகுதியில் வைத்து இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர். மூன்று மோட்டார் சைக்கிள்களில் முகத்தை மூடிய தலைக்கவசம் அணிந்து வந்தவர்களே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

ஆணி பொருத்திய கட்டைகளை பஸ் ரயர்களை நோக்கி எறிந்ததுடன், பஸ்ஸின் கண்ணாடி மீது கல்லெறிந்தும் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதேவேளை பருத்தித்துறையில் தங்கியுள்ள வலி. வடக்கு மக்களை அவர்களின் காணிகளைக் காண்பிக்க அழைத்துச் செல்வதாகக் கூறிய சீருடையினர் போராட்டத்துக்கு செல்ல விடாமல் தடுத்துள்ளனர்.

இந்த எதிர்ப்புக்களையும் மீறி நூற்றுக் கணக்கான மக்கள் போராட்டத்தில் அணி திரண்டனர்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களாக மாவை.சேனாதிராசா, ஈ.சரவணபவன், சி.சிறீதரன் ஆகியோரும் வடக்கு அமைச்சர்களான ப.சத்தியலிங்கம், த.குருகுலராஜா, மாகாணசபை உறுப்பினர்களான பா.கஜதீபன், த.சித்தார்த்தன், க.சர்வேஸ்வரன் ஆகியோரும் பிரதேசபைகளின் தவிசாளர்களும் இதில் கலந்து கொண்டனர். காலை 8.30 மணிக்கு ஆரம்பமான போராட்டம் மாலை 4 மணி வரை இடம்பெற்றது.

போராட்டம் முடிந்து பருத்தித்துறைக்கு மக்கள் செல்லும் போது அச்சுவேலி தம்பாலையில் வைத்து மீண்டும் பஸ்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில் பஸ்களின் கண்ணாடிகள் சேதமடைந்ததாகவும், ரயர்களுக்கு ஆணிகள் பொருத்திய கட்டை எறியப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்றைய தினமும் போராட்டம் தொடரும் என்று வலி. வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோ.சுகிர்தன் தெரிவித்தார். (த-5)

### முள்ளிவாய்

வுக்கு அமைய இடிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பொலிஸாருக்கும் அந்தப் பகுதி மக்களுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது. இதன் போது நினைவுச் சின்னத்தை அமைத்த உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் உள்ளிட்ட சிலர் கைது செய்யப்பட்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின் முன்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பூங்கா மற்றும் சுவர் என்பன வீதி அதிகார சபையின் நிலத்தை ஆக்கிரமித்திருப்பதாகத் தெரிவித்தே இந்த இடித்தழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று அதிகாலை 5 மணியிலிருந்து கனரக இயந்திரங்கள் மூலம் இந்த இடித்தழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அங்கு பெருமளவு பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதனால் அந்தப் பகுதியில் பதற்றநிலை தோன்றியது. முற்றத்தை அண்மித்த நெடுஞ்சாலையில் ஆயிரக் கணக்கில் மக்கள் குவிந்தனர். சுவர் தகர்க்கப்பட்ட பின்னர் அங்கே நிறுத்தப்பட்ட 'இது அரசுக்கு சொந்தமான இடம்' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட அறிவிப்பு பலகைகளை மக்கள் அகற்றினர். அதிகாரிகளால் அங்கே அமைக்கப்பட்டிருந்த தடுப்புக்களையும் மக்கள் தகர்த்தனர்.

இந்த நிலையில் பொலிஸாருக்கும் மக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதனால் பொது மக்களில் இருவர் காயமடைந்தனர். அத்துடன் பழ. நெடுமாறன் உள்ளிட்ட 20 பேர் வரை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (த-5)

### மக்ரே

தில் வைத்து ஆர்ப்பாட்டக் காரர்களால் தடுக்கப்பட்டுத் திருப்பி அனுப்பப்பட்டனர்.

கொழும்பிலிருந்து கிளிநொச்சி நோக்கி ரயிலில் வந்து கொண்டிருந்தனர் கெலும் மக்ரே அடங்கிய குழுவினர். இதன்போது அனுராதபுரத்தில் ரயிலை மறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் 'சனல் -4' குழுவினரைத் தொடர்ந்து பயணிக்கவிடாமல் திருப்பி அனுப்பினர்.

இலங்கையின் போர்க்குற்ற மீறல்கள் குறித்த ஆவணப் படங்களை வெளியிட்ட கெலும் மக்ரே பொது நலவாய மாநாட்டுக்குச் செய்தி சேகரிப்புக்காக இலங்கைக்கு வந்திருந்தார்.

இந்த நிலையில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரடியாகப் பார்வையிடுவதற்காக கொழும்பு - கிளிநொச்சி ரயிலில் அவர் நேற்றுக்காலை பயணம் செய்தார்.

குறித்த ரயிலை அனுராத புரத்தில் வழி மறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் அதனைத் தொடர்ந்து பயணிக்க விடாமல் தடுத்து நிறுத்தினர். சுமார் நூற்றுக்காணக்கான போராட்டக்காரர்கள் 'சனல் -4' குழுவினரைச் சூழ்ந்து, விடுதலைப் புலிகளின் பணத் துக்காகப் பணியாற்றுபவர்கள் என்று கோஷம் எழுப்பியதுடன் அவர்களைக் கொழும்புக்குத் திரும்பிச் செல்லுமாறும் வற்புறுத்தினர்.

போராட்டக்காரர்கள் இரண்டு மணி நேரமாகப் போராட்டம் நடத்திய போதும், பொலிஸார் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த நடவடிக்கை இலங்கை அரசின் திட்டமாகவே இருக்க வேண்டும் என்று 'சனல் -4' தெரிவித்துள்ளது.

தமது ஊடகவியலாளர்களை இலங்கை அரச புலனாய்வுப் பிரிவினர் பின் தொடர்ந்ததாகவும் 'சனல் - 4' குறிப்பிட்டுள்ளது.

கெலும் மக்ரே இலங்கைக்கு வருகை தந்த போது கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் அவருக்கு எதிராகப் போராட்டம் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(த-5)

### கமரூனின்

வருகை தந்தனர்.

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க வரும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் யாழ்ப்பாணத்துக்கு நாளை மாலை வருகை தரவுள்ளார். யாழ்ப்பாணத் துக்கு வரும் பிரதமர் யாழ். பொதுநூலகத்தில் வைத்து வடக்கு முதலமைச்சரை சந்திப்பார் அதன் பின்னர் வலி.வடக்கு மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையத்துக்கும் அவர் செல்வார். பிரதமரின் பயண ஒழுங்குகளை மேற்கொள்வதற்காகவும், அவரது பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிப்பதற்காகவும் பிரிட்டன்

பிரதமர் அலுவலக அதிகாரிகள் மற்றும் கொழும்பிலுள்ள பிரிட்டன் தூதரக அதி காரிகள் அடங்கிய குழுவினர் யாழ்ப்பாணத்துக்கு நேற்று வருகை தந்து நிலைமை களை ஆராய்ந்தனர்.

பிரதமர் பயணம் செய்யவுள்ள இடங்களுக்கு குறித்த குழுவினர் சென்றுள்ளனர்.

(த-5)

### வன்னியில்

ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்டப் பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் என். சுதாகரன் ஆகியோரை சந்தித்து பேசினர்.

இரணைமடு யாழ்ப்பாணம் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் தொடர்பாகவும் கிளிநொச்சி மாவட்டத்தின் குடிதண்ணீர் திட்டம் தொடர்பாகவும் இவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

தொடர்ந்து செஞ்சோலை சிறுவர் இல்லம், கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை ஆகியவற்றையும் இவர்கள் சென்று பார்வையிட்டனர்.

(த-6)

### புலிகளுக்கு

துக்கு வருகை தந்திருந்தார். இதன்போது போரில் உயிர் நீத்தவர்களுக்காக ஆனையிறவில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார். இதனைத் தமிழீழ விடுதலைப் புலிகளை நினைவு கூரும்செயற்பாடென இலங்கை அரசு விமர்சித்திருந்தது.

இந்த நிலையில் இதற்குப் பதிலளித்துள்ள கனேடிய அரசு, விடுதலைப் புலிகளின் சகல செயற்பாடுகளையும் நாம் அங்கீகரிக்கவில்லை. அவர்களைப் பயங்கரவாத அமைப்பாகக் கடந்த 2006 ஆம் ஆண்டிலிருந்து நாம் தடைவிதித்து வருகின்றோம்.

மாநாட்டில் கலந்துகொள்ளும் கனேடியப் பிரதிநிதியான தீபக் ஒப்ராய் வடக்கு சென்றிருந்தபோது வன்முறையில் பாதிக்கப்பட்ட இலங்கையின் அப்பாவி மக்களுக்கு அஞ்சலி செலுத்தும் வாய்ப்பாக அதனை பயன்படுத்தினார். இதனால் ஆனையிறவில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செய்தார்.


இலங்கையில் சகல மக்களும் உறுதியான சமாதான சூழ்நிலையில் கண்ணியத்துடன் வாழ வேண்டும் என்ற நிலைப்பாட்டில் கனடா உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## மென்பந்து கிரிக்கெட்

யாழ்ப்பாணம், நவ .14
கொம்மாந்தறை இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் 8 பேர் பங்கு பற்றும் 8 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட 'யாழ்ப்பாணச் சம்பியன்' மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை கம்பர் மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கு பற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் போட்டி நடைபெறும் மைதானத்துக்குச் சமூகம் தந்து பதிவுகளை மேற்கொண்டு போட்டியில் பங்கு பற்ற முடியும் என அறிவிக்கப் பட்டுள்ளது. (த-23)

# மன்னார் ஸ்ரார் ஈகிள்ஸ் கொழும்பு மோர்ஸை வீழ்த்தியது



யாழ்ப்பாணம், நவ.14
மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணிக்கும் கொழும்பு மோர்ஸ் கிரிக்கெட் அக்கடமி அணிக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டித் தொடரில் இறுதியாட்டத்தில் மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணி 27 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

அண்மையில் கொழும்பு மோர்ஸ், கிரிக்கெட் அக்கடமி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணியையெதிர்த்துகொழும்பு மோர்ஸ் கிரிக்கெட் அக்கடமி அணி மோதிக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மோர்ஸ் கிரிக்கெட் அக்கடமி அணி முதலில் மன்னார் பெரிய கடை ஈகிள்ஸ் அணியைத் துடுப்பெடுத்தாடும்படி பணித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய மன்னார் பெரியகடை ஸ்ரார் ஈகிள்ஸ் அணி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 130 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அமல் 21 ஓட்டங்களையும், திலக்ஷன் 18 ஓட்டங்களையும், டெல்ரன் 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கொழும்பு மோர்ஸ் கிரிக்கெட் அக்கடமி அணி சார்பில் அஹமட் 3 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 4 இலக்குகளை வீழ்த்தினர்.

131 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொழும்பு மோர்ஸ் கிரிக்கெட் அக்கடமி அணி 17:2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 103 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் ஜெனி 22 ஓட்டங்களையும், பசில் 17 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் மன்னார் பெரிய கடை ஸ்ரார் ஈகிள்ஸ் விளையாட்டுக் கழக அணி சார்பில் அமல் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 3 இலக்குகளையும், அஜிர் 4 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 2 இலக்குகளையும், ஜக்சன் 3 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 2 இலக்குகளையும் வீழ்த்தினர். (த-23)




இலங்கைக் கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் கிரிக்கெட் அணியின் பிரதம தேர்வாளரும், தபால் துறை பிரதி அமைச்சருமான சனத் ஜெயசூரிய நேற்று புதன்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரிக்குப் பயணம் மேற்கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கிரிக்கெட் நிலை தொடர்பாகக் கேட்டறிந்தார். (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், நவ .14
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் "யாழ்ப்பாணச் சமர்" உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

பி.பி. 3.45 மணி
நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் எதிர் மானிப்பாய் ரெட்றேஞ்சர்ஸ் விளையாட்டுக்கழகம்.

மாலை 4.45 மணி
இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்க ழகம் எதிர் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழகம். (த-23)

* * *

யாழ்ப்பாணம், நவ. 14
வவுனியா உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே பண்டாரவன்னியன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு வவுனியா வைரவபுளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள 4 ஆவது காலிறுதியாட்டத்தில் அல்ஜீரா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஈகிள்ஸ் விளையாட்டுக்கழகம் மோதும். (த-23)

## அரையிறுதிக்கு யுனிபைட்



யாழ்ப்பாணம், நவ .14
வவுனியா உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே பண்டாரவன்னியன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் யுனிபைட் அணி வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதிபெற்றுள்ளது.

வவுனியா வைரவபுளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற 2 ஆவது காலிறுதியாட்டத்தில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணி அபாரமாக ஆடியது. யுனிபைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சன்றசைன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் யுனிபைட் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த-23)

“-”
யுனிபைட் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சன்றசைன் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

## கராத்தேயில் வெற்றி பெற்றோர்



யாழ்ப்பாணம், நவ.14
இலங்கை கராத்தே சம்மேளனம் நடத்திய 2013 ஆம் ஆண்டுக்கான வட மாகாண கராத்தே சுற்றுப் போட்டியில் ஜே. கே. எம். ஓ. கழகத்தின் சார்பில் பங்கு பற்றி வெற்றியீட்டிய மாணவர்கள் விவரம்:-

6 வயது - 13 வயதுக்கு உட்பட்டோர்
காட்டா போட்டி
எஸ். காருண்யன் (தங்கப் பதக்கம்), ரீ. தேஜஸ் (தங்கப் பதக்கம்), கே. கிங்ஸ்ரன் (தங்கப்பதக்கம்), ரீ. பாவலன் (தங்கப்பதக்கம்), வை. அருண்குமார் (தங்கப்பதக்கம்), வை ரஞ்சித்குமார் (தங்கப்பதக்கம்), ரீ. தமிழ்மதி (தங்கப்பதக்கம்), ரீ. சுடர்ச் செழியன் (தங்கப்பதக்கம்), கே. அகிலன் (தங்கப்பதக்கம்), எச். கண்ணன் (தங்கப்பதக்கம்), ஜே. பிறின்ஸ்ரன் (தங்கப் பதக்கம்),

14 - 15 வயதுப் பிரிவு 2

காட்டாப் போட்டி- பெண்கள்
எச். டிலோஜனா (தங்கப் பதக்கம்)


15- 16 வயதுப்பிரிவு
காட்டாப் போட்டி பெண்கள்
எச். நர்மதா (தங்கப்பதக்கம்)

குமித்தே போட்டி பெண்கள்
எச். நர்மதா (வெண்கலப் பதக்கம்)

16- 17 வயதுப்பிரிவு 01
குமித்தே போட்டி
சஜீவன் (தங்கப்பதக்கம்), இ. தமிழ்வேந்தன் (வெள்ளிப் பதக்கம்)

காட்டாப்போட்டி
எஸ். நதீஸ் (வெள்ளிப் பதக்கம்)
பிரிவு 2
குமித்தே போட்டி
வினோஜன் (தங்கப்பதக்கம்)
பிரிவு 3
குமித்தே போட்டி
பி. சுயந்தன் (தங்கப்பதக்கம்)

20 - 21 வயதுப்பிரிவு 01
குமித்தே போட்டி
பிரஷாத் (வெள்ளிப் பதக்கம்)
பிரிவு 2
குமித்தே போட்டி
ய. தயாநிதி (தங்கப்பதக்கம்)
பிரிவு 3
குமித்தே போட்டி
ரி. தினேஷ்குமார் (தங்கப் பதக்கம்), ஒ. லக்ஸ்சன் (வெண்கலப்பதக்கம்)
கறுப்புப் பட்டி
பிரிவு 01
குமித்தே போட்டி
என். சதீஸ்கரன் (தங்கப் பதக்கம்)
பிரிவு 03
குமித்தே போட்டி
விஜயகணேஷ் (தங்கப் (த-17)



# சிறப்பான ஆட்டம் வேண்டும்

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாட்ட வீரர்கள் பொறுப்புடன் ஆட வேண்டுமென மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பயிற்றுவிப்பாளர் ஒற்றிஸ் கிப்சன் தெரிவித்துள்ளார். முதலாவது டெஸ்ட் போட்டி தொடர்பாகவே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, முதலாவது டெஸ்ட் போட்டியில் ஓர் இனிங்ஸ் மற்றும் 51 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்தது. 3 நாள்களுக்குள் இந்தத் தோல்வி பெறப்பட்டிருந்தது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள அவ்வணியின் பயிற்றுவிப்பாளர், ஒரு பயிற்றுவிப்பாளரால் குறிப்பிட்டளவு மாத்திரமே கதைக்க முடியும் எனக் குறிப்பிட்டார். 5 துடுப்பாட்ட வீரர்களைக் களமிறக்கும் போது, அந்த 5 துடுப்பாட்ட வீரர்களின் முக்கியத்துவம் தொடர்பாக வீரர்களுக்கு தெளிவாக்கப்படும் எனக் குறிப்பிட்டார்.

முதல் இன்னிங்ஸில் ஒன்றரை நாள்கள் துடுப்பெடுத்தாடவேண்டுமென எதிர்பார்க்கப்படும் போது, முன்னிலைத் துடுப்பாட்ட வீரர்கள் மோசமான துடுப்பாட்டப் பிரயோகங்களால் தங்களது இலக்கை இழந்தால் அணியால் போராட முடியாது போகும் என அவர் குறிப்பிட்டார்.

முதலாவது போட்டியில் இன்னிங்ஸொன்றில் ஒரு ரன் அவுட் ஆட்டமிழப்பும், சில தேவையற்ற ஆட்டமிழப்புகளும் ஏற்பட்டதாகக் குறிப்பிட்ட ஒற்றிஸ் கிப்சன், அது ஏனைய துடுப்பாட்ட வீரர்களுக்கும் அழுத்தத்தை ஏற்படுத்தும் எனக் குறிப்பிட்டார்.

இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பிக்கவுள்ள நிலையில், கடந்த போட்டியில் விடப்பட்ட தவறுகளிலிருந்து பாடங்களைக் கற்று, சிறப்பாகத் துடுப்பெடுத்தாட முயற்சிக்க வேண்டுமென ஒற்றிஸ் கிப்சன் மேலும் குறிப்பிட்டார். (த)



# சங்ககார சாதனை

வருடத்தில் குறைந்த ஒருநாள் சர்வதேச போட்டிகளின் மூலம் 1000 ஓட்டங்களை விரைவாக பெற்ற பெருமையை இலங்கையின் வீரர் குமார் சங்ககார பெற்றுள்ளார் .இதன்படி 19 போட்டிகளில் அவர் இந்த 1000 ஓட்டங்களை பெற்றுள்ளார்.

நியூசிலாந்து இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி. அம்பாந்தோட்டை சூரிய வெவ மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இந்தப் போட்டியில் விளையாடிய சங்ககார ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களை எடுத்தார். (த)

# பாகிஸ்தானுக்கு எதிராக சச்சின்

பாகிஸ்தான் அணிக்கு எதிரான ஆட்டம் என்றால் சச்சின் 200 சதவீத சக்தியை வெளிப்படுத்துவார் என்று இந்திய கிரிக்கெட் வீரர் ரெய்னா தெரிவித்தார்.

இந்தியக் கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கர், மும்பையில் இன்று ஆரம்பமாகவுள்ள டெஸ்ட் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இருந்து ஓய்வு பெற உள்ளார்.

இதை முன்னிட்டு இந்தியா ருடே' குழுமம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட சலாம் சச்சின்' என்ற நிகழ்ச்சியில் வீரர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர், சச்சினைப் பற்றிய தங்கள் கருத்துகளைப் பகிர்ந்தனர்.

இதில் பங்கேற்ற ரெய்னா கூறியது:

2011 உலகக் கிண்ணத் தொடரின் அரையிறுதி மொஹாலியில் நடந்தது. இதில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின. ஆட்டத்தைக் காண இரு நாட்டு பிரதமர்களும் வந்திருந்தனர். இரு அணி வீரர்களின் உடல் மொழியும் போராட்டத்துக்கு ஆயுத்த நிலையில் இருந்தது. நாங்கள் பதற்றத்துடன் இருந்தோம்.

நாணயச் சுழற்சியில் வென்றதும், "உலகக் கிண்ணத்தில் பாகிஸ்தானுக்கு எதிராக இதுவரை நாம் சிறப்பாக செயல்பட்டுள்ளோம். நமது துடுப்பாட்டம், பந்துவீச்சு மற்றும் களத்தடுப்பில் பலமாக உள்ளது. எனவே அனைவரும் அவரவர் செயலில் அக்கறை செலுத்தினால் போதும். நெருக்கடி சமயத்தில் அவர்கள் சொதப்பி விடுவர். எனவே, நாம் அவர்களுக்கு நெருக்கடி கொடுத்தால் எளிதில் வெற்றி பெறலாம்' என சச்சின் எங்களிடம் தெரிவித்தார். மற்றப்



போட்டிகளை விட, பாகிஸ்தா னுக்கு எதிராக சச்சின் 200 சதவீதம் சக்தியை வெளிப்படுத்துவார். இலங்கைக்கு எதிரான உலகக் கிண்ண இறுதிப் போட்டியின் போது, எங்கள் ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. ஓய்வு அறையில் வீரர்கள் அங்குமிங்கும் நடந்துகொண்டிருந்தனர்.

அப்போது அனைவரையும் இருக்கையில் அமர்ந்து ஆட்டத்தைக் கவனிக்குமாறு சச்சின் வற்புறுத்தினார். வெற்றி பெற்றதும் உணர்ச்சி பொங்க மைதானத்தில் வலம் வந்தார்.

இதில் இருந்து, இந்தியா கிண்ணம் வெல்ல வேண்டும் என்பதில் அவர் எவ்வளவு ஈடுபாட்டுடன் இருந்தார் என்பது புரியும் என்றார் ரெய்னா. (த)

**மற்ற போட்டிகளை விட, பாகிஸ்தானுக்கு எதிராக சச்சின் 200 சதவீதம் சக்தியை வெளிப்படுத்துவார்.**

# இந்திய அணியில் புதிய வரவு



இந்தியாவுக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கும், இந்திய அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான இந்தியக் குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் தவால் குல்கர்ணி என்ற புதிய வீரர் இணைக்கப்பட்டுள்ளார்.

மகேந்திரசிங் டோனி தலைமையில் 15 பேர் கொண்ட குழாமாக இது அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்டுள்ள குழாமில், அண்மையில் இடம்பெற்ற இந்திய, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில் இடம்பெற்ற வீரர்களான இஷாந்த் சர்மா, வினய் குமார் ஆகியோர் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

அந்தத் தொடரில் இலக்குகளை அதிகமாகக் கைப்பற்றத் தவறியிருந்த இவர்களிருவரும், அதிக ஓட்டங்களையும் விட்டுக் கொடுத்திருந்தனர். குறிப்பாக இஷாந்த் சர்மா பந்துப் பரிமாற்றம் ஒன்றில் 30 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து இந்திய அணி வெற்றிபெறும் நிலையிலிருந்த போட்டியை வெற்றியடைய விடாது மாற்றியிருந்தார்.

இவர்களிருவருக்கும் பதிலாக மோகித் சர்மா, தவால் குல்கர்ணி இருவரும் சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் தவால் குல்கர்ணி முதன் முறையாக இந்தியக் குழாமொன்றுக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

அறிவிக்கப்பட்டுள்ள குழாம்:
மகேந்திரசிங் டோனி, ஷீகர் தவான், றோகித் சர்மா, விராட் கோஹ்லி, யுவ்ராஜ் சிங், சுரேஷ் ரெய்னா, ரவீந்திர ஜடேஜா, இரவிச்சந்திரன் அஷ்வின், புவனேஷ்வர் குமார், மொஹமட் ஷமி, அம்பதி ராயுடு, அமித் மிஷ்ரா, ஜெய்தேவ் உனத்கட், தவால் குல்கர்ணி, மோகித் சர்மா. (த)

# மழையால் வென்றது நியூஸிலாந்து

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 2ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுள்ளது.



அம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20.4 பந்துப்பரிமாற்றங்களில் ஒரு ஒரு இலக்கை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இடி, மின்னல் காரணமாகப் போட்டி இடைநிறுத்தப்பட்டது. அதன் பின்னர் 23 பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டு தொடர்ந்து இடம்பெற்ற போது இலங்கை அணி ஒரு இலக்கை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது போட்டியைப் போன்று ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான திமுத் கருணாரத்ன விரைவாகவே ஆட்டமிழக்க, திலகரட்ண டில்ஷானும், குமார் சங்கக்காரவும் சிறந்த இணைப்பாட்டத்தைப் வெளிப்படுத்தினர்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக குமார் சங்கக்கார 59 பந்துகளில் 71 ஓட்டங்களையும், திலகரட்ண டில்ஷான் 72 பந்துகளில் 55 ஓட்டங்களையும் பெற்றனர்.

வீழ்த்தப்பட்ட இலக்கை நியூசிலாந்து அணியின் தலைவர் கைல் மில்ஸ் வீழ்த்தினார். டக் வோர்த் லூயிஸ் முறையில் 23 பந்து பரிமாற்றங்களில் 198 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 23 பந்துபரிமாற்றங்கள் நிறைவில் 6 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. 2 இலக்குகளை இழந்து 8 ஓட்டங்களுடனும், 3 இலக்குகளை இழந்து 34 ஓட்டங்களுடனும் காணப்பட்ட அவ் வணி சார்பாக 5ஆவது இலக்குக்காக 93 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தன. எனினும் இறுதி பந்துப்பரிமாற்றங்களில 20 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஹேரத் வீசிய அந்த பந்துப்பரிமாற்றத்தில் அதனை எதிர்கொண்ட நேதன் மக்கலம், அந்த பந்து பரிமாற்றத்தில் இறுதி 4 பந்துகளிலும் 20 ஓட்டங்களை விளாசி அவ்வணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக ரொம் லதம் 68 பந்துகளில் 86 ஓட்டங்களையும், லூக் றொஞ்சி 26 பந்துகளில் 49 ஓட்டங்களையும் நேதன் மக்கலம் 9 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக நுவான் குலசேகர 4 இலக்குகளையும், சச்சித்திர சேனநாயக்க 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் நாயகனாக ரொம் லதம் தெரிவானார்.

இத்தொடரின் முதலாவது போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்ட நிலையில், 2 போட்டிகளின் நிறைவில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

(400)

# கிளார்க் கடும் விசனம்

தீர்ப்பு மறுபரீசிலனைத் திட்டம் தொடர்பாக ஆஸ்ரேலிய அணியின் தலைவர் மைக்கல் கிளார்க் தனது விமர்சனங்களை முன்வைத்துள்ளார். இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படும் விதம் தொடர்பாகவே அவர் தனது விமர்சனங்களை முன்வைத்துள்ளார்.

மைதானத்தில் நடுவர் வழங்கும் தீர்ப்புகள் தொடர்பாக வீரர்களுக்கு மறுப்புக் காணப்படும் போது அதற்கெதிராக முறையிடும் திட்டமாக தீர்ப்பு மறுபரிசீலனைத் திட்டம் தற்போது காணப்படுகிறது.

இந்நிலையில் தனது புதிய புத்தகமான தி ஆஷஷ் டயரி என்பதில் தீர்ப்பு மறுபரிசீலனைத் திட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள மைக்கல் கிளார்க், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தீர்ப்பு மறுபரிசீலனைத் திட்ட வாய்ப்புக்கள் வழங்கப்படுவதற்கு தான் எதிர்ப்பினைத் தெரிவிப்பதாகவும், இந்தத் திட்டம் எல்லா வீரர்களுக்கும் பொதுவானதாகக் காணப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

கடந்த ஆஷஷ் தொடரில் அதிக சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்த இங்கிலாந்து வீரர் ஸ்ருவேர்ட் ப்ரோட் பந்தை அடித்து, அது இலக்கு காப்பாளரின் கையில் பட்டு, ஸ்லிப் வீரரிடம் சென்ற போதிலும், நடுவர் ஆட்டமிழப்பு இல்லை எனத் தெரிவிக்க, ஸ்ருவேர்ட் ப்ரோடும் மைதானத்தை வெளியேறாத நிலைமையை மைக்கல் கிளார்க் உதாரணமாகக் காட்டியுள்ளார்.

குறித்த சம்பவத்தின் போது நடுவர் தவறான தீர்ப்பை வழங்கியமையோ அல்லது ஸ்ருவேர்ட் ப்ரோட் மைதானத்தை விட்டு வெளியேறாமையோ தவறு அல்ல எனக் குறிப்பிட்டுள்ள மைக்கல் கிளார்க், அதன் போது குழப்பகரமான தீர்ப்பு மறுபரிசீலனைத் திட்டத்தின் விதிகள் காரணமாக மூன்றாவது நடுவர் சரியான தீர்ப்பை வழங்க முடியாது போனமையே பிரச்சினையானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

ஓர் அணித்தலைவராக தொழிநுட்பமென்பது அதிக சரியான முடிவுகளை வழங்குவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டும் என எண்ணுவதாகக் குறிப்பிட்ட மைக்கல் கிளார்க், எத்தனை முறை மீள்பரிசீலனை செய்ய முடியும் என்பது தொடர்பான கட்டுப்பாடு இருக்கக்கூடாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

(400)


## SLEASகருத்தரங்கு

வவுனியாவில் C.B.A கல்வி நிலையத்தில் (வைரவப்புளியங்குளம்) வெள்ளி (15/11) சனி, ஞாயிறு தினங்களில் காலை 8.30 தொடக்கம் 3.00 மணி வரை நடைபெறும். யாழ். மாவட்ட முன்னணி ஆசிரியர்களினால்


## ஐடியலின் கண்ணீர் அஞ்சலி



### சிவகுமார் ராகவன்

எமது நிறுவனத்தின் கணித ஆசிரியரான சி. தினேஸ் அவர்களின் அன்பு அண்ணா சிவகுமார் ராகவன் அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி !

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள் ஐடியல் அக்கடமி
யாழ்ப்பாணம் - சண்டிலிப்பாய்

## மரண அறிவித்தல்



### சிவகுமார் ராகவன்

மூளாயை பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமார் ராகவன் (Sewa Lanka) நேற்று (13.11.2013) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ் சென்ற சிவகுமார் மற்றும் சிவஞானம் தம்பதியரின் மூத்த மகனும், ரஜிதாவின் (விரிவுரையாளர், நுண்கலைப்பீடம் யாழ். பல்கலைக்கழகம்) அன்புக் கணவரும் வர்ஷிகா (ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்), சாத்விகா ஆகியோரின் அன்புத் தந்தையும், தினேஷ் (ஆசிரியர்,கிளி. ஞானிமடம் அ.த.க. பாடசாலை), மைதிலி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தம்பிராஜா செல்வரத்தினம் (மீசாலை) தம்பதியரின் மருமகனும் சசீலன் (கனடா), சோமிலன் (கனடா), சத்தியலிங்கம் (லண்டன்), தர்மினி (ஆசிரியர், யா/ கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (14.11.2013) வியாழக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் மூளாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் வீதி,
மூளாய்.

தகவல்: குடும்பத்தினர்.


BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்

Spoken English with Grammar 1 1/2 Months
(ஆங்கிலத்தில் பேசுவதற்கு 100% உத்தரவாதம்) (Quick Learning course)

Diploma in English 2 1/2 Months

* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention

Jaffna Branch:
No. 15, Sirambiyady Lane,
off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550

Vavuniya Branch:
No. 3, 6th Lane, Vairavarkovil Veethy,
Vairavarpuliiyamkulam,
Vavuniya. Tel: 024 324 5287

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

கிழமை நாட்கள், பிற்பகல் மற்றும் சனி, ஞாயிறு வகுப்புகளும் ஆரம்பிக்கப்படவுள்ளது
அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால், உங்களின் அனுமதிகளுக்கு முந்துங்கள்

Batch1: 16.11.2013
Batch2: 18.11.2013
Batch3: 23.11.2013
Batch4: 25.11.2013



Special OFFER for 2 Days
15,16 ம் திகதிகளில்

➤ HP LAPTOPS
➤ HP BRANDED PC
➤ HP PRINTERS

hp பிரதிநிதிகள் Nalin காட்சியறைக்கு வருகை தருகின்றனர் அவர்களை சந்தித்து HP தொடர்பான புதிய தொழில் நுட்பங்களையும் மேலதிக தகவல்களையும் பெற்றுக் கொள்ளலாம்

Authorized Business Partner

NALIN
Information Technologies (Pvt)Ltd

தொடர்புகளுக்கு:
195/4 Parameswara junction
Palaly road,Jaffna.
0212221121, 0777667975 Facebook/nalin it


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.